# MADRAS
# GOVERNMENT ORIENTAL SERIES

(*Published under the authority of the Government of Madras*)

*General Editor :*

**T. CHANDRASEKHARAN, M.A., L.T.,**

**Curator, Government Oriental Manuscripts Library, Madras**

**No. CXXV**

# சித்தாந்த விளக்கம்

# SIDDHĀNTA-VIḶAKKAM

Edited with Introduction
and Notes

By

Sri. Vidvān V. KUNCHITAPADAM
Dharumapura Ādīna Thamil Pulavar.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

1955

Price, Rs. 2–10–0.

S.V.—1A

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பொதுப் பதிப்பாசிரியர் முகவுரை .. .. .. | i—x |
| 2. | பதிப்புரை .. .. .. .. .. | xi—xiii |
| 3. | ஆங்கில முன்னுரை .. .. .. .. .. | xv—xxiii |
| 4. | தமிழ முன்னுரை .. .. .. .. .. | xxv—xlvii |
| 5. | சித்தாந்த விளக்கத்தில் மேற்கோளாகக் காட்டிய நூல்கள் .. | xlviii |
| 6. | சித்தாந்த விளக்க ஆராய்ச்சிக்கு மேற்கொண்ட நூல்கள் .. | xlix |
| 7. | சித்தாந்த விளக்கம் அடிக்குறிப்புடன் .. .. .. | 1—26 |
| 8. | மேற்கோட் செய்யுளுரை அருஞ்சொல் முதலியன.. .. | 27—52 |

# INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important Manuscripts Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10, Education, dated 4th April 1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are the members of the Committee :—

1 Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.
2 Sri R. P. Sethu Pillai, B.A., B.L.
3 Sri C. M. Ramachandra Chettiar, B.A., B.L.
4 Sri R. Krishnamoorthy (*Kalki*).
5 Dr. N. Venkataramanayya, M.A., PH.D.
6 Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7 Sri V. Prabhakara Sastri.
8 Sri N. Venkata Rao, M.A.
9 Sri H. Sesha Ayyangar.
10 Sri Masti Venkatesa Ayyangar.
11 Sri M. Mariappa Bhat, M.A., L.T.
12 Dr. C. Achyuta Menon, B.A., PH.D.
13 Dr. C. Kunhan Raja, M.A., D. PHIL.
14 Dr. A. Sankaran, M.A., PH.D., L.T.
15 Sri Polakam Rama Sastri.
16 Sri S. K. Ramanatha Sastri.
17 Dr. M. Abdul Haq, M.A., D. PHIL. (Oxon.).

18 Sri Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19 Sri P. D. Joshi.
20 Sri S. Gopalan, B.A., B.L.
21 Sri T. Chandrasekharan, M.A., L.T.

With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and D. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950–51 also to which the following gentlemen were added in Government Memo. No. 7297-E/50-3, Education, dated 19th May 1950, and Government Memo. No. 15875-E/50-4, Education, dated 7th September 1950 :—

1 Dr. A. Chidambaranatha Chettiar, M.A., PH.D.
2 Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar.-at-Law.
3 Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B. & C.M.
4 Dr. Muhammad Hussain Nainar, M.A., PH.D.
5 Sri T. V. Subba Rao, B.A., B.L.
6 Principal, College of Indian Medicine, Madras.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannaḍa, Māḷayāḷam, Mahrāṭhi and Islamic Languages. They met during the month of May 1949, at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication during 1949–50 :—

---

## "A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

### TAMIL.

1 Kappal Śāttiram.
2 Anubhava Vaiddiya Muṟai.
3 Āttānakōlāhalam.
4 Upadēśa Kāṇḍam.
5 Cōḻaṉ Pūrva Paṭṭayam.
6 Sivajñāna Dīpam,

## TELUGU.

1 Auṣadha Yōgamulu.
2 Vaidya Nighaṇṭuvu.
3 Dhanurvidyā Vilāsamu.
4 Yōga Darśana Viṣayamu.
5 Khaḍga Lakṣaṇa Śirōmaṇi.

## SANSKRIT.

1 Viṣanārāyaṇīyam (Tantrasārasaṅgraha).
2 Bhārgava Nāḍikā.
3 Hariharacaturaṅgam.
4 Brahmasūtravṛtti—Mitākṣarā.
5 Nyāyasiddhānta Tattvāmṛtam.

## MALAYĀḶAM.

1 Garbha Cikitsā.
2 (*a*) Vāstulakṣaṇam.
(*b*) Śilpaviṣayam.
3 Mahāsāram.
4 Kaṇakkusāram.
5 Kriyākramam.
6 Kaṇakkusāram (Bālāprabōdham).

## KANNAḌA.

1 Lōkōpakāram.
2 Raṭṭamatam.
3 Aśvaśāstram.
4 Vividha Vaidya Viṣayagaḷu.
5 Saṅgītaratnākara.
6 Sūpaśāstra.

## ISLAMIC LANGUAGES.

1 Jamil-Al-Ashya.
2 Tibb-E-Faridi.
3 Tahqiq-Al-Buhran.
4 Safinat-Al-Naajt.

## "B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY, TANJORE.

### TAMIL.

1 Śarabhendra Vaidya Muṟai (Diabetes).
2 Do. (Eyes).
3 Do. (Anaemia).
4 Do. (Svāsakāsam).
5 Agastiyar 2000.
6 Koṅkaṇarśarakku Vaippu.
7 Tiruccirrambalakkovaiyār with Padavurai.
8 Tāḷasamudram.
9 Bharatanāṭyam.
10 (a) Paṇḍikēḷi Vilāsa Nāṭakam.
(b) Purūrava Cakravarti Nāṭakam.
(c) Madana Sundara Vilāsa Nāṭakam.
11 Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library.
12 Rāmaiyan Ammāṉai.

### TELUGU.

1 Kāmandakanītisāramu.
2 Tāladaśāprāṇapradīpikā.
3 Raghunātha Nāyakābhyudayamu.
4 Rājagōpāla Vilāsamu.
5 Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju.

### MAHRĀṬHI.

1 Nāṭyaśāstra Saṅgraha.
2 (a) Book of Knowledge.
(b) Folk Songs.
(c) Dora Darun Veṇi Paddhati.
(d) Aśvasa Caṭula Dumani.
3 (a) Pratāpasiṁhendra Vijaya Prabandha.
(b) Śarabhendra Tīrthāvali.
(c) Lāvaṇi.
4 Devendra Kuravañji.
5 Bhakta Vilāsa.
6 Śloka Baddha Rāmāyaṇa.

### SANSKRIT.

1 Aśvaśāstra with Tricolour illustrations.
2 Rājamṛgāṅka.
3 Ānandakandam.
4 Āyurvedamahodadhi.
5 Gīta Govinda Abhinaya.
6 (*a*) Coḷacampū.
 (*b*) Sahendra Vilāsa.
7 Dharmākūtam—Sundara Kāṇḍa.
8 Jātakasāra.
9 Viṣṇutattvanirṇaya Vyākhyā.
10 Saṅgīta Darpaṇa.
11 Bījapallava.

During 1950, only the Sub-committee for TAMIL, TELUGU and KANNADA met in the month of July 1950 at Madras.

The following books were taken up for publication in the various languages during 1950–51 :—

### TAMIL.

1 Daṭcanāyaṉār—Vaiddiya—Aṭṭavaṇai.
2 Vaiddiyak Kaḷañciyam.
3 Anubhava Vaiddiya Muṟai, Vol. 3.

### TELUGU.

1 Śaivācārasaṅgrahamu.
2 Anubhava Vaidyam.
3 Abhinayadarpaṇamu.

### SANSKRIT.

1 Ārogyacintāmaṇi.
2 Tattvasāra with Ratnasāriṇī.
3 Sūtrārthāmṛta Lahari.
4 (*a*) Ratnadīpikā.
 (*b*) Ratnaśāstra.

### MALAYĀḶAM.

1 Aśvacikitsā.
2 Phalasārasamuccaya.

## KANNAḌA.

1 Vaidya Sāra Saṅgraha.

During 1951–52, only the Sub-committees for TAMIL, TELUGU and MALAYĀLAM met in the month of April 1951. The following books were taken up for publication in the various languages :—

## TAMIL.

1 Saptariṣināḍi.
2 Karnāṭakarājākkaḷ Savistāra Caritram.
3 Bharata Siddhāntam.
4 Piḷḷaippiṇivākaṭam.
5 Anubhava Vaiddiyam, Vol. 4.
6 Māṭṭuvākaṭam.

## TELUGU.

1 Brahmavidyā Sudhārṇavamu.
2 Rāgatāḷacintāmaṇi.
3 Vaidyacintāmaṇi.
4 Kumārarāmuni Kathā.
5 Kāṭamarāju Kathā.

## SANSKRIT.

1 Devakeralam—Candrakalā Nāḍi.
2 Pātañjala Yogasūtra Bhāṣya Vivaraṇa by Sri Śaṅkarācārya.

## MALAYĀLAM.

1 Kiḷivaṇḍusaṁvādam.
2 Advaita Vēdāntam.
3 Bārhaspatyasūtra with Malayālam commentary.
4 Karaṇapaddhati.

## KANNAḌA.

1 Sadgururahasyam.

## ARABIC.

1 Shawakil-Ụl-Hur.

In Government Memorandum No. 18947-E/52-2, Education, dated 7th August 1952, a few changes were made in the personnel of the Expert Committee.

The names of the following members were deleted :—

1 Sri V. Prabhakara Sastri.
2 Sri C. Achyuta Menon.
3 Sri M. Abdul Haq.

The following gentlemen were included as members of the Expert Committee :—

1 Sri. M. Somasekhara Sarma.
2 Dr. V. Raghavan, M.A., PH.D.
3 Dr. R. Nagaraja Sarma, M.A., PH.D.
4 Dr. S. Krishnan Nayar, M.A., PH.D.
5 Prof. S. A. Bukhari, M.A.

The Sub-Committee for all the languages met during September 1952 for selecting manuscripts for publication.

The following manuscripts were taken up for publication during 1952–53 :—

## TAMIL.

1 Saptariṣināḍi, Vol. II—VIRUṢABHA LAGNA.
2 Temple Inscriptions of South India, Vol. I.

## TELUGU.

1 Sārīramu.

## KANNAḌA.

1 Bijjalarāya Carite.
2 Vaidyasāra Saṅgraha, Vol. II.

## MALAYĀLAM.

1 Vidyamādhavīyam.
2 Sarvasādhāraṇa Cikitsā.
3 Viṣa Cikitsā and Viṣappaṭṭusāram.

## SANSKRIT.

1 Nyāyaratnam with the commentary Dyutimālikā.
2 Cikitsātilakam.
3 Nṛttaratnāvali.

The Government in their G.O. Ms. No. 1820, Education, dated 4th August 1952, sanctioned a grant of Rs. 9,000 to the Dr. V. Swaminatha Aiyar's Tamil Library, Adyar, towards the publication of the following manuscripts as part of the "Madras Government Oriental Series":—

1 Tiruvācaka Vyākhyānam.
2 Mahabharata Cūḍāmaṇi.

The following books were taken up for publication during 1953–54:—

TAMIL.

1 Saptariṣināḍi, Vol. III, Mithuna Lagna.
2 Temple Inscriptions of South India, Vol. II.

TELUGU.

1 Bharatasārasaṅgraha.

KANNAḌA.

1 Manmathavijaya.

MALAYALAM.

1 Jñānapiyūṣam.

SANSKRIT.

1 Daivajñābharana.

PERSIAN,

1 Baharisthan Sukhan.

Out of the seven books taken up for publication five books excepting one in Telugu and one in Persian were printed during the year.

The following books were taken up for publication during 1954–55:—

TAMIL.

1 Piḷḷaipiṇivākaṭam (on infantile disease), Vol. II.
2 Saptariṣināḍi, Vol. IV, Kataka Lagna.
3 Pēurur Kōrvai.
4 Siddhāntaviḷakkam.
5 Sāmudrikalaksanam.
6 Ānandaraṅga Kovai.

## KANNAḌA.

1 Abhidhānaratnamālā.
2 Vyavahāragaṇita.

## MALAYĀḶAM.

1 Vētāḷapañcavims'ati.
2 Yuddhiṣtiravijayam.

## SANSKṚIT.

1 Ābhoga.
2 Aumāpatam.
3 Mahabhaskarīyam.

## PERSIAN.

1 Nuskha-e-Shajahani.

On account of the separation of the Andhra State, the printing of the Telugu manuscripts could be undertaken only in consultation with that State. But as the concurrence of that State has not been received so far, no work in Telugu has been taken up for publication although three works, namely, Bobbiliyuddhakathā, Haider Caritramu and Ārya-bhaṭīya Siddhānta Vyākhyā were selected for publication during 1954–55.

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next few years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various Presses that have co-operated

in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

The present edition of the SIDDHĀNTA VIḶAKKAM is based upon a single palm-leaf manuscript described under R. No. 143 (c) 10-3/8 × 1-1/8 inches; lines 6 in a page. The condition of the work is good. This was presented to the library 1914—15 by Kadir Baig Sahib, Triplicane, Madras. This is a treatise on the Śaiva Siddhānta explaining fully the meaning and the distinguishing characteristics of paśu, pati and pāśa.

MADRAS,
*17th August 1954.*

T. CHANDRASEKHARAN,
*General Editor,*
*Madras Government Oriental Series.*

ஓம்

# சித்தாந்த விளக்கம்

## பதிப்புரை

'சித்தாந்த விளக்கம்' என்னும் பெயருடைய இந்நூல் சைவ சித்தாந்த சாத்திரக்கருத்தை உரை நடையில் விளக்குவது. இதில் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களைப்பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

இப்புத்தகத்தின் கையெழுத்துப் "படி" ஒன்றைச் சென்னை அரசாங்கக் கீழ்த்திசைக்கலை ஏட்டுச்சுவடி நூல் நிலையத் தலைவரவர்கள் 1954-ம்ஆண்டு ஆகஸ்ட்டுமீ 30உயில் அனுப்பிவைத்து இதனைப் பரிசோதித்து விரைவில் அச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று ஆணைதந்தார்கள். சாத்திர ஆராய்ச்சி பற்றிய நூலை அச்சிடுவது எளிதான காரியமன்று; அதற்குத் தெளிந்த சாத்திர அநுபவஞானம் வேண்டும். திருமுறைகளையும், சிந்தாந்த சாத்திரங்களையும் சிறிது பயின்ற காரணத்தாலும், அவற்றின்பாலுள்ள ஆர்வத்தாலும் இப்பணியை விருப்புடன் ஏற்றுக்கொண்டேன்.

இச் சுவடியை ஒருமுறை படித்துப்பார்த்தபோது சில சொற்றொடர்கள் விடப்பெற்றும், பல சொற்கள் உருமாறியும், எழுத்துப் பிழைகள் மலிந்துங் காணப்பெற்றன. அவற்றை யெல்லாம் ஓரளவு திருத்தி யெடுத்துக்கொண்டு சென்று, திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனத்தின் இருபத்தைந்தாம் பட்டமாக எழுந்தருளி அருட் செங்கோல் செலுத்திவரும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடம் காட்டி, இதை ஒத்த ஏட்டுச் சுவடி ஆதீன நூல் நிலையத்தில் இருந்தால் அளித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டேன். நூல் நிலையத்தில் ஆராய்ந்து பார்த்ததில் இத்தகைய சுவடி இல்லை. ஆயினும் ஓர் ஐயம் நீங்கிற்று. அவ்வையமாவது சித்தாந்த விளக்கச் சுவடியின் இறுதியில் "சிவமெய்ஞ்ஞான கந்தப்ப தேசிகன் திருவடி வாழ்க—1870-ம்ஆண்டு அக்டோபர்மீ கடுஉ—குந்தம் பாக்கம் சுப்பராய முதலி" என்று எழுதப்பெற்றிருந்தது. இங்கே குறிக்கப் பெற்ற 'சிவமெய்ஞ்ஞான கந்தப்ப தேசிகர்' என்ற பெரியார் முன்பு தருமபுர ஆதீனத்தில் 14-ம் பட்டமாக வீற்றிருந்த கந்தப்ப தேசிகராக இருக்கலாமோ என்பதே. அதுபற்றி வினவியபோது அங்குள்ள சான்றோர்கள் நமது தருமையாதீன கந்தப்ப தேசிகருக்கு சிவமெய்ஞ்ஞான என்ற அடைமொழி கிடையாது; இவ்வடைமொழி வீர சைவ குருபரம்பரைக்கே உண்டு என்று தெரிவித்தார்கள். இதனால் இச் சிவமெய்ஞ்ஞான கந்தப்ப தேசிகர் தருமை யாதீனத்தைச் சேர்ந்தவரல்ல என்பது தெளிவாயிற்று. அதன் பிறகு திருவாவடுதுறை ஆதீனத்தில் வெளியான புத்தகங்களில் இச் சித்தாந்த விளக்கம் வந்திருக்கிறதா என்று வரவழைத்துப் பார்த்தேன். அவற்றிலும் இச் சித்தாந்த விளக்கம் இல்லை.

பின்னர், சித்தாந்த சாத்திரங்கள் அவற்றின் உரை முதலியவற்றை வைத்துக்கொண்டு ஒப்புநோக்கித் திருத்தஞ் செய்து சித்தாந்தப் பேராசிரியர் உயர் திரு. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்களிடம் ஒருமுறை

படித்துக்காட்டிச் சில ஐயங்கள் தீரப்பெற்றேன். மற்றும் சித்தாந்தப் பேரறிஞர் உயர் திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியாரவர்களிடம் படித்துக் காட்டியதில் அவர்கள் அனுபவத்தால் சில சொற்கள் நல்லுருவம் பெற்றன. மேலும் சில மேற்கோள்களும் கூறினார்கள். இவ்வாராய்ச்சிக்கு உதவி செய்த இப்பெரியார்கட்கெல்லாம் எனது உளமார்ந்த நன்றியும் வணக்கமும் உரியதாகுக.

இந்நூலை ஆராய்ந்து குறிப்புரை முதலியன எழுதுவதற்குப் பெரிதும் உதவியாயிருந்த "சித்தாந்தப் படவிளக்கம்" என்னும் அரிய நூலை இயற்றிய என் சித்தாந்த முதற் குருவாகிய ஸ்ரீலஸ்ரீ வாலையானந்த அடிகட்கும், சித்தியார், சிவப்பிரகாச உரையாசிரியராகிய உயர் திரு. மு. திருவிளங்கம் அவர்கட்கும் எனது நன்றியறிதலோடுகூடிய வணக்கம் என்றும் உரியதாகுக.

சித்தாந்த விளக்கம் என்னும் பெயருடைய இந்நூல் சித்தாந்த நுட்பங்கள் முழுவதையுங் கூறிவிடவில்லை. இது முப்பொருளைப்பற்றிக்கூறும் ஒரு பாலபாடமென்றே கூறலாம். செய்யுள் வடிவாக அமைந்துள்ள சைவ சித்தாந்த சாத்திர நூல்களைப்படித்து அறியும் ஆற்றலில்லாதவர்கள் உரை நடையில் அமைந்துள்ள இதனைப்படித்து ஓரளவு பயனடையலாம். இதைப் படித்தால் செய்யுள் நூல்களாகிய சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலிய சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கற்பதற்கு ஆர்வமுண்டாகும். சாத்திர நூல்களையெல்லாம் அவற்றை முறையாகக் கற்றுணர்ந்த ஆசிரியர் வாயிலாகக் கற்றால்தான் நன்கு விளங்கும். இப்புத்தகத்தின் இறுதியில் எழுதியிருப்பதைக்கொண்டு கந்தப்ப தேசிகரிடம் சித்தாந்த பாடங்கேட்ட சுப்பராய முதலியார் எழுதிவைத்த சுவடியாயிருக்கலாமென்று தெரிகிறது. வேறு விபரந்தெரியவில்லை.

சித்தாந்தக் கருத்துக்களை ஆங்கிலங் கற்ற அறிஞர்களும் படித்து மகிழ்வதற்காக ஓர் ஆங்கில முகவுரை எழுதிச் சேர்க்கப்பெற்றிருப்பதோடு தமிழ் முன்னுரை யொன்றும் சற்று விரிவாக எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது. இது உரை நடை நூலேயாயினும் சாத்திரக் கருத்துக்களை விளக்கும் மரபுச் சொற்கள் சற்றுக்கடினமாயிருத்தலால், அச் சொற்களுக்கு அடிக்குறிப்பில் பொருள் விளக்கியும், மேற்கோள், ஒப்புமைப் பகுதியாகச் செய்யுட்களை எடுத்துக்காட்டியிருப்பதோடு, அச் செய்யுட்களுக்கெல்லாம் இறுதியில் பொருள் எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளது. இது கற்பார்க்குப் பயன்படு மென்று நம்புகிறேன்.

இந்த ஞானநூலை ஆராய்ந்து அச்சிடப்பணித்த கீழ்த்திசைக்கலை ஏட்டுச் சுவடி நூல் நிலையத் தலைவர் உயர் திரு. T. சந்திரசேகரன் M.A., L.T., அவர்கட்கும், கல்வியிலாகாத் தலைவரவர்கட்கும் எனது நன்றியறிதலையும் வணக்கத்தையுந் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உரிமை ஆட்சி நடைபெறும் இந்நாளிலே சென்னை அரசாங்கத்தார் பழம் பெருமை வாய்ந்த கலைச்செல்வங்களை யெல்லாந் தேடித்தொகுத்துப் பாது காத்து அச்சிட்டு வெளிப்படுத்துஞ் செயல் நம் நாட்டு மக்களால் பெரிதும் போற்றத்தகுந்த சீரிய செயலாகும். சிறப்பாக அரசாங்கத்தாருக்கு எனது நன்றியையும் வணக்கத்தையுந் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

> "சென்றிடு வீரெட்டுத்—திக்கும்—கலைச்
> செல்வங்கள் யாவையுங் கொண்டிங்கு சேர்ப்பீர்."
>
> —பாரதியார்.

குற்றங் குறைகளை அறிஞர்கள் பொறுப்பார்களாக!

இங்ஙனம்,

வை. குஞ்சிதபாதம்.

# PREFACE

This book entitled 'Siddhānta Viḷakkam,' is primarily an introductory, reader on the three basic principles of the Śaiva Siddhānta philosophy, viz., Pati, Paśu and Pāśam. Written in simple prose, the author, whose name and date is unknown, has attempted to elucidate the fundamentals of this system of philosophy so as to be read and understood by a common man.

A simple and concise statement of the nature of Paśu, Pati and Pāśam has been given in Śivaprakāśam. These passages are of great value in understanding the essential data of the Śaiva Siddhānta Philosophy. They have been rendered in English by a translator as follows :—

PAŚU :—" The seers of truth say that souls are countless, eternal and sunk in spiritual darkness. By the grace of God, they take up bodies suited to work out their twofold (Good and evil) karmic tendencies, and are born as higher and lower beings. In the course of experiencing the endless fruits of their karma, they commit acts of merit and sin, and have births and deaths. When the season arrives for the dissolution of the dark bond affecting the soul, the light of grace dawns on the inmost soul and darkness is dispelled. Then the good free souls reach the feet of Providence."

PATI :—" It is the subject of all the vēdas and the Āgamas dealing with multifold sciences to expound the concepts of God, bound souls and bonds (Pati, Paśu and Pāśam). Of these God head is the highest. It is beyond the material distinction of form and no form ; It has no finite quality or mark ; It is one and eternal. It is the energiser of the intelligence of countless souls. It is changeless and infinite ; Its form is bliss. It is above the reach of the perverted ; but It is the final goal of the right minded ; It manifests itself in the smallest of the small and is the biggest of the big ; It is the self-effulgent : It is named Sivam by men of clear vision."

PĀSAM :—Bonds. " The original Bond of darkness (Āṇavam) is one eternal entity with countless powers which lose their efficacy at the end of their respective time-limits. Compared with the stupefying force of this bond, external darkness may be said to be light. It is like the green rust on copper and fully hides the knowing faculty of the

soul. The screening power of God which operates behind this bond to loosen and finally dissolve, it is also formally styled one kind of bond. When the original bond is dissolved, this divine power shines forth in great grace and quickens the progress of the freed soul towards the feet of the Supreme Being, whose will, love, and power are symbolised by the Serpent, the Moon, and the Gaṅga on His Braids."

" Experts well versed in rare Agamic sciences say that by the loving will of the Supreme Ŝivam beyond thought, the real nādam (the root of sound) is evolved from pure Māyā ; and from nādam the real bindu emanates. From it the brightening real Sadāŝivam takes its rise and gives birth to 'Ìsvaram,' from which is developed Śuddhaviddai. All these five reals are respectively ruled by five agents of divine power who stay in and take their names from them. Bindu stated to be already evolved from Nādam first unfailingly gives rise to the world which develops into form beginning with the subtlest."

" The Impure Māyā is a formless, motionless, unintelligent, eternal entity from which are evolved reals of diverse qualities and functions, and from combinations of which spring up the four categories (Tanu-Karana-Bhuvana-Bhōgam) beginning with the bodies. It permeates all its developments and causes perversion to carmic souls. During final dissolution for all tatwas, it is the basic resort of all souls and itself a bond of the souls. All these processes in it are due to the energising of it by the gracious might of the Supreme Being."

As Dr. G. U. Pope said "The Ŝaiva Siddhānta system is the choicest product of the Dravidian intellect." It is a system of living philosophy found peculiarly located in the south of our subcontinent, influencing the daily-life, literature, culture and civilisation of the Tamilians. It is an ancient heritage of the Tamilians extant from times immemorial. In Tolkāppiyam, the oldest of the extant Tamil compositions, we find numerous terms having Ŝaiva Siddhtānta ideas being used.

Not only in Tolkāppiyam and Tirukkuṟaḷ, but also in every other masterpiece of Ŝaṅgam Literature, are found the cardinal tenets of Ŝaiva Siddhānta system.

The work in which this philosophy finds rich and beautiful expression, in the third century, i.e., after the Ŝaṅgam age, is Thiruvācakam of Saint Māṇikkavācakar, which is a collection of poems of unsurpassed spiritual experience and grandeur.

Kallāḍam, a work of the sixth century is replete with Śaiva Siddhāntic ideas. For the first time in Tamil literature, the expression 'Śaiva Siddhāntam,' came to be used in Tirumūlar's 'Tirumantram,' a work of three thousand stanzas dealing with the theoretical and practical aspects of Śaiva religion and philosophy, in which is found the treatment of Pati, Paśu and Pāśam in the old method. Perhaps the earliest treatise, treating the siddhanta concepts in the modern scientifi manner is Gñānāmirtam.

Saint Tirujñāna Sambandar and Appar, in the seventh century and Saint Sundarar following them in the early ninth century sung devotional poems based upon the realisation of truth according to the tenets of the Śaiva Siddhānta Philosophy. Till the twelfth century Vaishnavaite saints and authors of great medieval epics enriched Tamil literature with spiritual and religious poems having an undercurrent of Siddhānta sentiments.

The beginning of the thirteenth century was a landmark in the field of philosophy. The great Saint Meykaṇḍār, thro' his book Sivajñana Bōdham, inagurated the great siddhānta philosophical movement. This work, though very brief, contains in a nutshell a systematic expression of the system for the first time and as such, it may be said to commence the siddhānta movement for modern times. It consists of twelve sutras combined with logical propositions in prose and eighty one verses in venba metre. Saint Meykaṇḍār taught his philosophy to fortynine disciples of his who and whose descendents propagated and popularised the system. In the thirteenth and fourteenth centuries there arose fourteen philosophical works, known as the standard Śaiva Siddhānta Śāstras. They are as follows :—Tiruvundiyār, Tirukkaḷiṟṟuppaḍiyār, Sivajñāna Bōtham, Sivajñāna Siddhiyār, Irupā Irupatu, Uṇmai Viḷakkam, Śivaprakāśam, Tiruvaruṭpayan, Vinā-venbā, Pōṟṟipahroḍai, Koḍikkavi, Neñcuviḍutūtu, Uṇmaineṟi Viḷakkam, and Saṅkaṟparināharaṇam.

Earlier to Sivajñāna Bōdham of Meykaṇḍār were two other books Tiruvuntiyār and Tirukkaliṟṟuppaḍiyār. Tiruvuntiyār is a short and cryptic work of Tiruviyalūr Vyyavandadēva Nāyanār written in 1147 A.D. It is composed in a very attractive metre, which children employ while singing to the butterfly and contains several philosophical maxims in mystic language. It contains forty-five triplets dealing with the side of spiritual experience resulting from the pursuit of siddhānta tenets. The style reminds one of the prince of mystics saint Tirumūlar. The next work, Tirukkaliṟṟuppaḍiyār is the work of Tirukkaḍavūr

Uyyavandadēva Nāyanār, written in 1177 A.D. It follows Tiruvuntiyār faithfully, and explains in a fuller measure, the aphorisms of the earlier work. These two works are in a way, the precursors of Saint Meykaṇḍar's classical and immortal work Sivajñāna Bōdham.

Of the fourteen Śāstras, Śivajñāna Bōtham, Śivajñāna Siddhiyār and Śivaprakāśam are the three, mostly studied and referred to by other authors. They form a class by themselves and are respectively called the primary, the secondary and the derivative and it is for these three works that we find several commentaries. Of all the commentaries on Śivajñāna Bōtham, the best is the Bāṣyam of Śivajñāna Swāmigaḷ. The text begins with an invocatory verse to the self-luminous Gaṇapati from whom the poet and philosopher drew his inspiration. It also hints at the descent of truth from God Śiva as guru from Mount Kailas. The prefatory stanza strikes a note of majesty in respecting the Great who have known themselves and God, and in rejecting the imperfect creed of others. The twelve sūtras are divided into four parts. The first part deals with the existence of God, Soul, and Bonds; the second part with their nature and attributes, so that the first six sutrams cover the field of intellectual investigation. The third part deals with the method of pursuing the truth and the fourth with the realisation of the same, so that the last six sutrams pertain to the domain of spiritual experience.

There are more than six classical commentaries on Śivajñāna Śiddhiyar, the biggest and best among them being entitled 'Gñānābhāraṇa Viḷakkam' by Saint Veḷḷiambala Tambirān which still remains unpublished. Sivajñāna Siddhiyar comprises of two parts, parapakṣam and supakṣam, the former enunciating and criticising the doctrine of twelve alien systems and the latter treating in detail the principles of Śaiva Siddhānta. It follows the method of Sivajñāna Bōdham in expounding Siddhānta truths.

Umāpati Śivācārya's Śivaprākaśam clearly summarises the substance of Śaiva Siddhāntha philosophy in one hundred stanzas. The work briefly defines Pati, Paśu and Pāśam in its first part which covers the first fifty stanzas and in the second part of it are expounded the special nature of the soul and God, the methods of approaching the Almighty and realising His bliss and the characlteristics of the great men who have realised the truth. The best commentary on the Śivaprakāśam is that of Śivaprakāśa Swāmigaḷ of Madurai.

The subject-matter of this system of philosophy falls into two parts, one consisting of investigation of truth and the other of spiritual experience. Let us now deal with the first part, viz., the investigation of truth.

From very ancient times, man has studied the environments around him, postulated the existence of God, listed His actions and attributes, discussed the relationship of the Universe unto himself, and prayed to God to bless him with eternal happiness. The siddhāntic view is that the world is real which has since been indicated with the first sutram of Śivajnāna Bōdham, by the words He, She and It. Further, a discussion about the maker of the world would seem futile and bad unless the world is real. So, it should be first understood that the world is real.

The world consists of intelligent and unintelligent beings. The former has been divided into male and female. Every unintelligent thing in the world is moved by an intelligent being. Quite logically we should conclude that this unintelligent world undergoing several processes should be moved by a supreme intelligence. The distinction between the intelligent and unintelligent lies in that, that the latter should be acted upon to cause a movement while the former can move and stop according to its purpose.

The fact that the world is controlled by a unique power and supreme intelligence can be easily inferred from the following fact : Everything in the world undergoes the process of birth, development and decay. If inanimate nature rules the world there will be only one process. Further all things in the world are governed by a moral and physical order over which individual souls have no control and which presupposes the supremacy of a supreme intelligence.

The universe never becomes nothing. It is a cordinal principle of Śaiva Siddhānta that nothing comes out of nothing and something does not become nothing and also that something cannot arise out of nothing.

All men are not alike, so are their thoughts and conclusions. We therefore find considerable divergence of opinion on several of these fundamental matters discussed above. The fourteen sāstras divide the universe into three eternal categories Pati, Paśu and Pāśa. They coexist for all times. As already explained at the outset, Pati or God has two aspects, the transcendental and the immanent. He has eight attributes namely, self control, purity, intuition, omniscience, freedom,

grace, omnipotence and happiness. All these are perfect and absolute in Him. He is the Supreme Lord of the Universe and the Supreme Regular of the destinies of the soul. He is the Supreme Director of the Pañchakṛityas on the five great cosmic actions (creative evolution, Protection, Transformative Extinction, Involution and Blissful Absorption). In all these actions He is indissolubly united to Śakti. He is the Efficient cause, His Śakti is the instrumental cause, and Māyā the material cause. This theory of causation is based on Sat-kārya-Vāda and differs from other theories like the Māyā-vāda and the Ēkātmavāda.

The soul is as perennial as God Himself. According to the Sīddhāntic view, souls are as eternal as God and they are not created out of nothing by God. Certainly, they are not parts of God, for they do not possess qualities of God and are not above the cycle of births and deaths. The soul, being an intelligent entity, has not a material form inseparable from it. It is neither an atom nor a force filling the body. It identifies itself with anything that comes in contact with it and uses it as an instrument. The soul's intelligence is progressively developing with the aid of the senses, mind and the organs of activity. The soul has five stages of consciousness called the Jāgrata, the Svapna, the Suṣupti, the Turiya and the Turiya-tita. In these stages, it is related to the ninety-six, tatwas in various groups. The soul is called Paśu, as already explained because it is in immemorial bondage. Deliverance from this bondage is its salvation called Mukti. The bondage is the working of Pāśa which is subdivided into Āṇava, Karma and Māyā. These are the three malas or impurities or bonds of the soul which should be got rid of, if the soul should rise to the level of God.

Āṇavamala is the root cause of the soul's misery and is also called the mūlamala. It may, in a way be likened to the instinct of self-assertion found in the human and other species of creation. The anava in the form of egoism and egoistic tendencies is the essential factor for the worldly experience. Hence, Anavamala is called mūlamala, for it is at the root of all miseries as said earlier.

Māyā is the great cosmic illusion and Karma is the chain of action and reaction. Māyā and Karma are only indirectly repsonsible for the self's bondage in the world. While Āṇava is the inherent one to the self, as the husk to the rice, Māyā and Karma are associated with the conscious self by the Supreme self, so that it may get free from the

clutches of Āṇava and gain its full pristine spiritual stature. The influence of Māyā and Karma on Āṇava is a softening one, and so the power of the Āṇava gets weakened gradually. Hence, Māya and Karma are called Āgantukamalas.

Though all the three are bonds or bandhas, they differ among themselves in this way that Anava is Pratibandha (the Inimical Bond), Māyā is Sambandha (the Allied Bond) and Karma is Anubandha (the Appendix Bond). When these Bonds fall off, the soul passes through three definite stages, viz., Iruvinai oppu or Samatwa Buddhi, Malaparipāka and Śaktinipātha, and becomes a Jīvanmukta. When the body falls off, the Jīvanmukta attains Sāyujya.

There are four grades and processes of initiation leading to different steps on the spiritual ladder. The processes are known as Sariyai, Kriyai, Yōgam and Gñānam. The four grades of initiation are Samaya Dīkṣai, Viśēṣa Dīkṣai, Nirvāṇa Dīkṣai and Ācārya-Abhiṣēkam. Of the last mentioned four, Ācārya-Abhiṣēkam refers to the investing in the advanced soul with power to initiate others.

In the bound stage, the soul worships God indirectly through symbols and in the freed stage, the soul perceives directly the almighty. The worship of the all-pervading, eternal, intelligent, blissful, supreme being through external forms is called Sariyai to which the initiation called Samaya Dikṣai befits a person. The worship of the cosmic form of the eternal Ruler of the universe externally and internally is called Kriyai. The internal worship of Him as formless is called Yōgam. For Kriyai and Yōgam the requisite initiation is called Viśēṣha Dikṣa. The direct perception of the infinite in the light of the Infinite Wisdom vouchsafed by God through Jñāna Gurus is called Jñānam and the initiation leading to it is called Nirvāṇā Dīkṣai.

Each of these processes of Sariyai, Kriyai, Yōgam and Gñānam has four subdivisions bearing the very names. These sixteen grades are discussed in detail and the benefits which the soul derives from them are clearly defined in the fourteen sastras. The company of salved souls, the wills desires and actions of such souls, and the way in which God bestows His grace on them are all clearly set out in them.

The concentration of God's grace through an ācārya or a spiritual preceptor, whose infallible guide is an indispensable necessity for one's initiation and upadēśa, awakens the perception of Infinite Wisdom in the mind of the disciple who will thereby attain the capacity to look at the soul, the world and God in the true perspective. Such a

soul, will realise the fleeting character and futility of the world and its own dependence upon God and the infinite power and grace of the Providence, and will take refuge under the feet of the Almighty from the evils of the world. The feet of God represent the overruling wisdom and activity of His to which the soul submits its knowledge and action. Such submission is spoken of as taking shelter under the feet of God. In the state of such submission the soul remains safe and happy. In order that the soul may be steady in that attitude, the contemplation of the meaning of Pañcākṣaram or five letters is essential.

In that five lettered mantram 'Śivāyanama,' the letter 'Śi' is the symbol for Sivam (God); 'Va' stands for His Grace that leads the fit soul to God; 'Ya' stands for the soul; 'Na' represents the screening power of God that helps the soul to move in the world, and 'Ma' represents the bond that entangles the soul in the turmoil of the world. If the soul turns towards "Na" and "Ma" it will fall a victim to the evils of life. If it associates with "Va" it will rise towards God. Hence the mantram constantly reminds the soul of the need for giving up the world and adhering to God's grace and moving Godward, when the thoughts of the world tempt the soul away from its attitude of wisdom. Standing in the light of wisdom is 'Keṭṭal' and contemplating the meaning of Panchaksharam is "Cindittal." Giving one self up wholly to the control of divine grace by remaining in Adwaitic contact with God and having nothing to know or do save under the guidance of God's grace is called 'Telital' or in other words Jñāna Yōgam. To go higher from that step by cultivating eternal love for Providence and becoming immersed in divine bliss is called 'Niṭṭai Kūḍal'. Whoever reaches that stage in this life, remains unassailed by any troubles of the world and is called Jīvan Mukta. It is that stage of which Saint Appar spoke when he said, "Happiness and no sorrow for all times."

Such, then, in simple, is the concept of the great living philosophy of Saiva Siddhāntha. Perhaps the preface has gone a bit too long. But for one who would like to inquire deeply into the truth and depth of this ancient and noble philosophy, this little preface in English I hope, would serve as a guide. It is indeed very kind of the Government of Madras, to give incentive to the publication of books on these lines. In these hectic times of cold wars and restless international politics, the infusion of a religious feeling and philosophic outlook on the citizens of the world will be a timely measure of conversion. In this connection,

the Madras Government ought to be congratulated for the very noble and worthy task that they have taken in coming forward to publish this book on 'Siddhānta Viḷakkam'. I take this opportunity to thank, the Government of Madras for being kind enough to assign me the task of editing this book, and the Curator of the Government Oriental Manuscripts Library who is also the General Editor of the publication, Mr. T. Chandrasekaran for his kind and invaluable assistance.

ŌM ŜĀNTI! ŜĀNTI!! ŜĀNTI!!!

V. KUNCHITAPADAM.

T. 2141

# முன்னுரை

## திருத்தாண்டகம்

"ஆட்டுவித்தால் ஆரொருவ ராடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவ ரடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவ ரோடா தாரே
உருகுவித்தால் ஆரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே"

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த மேலைத் திருத்தாண்டகம் எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானே ஆன்மாக்கள் உய்தற் பொருட்டு உலகத்தைப் படைத்து ஆட்டுவித்தலும், அழித்து அடக்குதலும், இருவினைப் பயனை நுகரச் செய்தலும், தம்மை நினைந்து அன்பினால் உருகச் செய்தலும், பத்தியினால் பாமாலை பாடச் செய்தலும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நன்னெறியால் வழிபடச் செய்தலும், ஞானத் தெளிவுடையாருக்குத் தன்னைக் காட்டுதலும் செய்கிறார் என்பதூஉம், அவ்விறைவன் காட்டாக்கால் அவனை ஆன்மாக்கள் கண்டு கடைத்தேற முடியாதென்பதூஉம் தெளிவுபடுத்துகின்றது. இப் பாட்டில் சைவ சித்தாந்தக் கருத்து மிளிர்தல் காண்க. இச்சைவ சித்தாந்த ஆராய்ச்சி நமக்குளற்றுக்கு ? என்பதுபற்றிச் சிறிது விளக்குவாம்.

உலகில் நால்வகைத் தோற்றமும், எழுவகைப் பிறவியும், எண்பத்து நான்கு நூறுயிரம் யோனி பேதமும் உடையனவாய்த் தோன்றிய உயிர் களெல்லாம் துன்ப நீக்கத்திலும் இன்பப்பேற்றிலும் ஆர்வமுடையனவாகக் காணப்படுதல் கண்கூடு. இவ்வுயிர்கள் பலவற்றுள்ளும் மக்கட் பிறவியே சிறந்தது. ஏனெனில் ஐயறிவோடு ஆறுவதாகிய பகுத்தறிவைப்பெற்று நன்மை தீமைகளை யறிந்து, நல்லன செய்து, அல்லனவொழித்து இன்புற்று வாழ முயல்வது மக்கட் பிறவியே. ஆயினும் இப்பிறவி சிற்றறிவும், சிறு தொழிலும், சில வாழ்நாளும் நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடுகளும் உடையதாய்க் காணப்படுகின்றது. இத் துன்பங்கள் உண்டாதற்குக் காரணம் உயிர்களை அநாதிகாலந் தொட்டுப் பற்றிக்கொண்டுள்ள அறியாமையே யாகும். இவ்வறியாமையைச் சைவ சித்தாந்த சாத்திரம் மலம் என்று கூறும்.

உயிர்கள் இவ்வறியாமையை அகற்றி, மெய்யறிவைப் பெற்று, பிறப்பு இறப்புக்களை ஒழித்துப் பேரின்ப நிலையை அடையவேண்டுமானால் பேரறிவும், பெருந்தொழிலும், பேராற்றலும், பேரருளும் உடையவனும் இயல்பாகவே

பாசங்களினின்றும் நீங்கியவனும் எல்லாம் வல்லவனும் எங்கும் நிறைந்தவனும், பிறப்பிறப்பில்லாதவனும் உண்மை அறிவு இன்பவடிவினனுமாகிய இறைவன் சார்பைப்பெறவேண்டும். "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தருநோய்" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும்.

உயிர்கள் அறியாமை நீங்கப்பெற்றால்தான் இறைவனை அடையமுடியும், அதற்குச் சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி மிகவும் இன்றியமையாதது. அச் சாத்திரங்கள் எவ்வாறு யாவரால் தோன்றின என்பது பற்றிச் சற்று ஆராய்வோம்.

உபதேச முறையில் வரும் அச்சாத்திர ஞான நெறி ஸ்ரீகண்ட தேவரால் திரு நந்தி தேவருக்கு அருளப்பட்டு, அவர் அதனைச் சனற்குமார முனிவர்க்கு அருளிச்செய்ய, அவர் அதனைச் சத்திய ஞான தரிசனிகளுக்கு அருளிச்செய்ய, அவர் அதனைப் பரஞ்சோதி முனிவருக்கு அருளிச்செய்ய, அவர் அதனைத் தமிழ்நாடு செய்த தவப்பயனால் திருவெண்ணெய் நல்லூரில் சைவ வேளாளர் குலத்தில் அவதரித்த இரண்டாண்டுக் குழவியாகிய மெய் கண்ட தேவர்க்கு அருளிச்செய்ய இங்ஙனமாக வந்த பரம்பரைக்குத் திருக் கயிலாய பரம்பரை என்று பெயர்.

மெய்கண்ட தேவ நாயனாரும் அவர்பால் ஞானோபதேசம்பெற்ற அருணந்தி சிவாசாரியாரும், அவரிடம் அருள்பெற்ற மறைஞான சம்பந்த சிவாசாரியாரும், அவரால் உபதேசிக்கப்பெற்ற உமாபதி சிவாசாரியாரும் ஆகிய நால்வரும் சைவ சந்தானாசாரியர் என வழங்கப் பெறுவர்.

இச் சந்தானாசாரியர் நால்வருள் முதல்வராகிய மெய்கண்ட தேவரால் அருளிச்செய்யப்பட்ட சிவஞான போதமும், அருணந்தி சிவாசாரியரால் அருளிச்செய்யப்பட்ட சிவஞான சித்தி, இருபா இருபஃது என்னும் இருநூல் களும், மெய்கண்ட தேவரது நாற்பத்தொன்பது மாணாக்கர்களுள் ஒருவ ராகிய திருவதிகை மனவாசகங் கடந்தாரால் அருளிச்செய்யப்பட்ட உண்மை விளக்கமும், உமாபதி சிவாசாரியாரால் அருளிச்செய்யப்பட்ட சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு நூல்களும், இவ்வாசிரியர்கள் காலத்திற்கு முன்னிருந்த திருவிசலூர் உய்யவந்த தேவ நாயனாரால் அருளிச்செய்யப்பட்ட திருவுந்தி யாரும், திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனாரால் அருளிச்செய்யப்பட்ட திருக்களிற்றுப்படியாரும் ஆகிய பதினான்கு நூல்களும் மெய்கண்ட சாத் திரம் எனவும், சித்தாந்தம் சாத்திரம் எனவும் வழங்கப்பெறும். இச் சாத் திரங்கள் கூறும் பொருள் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளேயாம். இவற்றை இறை, உயிர், தளை என்று கூறுவதுமுண்டு. இவற்றை ஆராய் வதே கல்வியின் பயன்.

கல்வியறிவின் பயன் கடவுளைத் தொழுதலே என்பதைத் திருவள்ளுவர், "கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன், நற்றாள் தொழா அர்

எனின்?" என்னுங் குறளால் விளக்கி, இறைவனடியை அடைந்தால் பிறவிப் பெருங்கடலைக் கடக்கலாம் என்ற சித்தாந்தக் கருத்தைப் "பிறவிப் பெருங் கடல் நீந்துவர்; நீந்தார். இறைவன் அடி சேராதார்" என்னுந் திருக் குறளில் முடித்துக் கூறியுள்ளார். இங்கே கூறிய கல்வி உலகியற் கல்வி யன்று; ஞானநூற் கல்வியே. இக் கல்வியே வாழ்க்கையின் முடிந்த பயனைத் தரவல்லது. மனுச்சோழனுடைய மகன் வீதி விடங்கனது கல்விப் பயிற்சி யைச் சொல்லுமிடத்து தெய்வச் சேக்கிழார் பெருமான் "சிவ முயன்றடைந்து தெய்வக் கலைபல திருந்தவோதி" என்றருளிச் செய்திருத்தல் காண்க. மேலும் கச்சியப்ப சிவாசாரியர்,

"சான்றவ ராய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி யாருயிர்த் தொகை
வான்றிகழ் தளையென வகுப்ப ரன்னவே."

என்றும் மொழிந்துள்ளார்.

இம் முப்பொருள்களைப்பற்றி மொழியும் சைவ சித்தாந்த சமயம் உலகிற் றோன்றியுள்ள எண்ணிறந்த சமயங்களுக்கெல்லாம் தலைமை வாய்ந்தது, எங்ஙனமெனில் இம்முப்பொருள்களைப்பற்றியபல திறப்பட்ட கொள்கைகளும் அக் கொள்கைகள் எல்லாவற்றையும் பற்றிய ஆராய்ச்சிகளும், அவற்றுள் பொருந்துவன இவை பொருந்தாதன இவை என்னும் பகுத்தறியும் ஆராய்ச்சியும், பொருந்துவனவற்றைத் தெளிவு படுத்தியுரைத்து உண்மை முடிபு காட்டும் சித்தாந்தக் கொள்கையும் ஆகிய இவையெல்லாம் சைவ சமயத்தின் கண்ணே விளங்கிப் பொலிதலால் எல்லா மதங்களும் நமது சைவ சமயத்தின் கண்ணே அடங்கத் தான் எதிலும் அடங்காததாய் மேம் பட்டுத் திகழ்தலின் சைவ சமயம் ஒன்றே எல்லாவற்றினும் சிறந்த உண்மை மதமாமென்பது நிலை நாட்டப்படும்; இதுபற்றியே சைவ எல்லப்ப நாவலரும் "சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம் தெய்வத்தின் மேற் றெய்வம் வேறில்லெனும் நான்மறை" என்று கூறினர். மற்றும் தாயுமான சுவாமிகளும், "இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லாவாகி யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி என்றும், "இராசங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகி தந்தோ" என்றும், "சைவசமயமே சமயம்" என்றும் அருளிச் செய்துள்ளார்கள். எல்லாச் சமயத்திற்குமில்லாத சைவ சமயத்திற்கேயுரிய மற்றொரு தனிப் பெருஞ்சிறப்பு துன்ப நீக்கத்தையும் இன்பப் பேற்றையும் விழையும் மக்கள் தாம் வழிபடுங் கடவுளைச் சிவம் என்னுஞ் சொற்கொண்டு போற்றி வழிபடுதலேயாகும். 'சிவம்' என்ற சொல்லுக்கு மங்கலம், சுகம், பாக்கியம், பேரானந்தம் என்னும் இன்பப் பொருளே வழங்குதல் காண்க. மாணிக்க வாசக சுவாமிகள் திருவாசகத்துள் முதலில் கடவுளை வாழ்த்து மிடத்து 'நமச்சிவாய வாழ்க' என்றும், போற்றித் திருவகவலில் "தென் னாடுடைய சிவனே போற்றி," என்றும் கூறிய தோடன்றிச் சிவனே இன்ப வடிவினனென்பதை "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே"

என்று விளித்துப் போற்றியுள்ளார்கள். இன்சொல் இனிமை தருதல்போல் அனைத்துயிர்க்கும் இன்பமளிக்கும் இறைவனுடைய 'சிவன்' என்னுந் திருநாமம் எல்லாவற்றினும் முதன்மையுடையதாய் ஆன்றோரால் போற்றப் படுகின்றது என்பது தேற்றமாம். உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாதற்றன் மையுடையனவாதலால் அவ்வுயிர்கள் 'சிவ சிவ' என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் துன்பம் நீங்கி இன்பம் எய்தும், இதனைத் திருமூல நாயனாரும், திருமந்திரத்துள்,

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

என்னுஞ் செய்யுளால் தெளிவுபடுத்தியுள்ளார்.

இனி, குமரகுருபர அடிகள் தம் குருவையே இறைவனாகக்கொண்டு பாடிய, பண்டார மும், மணிக்கோவையுள் சைவ சித்தாந்தத்தின் உயர்வை யும், ஏனை அறுவகை மதங்களின் தாழ்வையும் நன்கு ஆராய்ந்து தெளிந்து கூறுமிடத்து இறைவனால் சுத்த மாயையில் தோற்றுவிக்கப்பட்ட வேதம் என்னும் மரத்தினால் பெறக்கூடிய பயன் பல; அம்மரத்திலுள்ள இலையைப் பறித்துக்கொண்டு மகிழ்ந்தனர் பலர்; பலர் தளிர்கொண்டு உவந்தனர்; அரும்பு, மலர், பிஞ்சு, காய் இவற்றை விரும்பிக்கொண்டு மகிழ்ந்தோர் பலர்; வேதாந்தம் என்னும் உச்சியிற் பழுத்த அருங்கனியைப் பிழிந்து அதன் சாரமதைக் கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலரே என்று உருவகப்படுத்தி, முற்கூறிய வேதமாகிய மரத்தின் இலை, தளிர் முதலியன அறுவகை மதமெனவும், அவை முடிந்த இன்பந்தராதன வெனவும், சைவ சித்தாந்தமே பேரின்பந்தரும் என்றும் விளக்கியுள் ளார்கள், அச்செய்யுட் பகுதி, "பண்டார மும், மணிக்கோவை" பாடல் 11— அடிகள் 20—35.

"ஞானசம் பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தா னம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண்டுய் கெனக்
குடிலை யென்னுந் தடவய லுப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீஇ இத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஒரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த

ஆரா வின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே" என்பன.

'நிழலருமை வெய்யிலிற் றெரியும்' என்னும் முதுமொழிக்கிணங்க சைவ சித்தாந்தத்தின் உயரிய கொள்கையும் பயனும் ஏனைப்புறச் சமயக் கொள்கைகளோடு ஒப்புநோக்கி ஆராய்ந்து பார்த்தால் நன்கு புலனாகும். புறச் சமயங்களைப்பற்றிய ஆராய்ச்சியும் கண்டனமும் தெளிந்த முடிபும் சிவஞான சித்தியாரில் பரபக்கத்தில் விரிவாகக் கூறப்பெற்றுள. இங்கே மாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞான போத மாபாடியத்துள் கூறியுள்ள புறமதக் கொள்கைகளைத் தொகுத்துக் கூறுவோம்.

புறமதங்களைப் புறப் புறச்சமயம் என்றும், புறச் சமயம் என்றும், அகப் புறச் சமயம் என்றும் ஆன்றோர் வகுத்துள்ளனர். புறமதங்கள் ஒவ்வொன்றும் அவ்வாறு வகைப்படும் அவற்றை முறையே காண்போம்.

## புறப் புறச் சமயத்தார்.

என்பவர் வேதம் ஆகமம் இரண்டையும் நிந்திப்பவர். இவர்கள் வைதிக சைவ சித்தாந்த சமயத்திற்கு முற்றும் புறம்பான கொள்கையுடையராயிருத்தலின் புறப் புறச் சமயத்தார் எனப்பட்டனர். இவர்கள் உலோகாயதர், மாத்தியமிகர், யோகசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர் என்னும் நால்வகைப் பௌத்தர், ஆருகதர் ஆகிய அறுவராவார்கள்.

## உலோகாயதம்.

**உலோகாயத நூல் செய்தவர் தேவகுருவாகிய பிருகஸ்பதி. உலோகாயதத்தின் கொள்கையாவது.**—காண்டல் அளவை ஒன்றே பிரமாணம்; காணப்படும் நிலம் நீர் தீ வளி என நான்கே தத்துவங்கள்; இவை நித்தப் பொருள்கள்; இவற்றின் கூட்டமே உடம்பு; பாக்கும் வெற்றிலையுஞ் சுண்ணும்புங் கூடிய வழிச் செவ்வண்ணம் தோன்றுதல் போல இவற்றின் கூட்டுறவின் ஓருணர்வுண்டாகும்; அவ்வுணர்வு உடம்புவளர வளரும், தேயத் தேயும், ஆதலால் உடம்பிற்கு வேறே உயிரென்பதும் பொய்; உடம்பிற்கு இன்ப துன்பங்கள் இயல்பாயுள்ளன: இவற்றிற்குக் காரணம் வினை என்பதும் பொய்; மயிலைச் சித்திரித்தாரையும் குயிலைக் கூவுவித்தாரையுங் காணாமையிற் கடவுளுண்டென்பதும் பொய்; இம்மையின் மங்கைப்பருவத்து மகளிரோடு மணந்து உண்டுடுத்து வாழ்வதே துறக்கவின்பம்; அது பெறாது பகைவரால் நோயால் வறுமையால் நூல்களாற் பிறவற்றால் வருந்துவதே நிரயத் துன்பம்; வேறே துறக்க நிரயமுள என்பதும் பொய்; நான்கு பூதக் கூட்டுறவில் பிராணவாயு ஒன்று நீங்கில் உணர்விழந்து உடம்பு நாசமாம்; அதுவே வீடு பேறு; வேறே வீடு பேறுண்டென்பதும் பொய்; இவ்வுண்மை உணராத மடவோர் மறுமையுண்டெனக்கொண்டு தவங்கள் பட்டினி முதலியவற்றான் வருந்துவர்; கற்பு முதலிய சங்கேத நூல்கள்

மதுகையின்றி மதியுடையோராற் செய்யப்பட்டன ; பொன், நிலம், உணவு முதலிய தானங்களை உயர்த்துக் கூறும் நூல்கள் பசியான் வருந்தி நல் கூர்ந் தோரால் செய்யப்பட்டன ; தேவதலம், தண்ணீர்ப்பந்தர், கூவல், பொய்கை, சோலை முதலியன செய்தலை உயர்த்துக்கூறும் நூல்கள் வழிச் செல்வோராற் கூறப்பட்டன ; ஆகலான் இவற்றைக் கைவிட்டு உழவு, பசுக்காவல், வாணிகம், செங்கோன் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியில் நின்று இம்மையின்பங்களை நுகர்ந்து வாழ்தல் உறுதிப்பயன் என்பதாம். இவ் வுலோகாயதர் தேகான்ம வாதிகளும், இந்திரியான்மவாதிகளும், பிரா ணான்மாவாதிகளும், அந்தக்கரணான்மவாதிகளும் எனப் பலவகைப் படுவர்.

## பௌத்தம்.

வட நாட்டிலுள்ள கபிலவாஸ்து என்னுமிடத்தில் ஓர் அரச குடும்பத்தில் பிறந்து இளமையிலேயே மனைவி மக்களைப் பிரிந்து உலகத் துன்பத்திற்கு விடுதலை காணும் பொருட்டுத் துறவு பூண்டவர் கௌதம புத்தர். இவர் தோற்றுவித்த மதமே புத்தமதம் என்பது. **அதன் கொள்கைகளாவன :—**

உலகத்தில் பிறந்து இறந்து உழன்று சீலம் முதலியவற்றால் நல் லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து உய்தற்பொருட்டுக் கருணையினாற் பிடக நூல் செய்தவன் புத்தக்கடவுள் ; அந்நூலிற் கூறும் பொருள்களாவன ஞானமே ஆன்மா எனப்படும் ; அது நீரோட்டம்போலத் தொடர்ச்சியாய்க் கணந்தோறுந் தோன்றி அழியும் ; அங்ஙனம் தோன்றி யழியுங்கால் மான்மத நாற்றம்போல முற்கணத்தின் அழிவெய்தும் ஞானத்திற்றோன் றிய வாசனை, பிற்கணத்திற் றோன்றும் ஞானத்திற் பற்றுதலால் அறிவு முதலாயின நிகழும் ; மற்றுமுள பொருளெல்லாங் கணந்தோறுந் தோன்றியழியும் ; இந்த ஞானத்திற்றோன்றிய வாசனை அழிவதே முத்தி என்பதாம். ஞானங் கூடக் கெடுதல் முத்தி என்பாருமுளர்.

இப்பௌத்த மதத்தர் மாத்தியமிகர், யோகசாரர், சௌத்திராந்திகர், வைபரடிகர் என நால்வகைப் படுவர். இந்நால்வரும், முறையே எல்லாப் பொருளும் சூனியம் எனவும், புறப்பொருள் சூனியம் எனவும், புறப் பொருளுண்மை வழியளவையான் அறியப்படும் எனவும், புறப்பொருள் காட்சிப்பொருளாம் எனவுங் கூறுப. இந்நால்வரும் ஆதிபுத்தனுடைய மாணாக்கர்.

## மாத்தியமிகர்.

**ஆதிபுதத்னுடைய மாணாக்கர் நால்லவருள் மாத்நியமிகராவார்.**—உலகத் துப் பொருள்கள் உள்பொருளாயின், அழியா ; இல்பொருளாயின், தோன்றா ; உள்ளவுமில்லவுமா மெனின், முரணும் ; இவ்விரண்டுமல்ல வெனின், உணர்ச்சி கூடா ; ஆதலின் இந்நான்கு பகுதியுமின்மையால் எல்லாப் பொருளும் சூனியமே ; மயக்கத்தாற் காட்சிப் பொருள்போலப் புலப்படுகின்றன. என ஆசிரியன் பிடகநூற்பொருள் உணர்த்தியவழி அதனை உண்மையாகக் கொண்டுமேல் வினவாதார்.

ஆசிரியன் மொழிந்தது பொருளெனக் கொள்ளுதலிற் றலைமாணுக்கர், அதற்குமேல் வினு நிகழ்த்தாமையிற் கடைமாணுக்கர், என இரண்டும் ஒருங்குற்று நின்றமையின் மத்தியம மாணுக்கராய் மாத்தியமிகர் எனப் பெயர் பெற்றுர் என்க.

## யோக சாரர்.

**இனி, யோக சாரர் எனப்படுவார்.**—அங்ஙனம் ஆசிரியன் உணர்த்திய வழிப் புறப்பொருள் பாழென்பதனை உடன்பட்டு ஞானமும் அவ்வாறு சூனியமாயின் வழங்கற்பாடு கூடாதன்றே! என வினவினூர்க்கு, நன்றே வினவினீர்; ஞானமாத்திரம் உள்ளது; அந்த ஞானம் சாகாரம், நிராகாரம் என்று இருவகைப்படும்; அவற்றுள், வட்டம், சதுரம், கறுப்பு, சிவப்பு முதலிய வடிவிற்றுய் அகத்தே தோன்றும் ஞானம் சாகரம் எனவும், பந்தம் நீங்கிய வழி அங்ஙனம் வேறுபாடின்றித் தொடர்ச்சியாய் எழுவ தாகிய ஞானம் நிராகாரம் எனவுங் கூறப்படும். இத்தன்மைத்தாகிய ஞானமேயன்றிப் பொருளென வேறில்லை; கனவின்கட் புறப்பொருளை அவாவாது கேவல ஞானத்தானே வழங்கக் காண்டலான் நனவின் கண் வழங்குவதும் அவ்வாறேயாம்; அவ்வுணர்வு அகத்தின் நிகழ்வதேயாயி னும் அநாதிவாசனை வயத்தாற் புறத்தே காணப்படுவதுபோலத் தோன்று நின்றதெனக் கொள்க என்று ஆசிரியன் உணர்த்தினுன். அங்ஙனம் உணர்த்தப்பட்டோர், ஆசிரியன் மொழிந்ததனை உடன்பட்டு அதற்குமேல் வினுவினுராகலின் யோகசாரரென்றுயினுர் என்பது.

பௌத்தமத ஆசிரியன் மொழி உடம்படுதலை ஆசாரம் எனவும் அதற்கு மேல் வினுவுதலை யோகம் எனவும் குறியிட்டு வழங்குப ஆகலான் அவ் விரண்டானும் பெற்ற பெயர் என்றுணர்க.

## சௌத்திராந்திகர்.

**இனிச் சௌத்திராந்திகராவார்.**—அங்ஙனம் ஆசிரியன் உணர்த்திய வழிப் புறப்பொருள் முழுதும் சூனியம் என்பதென்னை? யான் இது கண்டேனென்று உணருமிடத்து யான் என்னும் ஞானம் அகத்துப்பொரு ளும் இது என்று சுட்டி அறியப்படுவது புறத்துப் பொருளுமாகலான் அவற் றிற்கு வேறுபாடு தெற்றென விளங்குதலானும், இரண்டும் ஒருங்குணர்தலே பற்றி ஒன்றென்றல் பொருந்தாமையானும், இரண்டும் ஒருங்குணர்தல் எனவே வேறுபாடுண்மை தானே பெறப்படுதலானும், ஞானமே குடம் படம் முதலியனவாகத் தோன்று நின்றதெனக் கோடல் பொருத்தமன்றென வினுவினூர்க்கு, நன்றே வினுவினீர்! புறத்துத் தோன்றுவனவும் உள் பொருளேயாம்; அவை காட்சிப் பொருளல்ல; குடவடிவிற்றுகிய ஞானம் உணர்ந்த பின்னன்றிக் குடமுணர்தல் கூடாமையின் கணத்திற்றேன்றி யழியுங் குடம் முதலாயின அங்ஙனம் உணருமளவும் நிலைபெறுதலின்மை யாற் குடம் முதலாயின தத்தம் வடிவினை ஞானத்தின் வைத்திட்டழிந்த பின்னை, ஞானத்துட்பற்றிய வடிவானே அங்ஙனம் இறந்துபோய குடம்

முதலாயின வழியளவையின் வைத்து உணரப்படும். இவற்றிற்குக் காரணம் என்னை ? எனில், புறம் அகம் என்னும் இருவகைச் சமுதாயமுமாம். அவற்றுட் புறச் சமுதாயம் நிலம் முதலாயின. அவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். அவை, நிலவணு, நீரணு, தீயணு, வளியணு என நால் வகைப் படும். அவை ஒருங்கு பலதொக்க வழிப்புறச் சமுதாயந் தோன்றும். இனி, அகச் சமுதாயம் சித்தமும் சித்தப் பகுதியுமாம். அவற்றிற்குக் காரணம் ஐவகைப்படுங் கந்தங்கள் ; அவை, உருவம், வேதனை, ஞானம், குறி, வாசனை என்பனவாம். கந்தம் என்பது சமூகம் என்னும் பொருளை உடையது. அவற்றுட் சித்தத்தாற் சிந்திக்கப்படுஞ் சத்தம் முதலாயின உருவகந்தம். இவை புறத்துள்ளனவாயினும் அகத்திற் சித்தத்தாற் சிந்திக்கப்படுதலின் அகச் சமுதாயத்துள் வைத்து எண்ணப்பட்டன. இனி, அகச் சமுதாயத்துட் பட்ட உடல், பொறி முதலியவற்றை உருவகந்தம் என்றலுமொன்று. அவ் வுருவ கந்தத்தை உணருமுணர்வு ஞானகந்தம் ; அது சாகாரம், நிராகாரம் என்னும் வேறுபாட்டாற் பிரவிருத்தி விஞ்ஞானம் என்றும் ஆலய விஞ் ஞானம் என்றும் இருவகைப் படும். சாகாரம் சவிகற்பமாம். நிராகாரம் நிருவிகற்பமாம். இனி, இவ்வுணர்வாற் றோன்றும் இன்பத் துன்ப நொதுமல்கள் வேதனைக்கந்தம். சாத்தன், கொற்றன் முதலிய பெயர் குறிக் கந்தம். அப்பெயர்களாற் பகுத்துணருஞ் சவிகற்பவுணர்வு குறிக் கந்தம் எனவும், நிருவிகற்பமொன்றே ஞானகந்தம் எனவுங் கோடலுமொன்று. அவற்றின் வாசனை வாசனைக் கந்தமாம். வாசனை எனினும் செய்கையெனினும் ஒக்கும். குறி எனினும் சஞ்ஞை எனினும் ஒக்கும். இவ்வைந்தும் ஒருங்கு தொகுதலான் அகச் சமுதாயம் தோன்றும். இவற்றுள், உருவ கந்தம் புறச்சமுதாயத்துள் வைக்கப்படும். ஏனை நான்குமே சித்தமும் சித்தப்பகுதியுமாகிய அகச் சமுதாயம் என்பாருமுளர். சகம் முழுதும் இவ் விருவகைச் சமுதாயத்துள் அடங்குமென்று ஆசிரியன் உணர்த்தினான். அதுகேட்ட மாணாக்கர், இங்ஙனம் மாணாக்கர் வினவிய கடாவிற்கேற்ப அறிவுறுக்குஞ் சூத்திரங்கள் எவ்வளவின் முடிவு பெறும் எனக்கடாயினார். அவ்வழி ஆசிரியன் சூத்திராந்தங் கடாவிய " நீர், சௌத்திராந்திகர் எனப் பெயர் பெறுக " என்றமையின் அவர்க்கு அது பெயராயிற்று.

## வைபாடிகர்.

**இனி, வைபாடிகராவார்.**—ஆசிரியர் இங்ஙனம் உணர்த்தியவழி அது கேட்ட மாணாக்கர், புறப்பொருள் ஞானத்தால் அநுமித்தறியற்பாற்றென்றது என்னை ? ஞானமே தனக்குக் காட்சிப் பொருளாகலானும், காட்சிப்பொருள் ஒன்று மின்றாயின் வியாத்தியுணர்தற்கு இடம் இன்மையான்வழியளவை நிகழாதாகலானும் இது மாறுகோளுரைபோலும் எனக் கேட்டாராகலின், அவர் வைபாடிகர் எனப்பட்டார். மாறு கோளுரை எனினும் விபாடை எனினும் ஒக்கும். அவர்க்குப் புறப்பொருள் காட்சிப்பொருளாம் எனவும் ஆசிரியன் உணர்த்தினான்.

இங்ஙனம் வினவினர் கருத்துக்கேற்ப நால்வகைப் படுத்துச் செவியறிவுறுப்பினும், கணபங்கம் முதலியவற்றை உடம்பட்டுக் கோடலான் எல்லாரும் முறையானே முழுதுஞ் சூனியம் என்று கோடற்குரியர் என்பது ஆசிரியன் கருத்து. அங்ஙனமாயினும் வினவினர் கருத்துக்கேற்ப ஆசிரியன் கூறிய விடைப்பொருளை உறுதியாகக் கோடலின் மதம் வேறுபட்டு நால்வராயினர். இங்ஙனம் பௌத்தமதம் நான்குங் கண்டுகொள்க இம்மதத்தார் கடவுளைப் பற்றி யாதுங் கூறினரில்லை.

## ஆருகதம்.

**இனி, ஆருகதமாவது.**—சீவனும், அசீவனும், ஆச்சிரவமும், சமுவரமும், நிர்ச்சரமும், பந்தமும், வீடும் எனப் பதார்த்தங்கள் எழுள. இவற்றுட் சீவன் அநாதி சித்தனும், முத்தனும் பெத்தனும் என மூவகைப்படும். இவற்றுள், அநாதி சித்தன் அருகக்கடவுள். முத்தன் மோகம் முதலிய பந்தத்தின் நீங்கினவன்; பெத்தன் அவற்றுட் கட்டுண்டவன். இச்சீவன் எடுத்த உடம்பளவின் வியாபகமாய் உடம்புதோறும் வெவ்வேறும்.

இனி, அசீவன், புற்கலமும் ஆகாயமும் தன்மமும் அதன்மமும் என நான்கு வகைப்படும். அவற்றுள் உருவப்பொருளான நிலம் முதலிய நாற்பெரும் பூதமும், மரம் புல்லு முதலிய நிலையியற் பொருளும், மை முட்டை முதலியவற்றிற் பிறக்கும் இயங்கியற் பொருளும் எனப்புற்கலம் அறுவகைப்படும். இவற்றிற்குக் காரணம் பரமாணுக்கள். உலகாகாயமும் உலகங்கடந்த ஆகாயமும் என ஆகாயம் இருவகைப்படும். உலகங்களுக்கு உட்படுமாகாயம் உலகாகாயம் எனவும், உலகங்கட்குப் புறத்தே எல்லையின்றி உள்ளது உலகங்கடந்த ஆகாயம் எனவும் உணர்க. தன்மம் புற்கலத்தின் வேறாய் நன்மையைப் பயப்பது. அதன்மம் தீமையைப் பயப்பது. அசீவ பதார்த்தவகை நான்கும் இங்ஙனங்கண்டு கொள்க. இவையெல்லாம் அத்திகாயம் என்னும் வாய்பாடு கூட்டி வழங்கப்படும்.

இனி, ஆச்சிரவமாவது, பொறிவழிச் சேறல்; கன்மத் தொடர்ச்சி என்பாருமுளர்.

சமுவரமாவது, அங்ஙனஞ் செல்லா மற்றடுத்து முத்திக்குக் காரணமாவது. அது நிலத்தில் எறும்பு முதலியன சாவாது மெல்லவழி நோக்கி இயங்குதலும்; இனியவை கூறுதலும், நியமவுணவும் முதலாயினவாம். நிர்ச்சரமாவது, சுடுபாறையிற் கிடத்தல் தலைமயிர் பறித்தல் முதலிய தவம்.

பந்தமாவது, இருப்புக்குடம்பை தன்னகப்பட்ட சுரைப் பழத்தை நீர் நிலையிற் கீழ்ச்செலுத்துமாறு போலச் சீவனுடைய சுதந்தரத்தை அடக்கிப் பிறவியிற் சுழல்விக்கும் மோகம் முதலிய எண்குணங்களுமாம்.

வீடாவது இருப்புக் குடம்பை தகர்ந்த வழிச்சுரைப் பழம் மேலெழுமாறு போலச் சீவன் மோகம் முதலியவற்றின் நீங்கிச் சுதந்தரம் பெற்று உலகங் கடந்து எல்லையின்றி உளதாகிய ஆகாயத்தின் மேனோக்கியே சேறல். மேலெல்லைக் கண் இருத்தல் முத்தி என்பாருமுளர்.

இவ்வெழுவகைப் பதார்த்தங்களும் அநேகாந்த வாதத்தாற் கூறப்படும். அஃதாவது, உடம்பெடுத்தற்கு முன் சீவனுண்டோ? இல்லையோ? என்று வினயவழி, உண்டாம்! இல்லையாம்! உண்டு மில்லையுமாம்! சொல்லொணுதாம்! உண்டுமாஞ் சொல்லொணுததுமாம்! இல்லையுமாஞ் சொல்லொணுததுமாம்! உண்டு மில்லையாஞ் சொல்லொணுததுமாம்! என எழுவகையான இறுத்தல் வினயவை யெல்லாம் இவ்வாறே இறுக்கப் படும். ஆம் என்பது ஈண்டுச் சற்றென்னும் பொருள் தருவதோரிடைச் சொல். சொல்லொணுதது என்பது உளது மிலது மல்லாதது என்னும் பொருட்டு என்பது. எனவே, உள்ளதும் இல்லதும் உளதிலதும் இரண்டு மல்லதும் என நான்கு பக்கமாய், இரண்டு மல்ல தென்னும் பொருட்டாகிய சொல்லாணுத தென்பதனேடு உள்ளதும் இல்லதும் உளதிலதும் என்னும் மூன்றுங் கூட்ட எழுபக்கமாயின எனக் காண்க.

பொருளியல்பு இவ்வெழுவகையுள் ஒன்ருகச் சொல்லவும் படும் சொல்ல வும் படாது என்பது கருத்தாகலின் முரணுமையுமறிக. இவ்வெழுவகை யும், ஒவ்வொன்றே பற்றிக் கூறும் ஏனைச் சமயத்தார் கோட்பாடெல்லாம் உள்ளடக்கி நிற்றலின், இங்ஙனம் அநேகாந்த வாதம் கூறுஞ் சமயமே மேற் பட்ட சமயம் என்பது அவர் கருத்து ஆருகதம் முடிந்தது.

இவருள், உலோகாயதன் காட்சி வாதி எனவும், பௌத்தன் கணபங்க வாதி எனவும், ஆருகதன் அநேகாந்த வாதி எனவும், ஏனை இருவரும் சமூ தாயவாதிகள் எனவும் உணர்க. இவ்வாறு புறப்புறச் சமய மாறுங் கண்டு கொள்க.

## புறச் சமயம்.

புறச் சமயத்தார் தார்க்கிகர், மீமாஞ்சகர், ஏகான்மவாதிகள், சாங்கியர், யோகமதத்தினர், பாஞ்சராத்திரிகள் என அறுவகைப்படுவர். இவர்கள் வேதத்தைப் பிரமாணமாகப் பொது வகையாற் கொண்டு சிவாகமங்களை நிந்திப்பர். தார்க்கிகர் வேதத்தை நேரே பிரமாணமாகக் கொள்ளாது வேதப் பொருளோடு மாறுபட்டுப் பொருட்டன்மை கொள்வர். மீமாஞ்சகர் வேதத் தின் கர்மகாண்டத்தைப் பிரமாணமாகக் கொண்டு ஞான காண்டத்தை இகழ்வர். ஏகான்ம வாதிகள் ஞானகாண்டத்தை மட்டும் பிரமாணமாகக் கொண்டு கருமகாண்டத்தை இகழ்வர். ஏனை மூவரும் தத்தம் மதத்திற்கு வேண்டுவனவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு ஏனையவற்றுக்குப் பிரமாணங் கொள்ளாது வேதத்துக்குப் புறமாகிய நூல்களைப் பிரமாணமாகக் கொள்வர். இதனல் இவ்வறுவரும் புறச்சமயத்தார் எனப்பட்டனர்.

## தருக்கம்.

இனிப், புறச்சமயம் ஆறனுள் தருக்கமாவது :—வைசேடிகமும் நையா யிகமும் என இருவகைப்படும். அவற்றுள், வைசேடிக நூலிற் கூறும் பொருளாவன, திரவியம் குணம் தொழில் சாதி விசேடம் சமவாயம் இன்மை எனப் பதார்த்தம் எழுவகைப்படும்,

இவற்றுள் திரவியம், நிலம் நீர் தீ வளி ஆகாயம் காலம் திசை ஆன்மா மனம் என ஒன்பது வகைப்படும். அவற்றுள், நிலம் முதலிய நான்கும் அநித்தப் பொருள்கள். அவற்றின் காரணங்களாகிய நால்வகைப் பரமாணுக்களும் ஆகாயம் முதலிய ஐந்தும் நித்தப் பொருள்கள். அவற்றுள் ஆகாயம் காலம் திசை மூன்றும் ஒரோவொன்றேயாய் வியாபக மாயுள்ளன. ஆன்மாக்கள் வியாபகமாய் எண்ணிறந்தனவாம். மனம் அணுவளவிற்றாய் ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாயிருக்கும். ஆன்மா பரமான்மா சீவான்மா என இருவகைப்படும. பரமான்மா முற்றுணர்வுடையவன் ; அவனாற் செய்யப்பட்டது வேதம். இனிச் சீவான் மாக்கள், சிற்றறிவினவாய் வினைக்கீடாகப் பிறந்திறந்து இன்பத் துன்பங்களை நுகர்வனவாம். ஆன்மாக்களுக்கு மனத்தோடு கூடாதவழி அறிவில்லை இங்ஙனம் திரவியம் ஒன்பதுங் கண்டு கொள்க. இனிக் குணங்களாவன, திரவியம் பற்றுக்கோடாக நிகழ்வன. அவை, உருவம் சுவை நாற்றம் ஊறு முதலியனவாக இருபத்து நான்கு வகைப் படும். அவற்றுள், புத்தி இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முயற்சி அறம் பாவம் என்னும் எட்டுக் குணமும், பாவனை என்னும் வாதனையும் சீவான்மாவுக்குச் சிறப்புக் குணங்கள். இவற்றுள், புத்தி விருப்பு முயற்சி மூன்றும் பரமான்மாவுக்குச் சிறப்புக்குணங்கள். பரமான்மாவின் குணங்களாகிய புத்தி முதலிய மூன்றும் நித்தியம். சீவான்மாக்களின் புத்தி முதலிய மூன்றும் அநித்தியம், ஏனையவும் ஓர்ந்துணர்க.

தொழிலாவன, எழும்பல் வீழ்தல் வளைதல் நிமிர்தல் நடத்தல் என ஐவகைப்படும்.

சாதியாவது, பல பொருட்குப் பொதுவாகிய தன்மை. அது பரம் அபரம் என இருவகைப்படும்.

விசேடமாவது, ஒவ்வொரு பொருட்கே உரியதன்மை, அவை, நிலவணு முதலிய பரமாணுக்களும் ஆகாயம் முதலிய ஐந்துமாகிய நித்தப்பொருள் களின் வேறு பாடுணர நிற்பனவாய்ப் பலவாம்.

சமவாயமாவது, அவயவம் முதலியவற்றிற்கு அவயவி முதலியவற்றோடு நீக்கமின்றி உளதாகிய இயைபு, அஃது ஒன்றேயாம்.

இன்மையாவது, முன்னின்மையும் அழிவுபாட்டின்மையும் என்றுமின்மையும் ஒன்றி னொன்றின்மையும் என நான்கு வகைப்படும்.

ஆக இங்ஙனம் கூறும் எழுவகைப் பொருள்களின் சிறப்பியல்பு பொது வியல்பு வேற்றியல்புகளை உணரவே உடம்பு முதலியவற்றின் வேறாகிய ஆன்மாவினியல்பு விளங்கும், விளங்கவே, உடம்பு முதலியவற்றை நானென்று எண்ணிய மித்தையுணர்வு கழியும். அது கழியவே, முயற்சி யின்மையின் அறம்பாவங்கள் இல்லையாய்ப் பிறவி ஒழியும். ஒழியவே, வரக்கடவனவாகிய துன்பங்களின்மையின் உடம்பு முகந்து கொண்ட வினைப் பயன் நுகர்ச்சியாற் கழிவுழி இறுதித் துன்பங்கெட்டு மனத்தோடு கூடுதற் கேது வின்மையின் அறிவின்றிப் பாடாணம் போற் (கற்போல்) கிடப்பதே முத்தி என்பதாம். வைசேடிக நூல் செய்தவன் கணாத முனிவன்,

இனி, நையாயிகமாவது :—வைசேடிக நூலிற் கூறியவற்றைச் சிறுபான்மை வேறு படுத்திப் பிரமாணம் பிரமேயம் முதலாகப் பதினாறுவகையான் விரித்துக் கூறுவதாம். நையாயிக நூல் செய்தவன் அக்கபாத முனிவன்.

இங்ஙனம் இருவகைப்படும் தருக்க நூலார் சிலவற்றிற்குக் கணபங்கங் கூறுமாறுவது, உண்ட உணவின் சாரமே அவயவங்களாய்ப் பரிணமித்துக் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வேறுபடுதலின் அவயவியாகிய உடம் பும் வளர்ந்துந் தேய்ந்துங் கணந்தோறும் பிறிது பிறிதாம்; அங்ஙனங் கணந்தோறும் வளர்ந்துந் தேய்ந்தும் வருதல் காணப்படாதாயினும் மழைத்தாரையால் நிறையும் பொய்கை நீரும் இறைப்பக் குறையுங் கூவல் நீரும் முடிவின் கட்காணப்படுதலின் கணந்தோறும் வளர்தலுந் தேய்தலு முடைமை பெற்றும். இவ்வாறே மண்தொடுதல் பூரித்தல் முதலியவற்றுல் நிலமும், யாற்று நீர்ப்பெருக்கு முதலியவற்றுல் கடலும், கணந்தோறும் நிறைவு குறைவுடைமையான் இன்னோரன்னவை யெல்லாம் கணபங்கமாய்ப் பிறிது பிறிது தோன்றும் எனக்கொள்வர்.

சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் தார்க்கிகரும் பரமாணு காரணவாதிகளாயினும், அவருட் சௌத்திராந்திகரும் வைபாடிகரும் சமணரும் பரமாணுக்கள் ஒருங்கு பலதொக்குக் காரியமா மென்பர். தார்க் கிகர் அவ்வாறன்றி இறைவனிச்சை வயத்தால் பரமாணுக்களிற் கிரியை தோன்றி இவ்விரண்டு பரமாணுக்கள் தம்மிற் சேர்ந்து இரட்டையணுவாய், அவை மும் மூன்று தம்முட்சேர்ந்து மும்மையணுவாய், அவை நந்நான்கு தம்முட்சேர்ந்து நான்மையணுவாய், இவ்வாறே ஒன்றற் கொன்று சினையும் முதலுமாய் முறையே தோன்றிக் காரியப்படும் என்றும், ஒடுங்குங்காலும் இறைவன் இச்சைவயத்தால் அம்முறையே ஒடுங்கும் என்றுங் கொள்வர்.

தார்க்கிகரும் சௌத்திராந்திகர் வைபாடிகரும் நிலவணு நீரணு தீயணு வளியணு எனப் பரமாணுக்கள் நால்வகைப்படும் எனக்கொள்வர். சமணர் அவ்வாறு கொள்ளாது பரமாணுக்களெல்லாம் ஒரு தன்மையனவே என்பர். இவை தம்முள் வேற்றுமை. இங்ஙனமாயினும் தார்க்கிகர், வேதநெறியினொழுகி வேதத்திற்குப் பிரமாணங் கோடலிற் புறப்புறச் சமய ளாகிய நாத்திகரோடு சேராது வைதிகருள் வைத் தெண்ணப் பட்டாரென்க. தார்க்கிக மதம் முடிந்தது.

## மீமாஞ்சை.

**இனி, மீமாஞ்சையாவது.**—வேதத்திற் கரும காண்டவாராய்ச்சி செய்தற் கெழுந்த நூலாகலின் அதுவும் வேதம் எனப்படும். அது, பன்னிரண் டத்தியாயமாகச் சைமினி முனிவனுற் செய்யப்பட்டது.

**அந்நூல் கூறும் பொருளாவது.**—வேதம் ஒருவராற் செய்யப்பட்டதன்றி அநாதியே சுயம்புவாயுள்ளது; அங்ஙனமாகலின் வேதம் பிரமாணம் எனப்படும்,

வேதத்துள்ளும் "நீராடுக", "வேள்வி செய்க," "வழிபடுக" என்றாற் போலத் தொழிற்படுத்துவனவாகிய சோதக வாக்கியங்களே பிரமாணமாம். உலகத்துச் சொற்பொருளுணரும் அவாவினராகிய இளையோர், "ஆவினை யாக்க", "மேதியை விடுக்க" என எவும் முதியோன் கூறும் மொழி கேட்டும், அதுபற்றி இயற்றும் முதியோன் செய்யுந் தொழிலினைக் கண்டும், இச்சொற்கு இது பொருள் இச்சொற்கு இதுபொருள் எனவும், இங்ஙனஞ் சொற்பொருளெல்லாந் தொழிற்படுத்துஞ் சொல்லானே உணர்தற்பாலன எனவும் உணர்ந்து கொள்வாராகலின், வேதத்தினும் அவ்வாறு தொழிற் படுத்துஞ் சொற்களே பொருள் விளக்கிப் பிரமாணமாம் என்பது தெளியப் படும்.

அங்ஙனமன்றி, "உலகந் தோன்றி ஒடுங்கும்" என்றும், "தோற்றி ஒடுக்கு தற்கு ஓர் இறைவன் உண்டு" என்றும், "இந்திரன் முதலிய கடவுளர் உளர்" என்றும், "அவர் இவ்வியல்பினர்*" என்றும் பொருளியல்பு கூறும் வாக்கியங்கள் பிரமாணமாகாவாயினும், அவை தொழிற் படுத்து வனவாகிய சோதக வாக்கியங்கட்குப் புனைந்துரை வகையால் உபகாரமாதல் பற்றிப் பிரமாண மெனக் கொள்ளப்படும்.

"இந்திராய சுவாகா", "வருணாய சுவாகா" என்றாற் போலும் வேத மந்திரங்களும் பொருளுடையவல்லவாயினும் விதிவாக்கியங்கட்கு உபகார மாதல் பற்றிப் பிரமாணம் எனப்படும்.

"சோதிட்டோமம்", "பரிமேதம்" என்றாற் போலும் வேள்விப் பெயர் களும், வேள்விகளின் வேறுபாடு முதலிய உணர நிற்றலிற் பிரமாணமாம்.

இங்ஙனம்வேதத்தின் விதிவாக்கிய மல்லாதனவும் ஒருவாற்றான் விதிக்கு உபகாரப் படுதல் பற்றிப் பிரமாணம் என உபசரித்துக் கொள்ளப்படும்.

வேதமெல்லாம் இங்ஙனம் விதியும், புனைந்துரையும், மந்திரமும் குறி யீடும் என நான்கு வகைப்படும். இவற்றுள், விதி அங்கியும் ஏனை மூன்றும் விதிக்கு அங்கமுமாம். விதிவாக்கியம் விதித்தலும், விலக்குதலும் என இரு வகைப்படும். அவைபற்றிச் செய்யும் வினையும் அறமும் பாவமும் என இருவகைத்து.

"ஆன்மாவை அறிக" என விதித்தலின் ஆன்மாக்கள் பலவாய் நித்த மாய் வியாபகமாய்ப் பிறந்திறந்திறந்து வினைகளைச் செய்து வினைப்பயன் களை நுகர்ந்துவரும். வினை செய்தவர்க்கு வினையே துறக்கம் முதலிய பயன்களை உதவும். காமியப் பயன்களைக் குறித்து வினை செய்யின் அவ் வப்பயன்களை உதவும். காமியம் வேண்டாது விலக்கியனவும் ஒழித்து வேள்வி செய்யின் அவ்வினை முத்தியை உதவும்.

இவ்வான்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா ஒருவன் உண்டு என் பதூஉம், உலகந்தோன்றி அழியும் என்பதூஉம் பொய்; உலகம் என்றும் இவ்வாறே நிலைபெறும் என்பதாம்.

இங்ஙனம் செய்யப்பட்ட சைமினி சூத்திரங்கட்குப் பாடியஞ் செய்தான் சபரமுனிவன். சூத்திரத்திற்கும் பாடியத்திற்கும் சிறுபான்மை வேறுபாடு கொண்டு பட்டாசாரியன் சூத்திரமதம் பற்றி வழிநூல் செய்தான். பட்டன் மாணுக்கனுகிய பிரபாகரன் பாடிய மதம் பற்றி வழிநூல் செய்தான். இங்ஙனமாகலின் மீமாஞ்சை மதம் இருவகைப்பட்டது.

பட்டா சாரியன், கன்மமே பயன் கொடுக்கும் என்றும், முத்தியில் நையாயிகர்போல ஆனந்த முண்டு என்றுங் கொள்வன். பிரபாகரன், கன்ம நாசத்தில் அபூருவம் என ஒன்று தோன்றி நின்று பயன் கொடுக்குமென்றும், வைசேடிகர் போல பாடணம் போறகிடப்பதே முத்தி யென்றுங் கூறுவன். பிரபாகர மதம் எனினும் குருமதம் எனினும் ஒக்கும்.

மீமாஞ்சை நூல் பன்னிரண்டத்தியாயத்துள் முதலத்தியாயம் முதற் பாதத்திற் கருமங்களுக்கு நேரே பிரமாணமான விதிவாக்கியங்கட்குப் பிரமாணம் இல்லையென வாதிகள் கூறுஞ் சங்கைகளை மறுத்து வேதம் சுயம்புவாகவிற் பிரமாணமா மென்றும், இரண்டாம் பாதத்திற் புனைந்துரை வாக்கியங்களும் மந்திரங்களுமாகிய இரண்டு விதிக்கு வேண்டப்படுந் திரவியங்களுந் துதிகளும் முதலியவற்றைத் தெரிவித்தவிற் பிரமாணமா மென்றும், மூன்றும் பாதத்தில் வேதத்தோடு முரணுது மனு முதலிய ஆன்றோராற் செய்யப்பட்ட மிருதி முதலியவற்றிற்கு மூலவேதம் உண்டென்று வழியளவையான் உணரப்படுதலின் அவை பிரமாணமாமென்றும், நாலாம் பாதத்தில் விதி வாக்கியத்தில் அகப்பட்ட வேள்விப் பெயர்கள் கரும வேறுபாடும் மாட்டேற்றும் அநுவாதமும் முதலியன உணர நிற்றலானும் கருமத்திற்குப் பெயராதலானும் பிரமாணமாமென்றும் இவ்வாறு பிரமாணமாமாறு உணர்த்துதலிற் " பிரமாணவியல் " என்னும் பெயர்த்து.

இரண்டாம் அத்தியாயம் அங்ஙனம் பிரமாணமாகிய வேதத்திற் பெறப்பட்ட கருமங்கள் வேதவாக்கியங்களிற் கூறும் பகுதிவினை வேறுபடுதலும், ஒரு வினை பலகாற் கூறுதலும், தொகை கூறுதலும், வேறு வேறு குறியிடுதலும், குண வேறுபாடு கூறுதலும், வேறு பிரகரணத்திற் கூறுதலுமாகிய இவற்றான் ஒன்றற் கொன்று வேறுபாடுடைமை தெரிவித்தலிற் " கரும பேதவியல் " என்னும் பெயர்த்து,

மூன்ரு மத்தியாயம், அங்ஙனம் பலவேறு வகைப்பட்ட கருமங்கட்குச் சுருதி இலிங்கம் வாக்கியம் பிரகரணம் தானம் குறியீடு என்னும் இவற்றானே இதற்கு இஃது அங்கம் எனவும், இஃது அங்கி எனவும், அங்கமுமங்கியுமாம் முறைமை கூறுதலின் " அங்காங்கியியல் " என்னும் பெயர்த்து. தலைமைப் பொருள் அங்கியுந் தலைமையில் பொருள் அங்கமும் எனக் கொள்க.

சுருதி முதலியவற்றுள் சுருதியாவது, வேறென்றனை அவாவாது தான் கருதிய பொருளைத்தானே தெரிவிப்பது. அது விதிக்குஞ் சொல்லும், குறியீட்டுச் சொல்லும், விவகரிக்குஞ் சொல்லும் என மூவகைப்படும்,

இலிங்கமாவது, ஆற்றலாற் பொருளை உணர்த்துவது. அது சொல்லாற்றலும் பொருளாற்றலும் என இருவகைப்படும். ஒரு மந்திரத்தின் வருந்தொழில்பற்றி அத்தொழில் நிகழுங் கருமத்திற்கு அம்மந்திரம் அங்கமென்பது சொல்லாற்றலாற் பெறப்படும். அவியினைக் கருவியால் சுருவத்தால் கையால் வாங்குக எனப் பொதுப்படக் கூறியவழி, கருவி இறைச்சிக்கும் சுருவம் நெகிழ்ந்த பொருட்கும் கைபுரோடாசம் முதலியவற்றிற்கும் அங்கம் என்பது பொருளாற்றலாற் பெறப்படும்.

வாக்கியமாவது, இங்ஙனஞ் சுருதியும் இலிங்கமுமின்றிச் சொற்றொடர்புபற்றி உணரவருவது.

பிரகரணமாவது, "சோதிட்டோமம்" வேட்க என்றாற்போலும் விதி வாக்கியங்களாற் பொதுப்பட உணர்ந்து சிறப்பானறியப்படாத கன்மங்களான் அவாவப்பட்டு இவ்வாறு செய்யற்பாற்றென வகுத்துக் கூறுவது. அது பெரும் பிரகரணம் என்றும், இடைக்கட்பட்ட பிரகரணம் என்றும் இரு வகைப்படும்.

தானமாவது, நிரனிறையிடமும், அண்மையிடமும் என இருவகைப்படும். அவற்றுள் அண்மை, சொல்லினண்மையும் அநுட்டானத்தினண்மையும் என இருவகைத்து.

குறியீடாவது, காரணத்தான்வரும் பெயர். அது வேத மரபு பற்றிய பெயரும், உலகமரபு பற்றிய பெயரும் என இருவகைப்படும். இவ்வாறு சுருதி முதலியவற்றின் இயல்பு உணர்ந்து கொள்க.

நாலாமத்தியாயம், இங்ஙனம் அங்கமும் அங்கியுமாகிய கன்மங்களை அனுட்டிப்பிக்கும் பிரயோகமாமாறு கூறுதலிற் "பிரயோகவியல்" என்னும் பெயர்த்து. அங்கம் பிழைத்தவழி அங்கியின் பொருட்டு வேறங்கம் வேண்டப்படும்; அங்கி பிழைத்தவழி அங்கத்தின் பொருட்டு வேறங்கி வேண்டப்படுவதின்று; அங்கம் பிழைத்தவழி அதற்கு அங்கி பல உள வாயின் யாதொன்றற்கு அங்கமாயே மற்றொன்றற் கங்கமாம். அதன் பொருட்டே வேறங்கம் வேண்டப்படும்; மற்றொன்றன்பொருட்டு வேண்டப்படுவதின்று என்றாற்போலத் தெரிவிப்பது பிரயோக முறை என்க.

அஞ்சாமத்தியாயம், ஒரு பிரயோகத்துட்பட்ட அங்காங்கிகளை அநுட்டிக்கும் முற்பிற்பாட்டு முறைமையைச், சுருதி முறைமை பொருண் முறைமை பாடமுறைமை முதலியனபற்றித் தெரிவித்தலின் "முறைமைப் பாட்டியல்" என்னும் பெயருடைத்து.

இங்ஙனம் இரண்டாவதில், உற்பத்தி விதியான் அறியப்படுங் கன்ம பேதமும், மூன்றாவதில் உபகரிக்கும் விதியான் அறியப்படும் அங்காங்கி இயல்பும், நான்கினும் ஐந்தினும், பிரயோகிக்கப்படுவனவற்றின் விதியான் அறியப்படும் பிரயோகமும் முறைமைப்பாடுந் தெரித்துணர்த்திய பின், ஆறாமத்தியாயம், பயன் கூறுமுகத்தான் அதிகாரிகளாவாரைத் தெரிவித்தலிற் "பயனியல்" என்னும் பெயர் பெற்றது; அதிகார இயல் எனினுமாம்.

இங்ஙனம் நால்வகைப்படும் எடுத்தோத்து விதிகளை ஆராயுமாறு ஆறத்தியாயத்துள் உணர்த்தி, மேல் ஏழாவது முதல் பத்தாவது இறுதியாகவுள்ள நான்கு அத்தியாயங்களான் மாட்டேற்றுவிதி ஆராயுமாறு உணர்த்தப்பட்டது. இவ்வாறு செய்யற்பாற்று என எடுத்தோதுவது எடுத்தோத்து விதி எனவும், அதுபோலச் செய்க என மாட்டெறிவது மாட்டேற்று விதி எனவும் உணர்க.

அவற்றுள் ஏழாமத்தியாயம், ‘‘ அதுபோலச் செய்க ’’ என்னும் வசனத்தானும், அங்ஙனம் வசனமில்லவற்றிற்குப் பெயரொருமையானும், அதுவுமில்லவற்றிற்கு இது செய்க என விதித்தல்லான் அது செய்யுமாறு யாதானும் ஒன்றனோடு மாட்டெறியும் வசனம் உண்டென வழியளவையா லுணரப்படும் விதியானும் மாட்டெறியுமா றுணர்த்தி, எட்டாமத்தியாயம், அங்ஙனம் பொதுப்பட்ட வழியளவையான் உணரப்படுவனவற்றுள் எது போல் எது செய்யப்படும் என்று அவாயவழிச் சொல்லொப்புமை பொருளொப்புமை பற்றி இன்னது போலின்னது செய்யப்படும் எனத் தெரிந்தெடுத்துணர்த்துதலின் ஏழாவதும் எட்டாவதும் ‘‘ மாட்டேற்றியல் ’’ என்னும் பெயரினவாம்.

ஒன்பதாமத்தியாயம், அங்ஙனம் மாட்டெறிந்தமைபற்றிப் பகுதிப் பொருளிற் செய்யுங்காரியம் விகுதிப் பொருளிற் செய்வுழிப் பகுதியிற் கூறும் மந்திரமும் சாமமுந் தொழிலும் விகுதிப் பொருளுக்கேற்ப வேறுபடக் கொள்ளுந்திறம் நியாயம்பற்றி ஊகிக்குமாறு உணர்த்துதலின் ‘‘ ஊகவியல் ’’ என்னும் பெயர்த்து.

பத்தாமத்தியாயம், அங்ஙனம் ஊகித்த பின்னர் மாட்டெறிந்தவற்றுள் அவ்விடத்துக்கு உரியன ஆகாதவற்றை நியாயம்பற்றி விலக்குமாறு உணர்த்துதலின் ‘‘ விலக்கியல் ’’ என்னும் பெயர்த்து.

இங்ஙனம் பத்தத்தியாயத்திலும் எடுத்தோத்து விதியினும் மாட்டேற்று விதியினுந் தெரித்துணர்த்த வேண்டியவற்றைத் தெரித்துணர்த்திய பின்னர் ஏனை இரண்டத்தியாயத்திலும் இவ்விருவகைக்கும் பொதுவாகிய தந்திரமும் பிரசங்கமுமாறு உணர்த்துதலின், பதினோராமத்தியாயம் ‘‘ தந்திரவியல் ’’ என்னும் பெயர்த்து. பன்னிரண்டாமத்தியாயம் ‘‘ பிரசங்கவியல் ’’ என்னும் பெயர்த்து.

தந்திரமாவது, கருமஞ் செய்யுங் காற்றலைமை வினை பலவுளவாய் ஒரு தேசமும் ஒரு காலமும் ஒரு கருத்தாவு மாயவழி, அவற்றிற் கெல்லாம் பொதுப்பட அங்கவனுட்டானம் ஒரு காற்செய்ய அமையும் என்றாற்போல்வது. அங்ஙனமன்றி மறித்துஞ் செய்யற்பாலதாதலை அவாபம் என்பர். பிரசங்கமாவது, முதற் கண்வந்த ஆசிரியன் அமுது செய்தற் கட்ட அறுசுவையடிசில் ஆசிரியனை யன்றியும் ஒரு தலையான் அங்ஙனம் அட்டிடுதற் குரியனாய்ப் பின்பு வந்த மருகனுக்கும் உபகாரமாதல் போல, ஒன்றன் பொருட்டுச் செய்தவினை மற்றொன்றற்கும் உபகாரமாதல். ஆசிரியனுக்கட்ட அடிசில் ஆசிரியனுடன வந்தவர்க்கும் உபகாரமாதல் பிரசங்க மன்றென்பது.

மீமாஞ்சை நூலிற் பன்னிரண்டத்தியாயமும் நுதலிய பொருள் இங்ஙனம் தொகுத்துணர்த்தப்பட்டது. இவற்றிற்கு உதாரணம் விரிப்பிற் பெருகும். நையாயிக நூலிற் கூறுந் தருக்கமும் மீமாஞ்சை நூலிற் கூறும் நியாயங்களும் எல்லா நூல்கட்கும் உபகாரமாம் எனக் கொள்க. மீமாஞ்சை மதம் முடிந்தது.

## ஏகான்மவாதம்.

**ஏகான்ம வாதமாவது.**—மாயாவாதமும், பாற்கரிய வாதமும், கிரீடாப் பிரமவாதமும், சத்தப்பிரமவாதமும் என நான்கு வகைப்படும்.

## மாயாவாதம்.

**அவற்றுள், மாயாவாதமாவது.**—சச்சிதாநந்தமாய் நித்தமாய் வியாபகமாய் நிற்பது பிரமம். பரமார்த்தத்திலே சத்தொன்றே மெய்ப் பொருள்; ஏனைய எல்லாம் பிரமத்தின் விவர்த்தனமாய் சிப்பியில் வெள்ளிபோல் அவிச்சையினுற் காணப்படுவன வாகலிற் பொய். இங்ஙனம் தோன்றும் உலகத்திற்கு முதற்காரணமாகிய மாயை, பிரமம்போலச் சத்துமன்றி முயற் கோடுபோல அசத்துமன்றி அநிருவசனமாயிருக்கும். அநிருவசனம் என்பது சொல்லொணுதது என்னும் பொருட்டு. இந்த மாயைக்கு வேருகிய பிரமரூபமே யான் என வேதாந்த ஞானத்தால் அறிவதே முத்தி என்பதாம்.

## பாற்கரியவாதம்.

**பாற்கரிய வாதமதவது.**—முன் கூறப்பட்ட பிரமமே சடமுஞ் சித்துமாகிய உலகங்களாய்ப் பரிணமித்தது. அங்ஙனம் பரிணமித்து விகாரப்பட்டமையை அறியாமையினுற் பந்தமாயிற்று. பரமார்த்தத்தில் ஒரு பொருளே. வேதாந்த ஞானத்தான் உடம்பிற்கு வேருகிய ஆன்மரூபம் விளங்கும். அதுவே பரப்பிரமம் என்றறிந்து அதன்கண் இலயித்தலே முத்தி என்பதாம்.

## கிரீடப்பிரமவாதம்.

**கிரீடப்பிரம வாதமாவது.**—முன் கூறப்பட்ட பிரமமே நான். நான் ஒரு படித்தன்றிப் பலவேறு வகைப்பட்ட விகாரப் பொருளோடுகூடிப் பல வாற்ருன் விளையாடுகின்றேன் என்று இவ்வாறறிவதே முத்தி என்பதாம்.

## சத்தப்பிரமவாதம்.

**சத்தப்பிரம வாதமாவது.**—காரணமாகிய பரப்பிரமம் இறுதிக்காலத்திற் சத்தவடிவிற்ருயிருக்கும். அஃது அவிச்சையினுற் சடமுஞ் சித்துமாய உலகங்களாய் விரியும். முடிவின்கட்சத்தமாத்திரையே உள்ளது என்று இங்ஙனம் அறிவதே முத்தி என்பதாம். இங்ஙனம் நால்வேறு வகைப்பட்ட ஏகான்மவாத நூல் செய்தவன் வியாத முனிவன்.

## சாங்கியமதம்.

**இனிச், சாங்கிய மதமாவது.**—மூலப்பகுதி, நித்தியமாய் வியாபகமாய்ச் சடமாய் எல்லாப் பொருட்குங் காரணமாய் முக்குணங்களும் ஒப்பநின்ற அவதாரமாய் அருவாய் உள்ளது. இஃது இருபத்து நாலாந்தத்துவம். இதன் கட்டோன்றும் காரியம் புத்தி முதல் நிலமீறுன இருபத்துமூன்று தத்துவமுள. இத்தத்துவம் இருபத்துநான்கிற்கும் வேருய் நித்தமாய் வியாபகமாய் அருவாய்ப்பல சாங்கியமாய் அறிவதுஞ் செய்வது மின்றி அறிவுமாத்திரமாய் ஒன்றற்குக் காரணமாதலுங் காரியமாதலுமின்றி நிற்கும் ஆன்மாக்கள் இருபத்தைந்தாந் தத்துவமெனப்படும். இவ்விருபத்தைந்தாந் தத்துவமாகிய புருடன் முத்தியினும் பெத்தத்தும் ஒரு தன்மையனேயாம். புருடனுக்கு மலினமெனபதில்லை. தாமரையிலை நீர் போல் ஒட்டற்று நிற்பன். அநாதியே புத்தியைச் சார்ந்த அவ்விச்சை வயத்தாற் பெத்தனெனப்பட்டு இன்பத்துன்ப உணர்வு தோன்று நின்றது. புத்தியாவது மூலப்பகுதியின் பரிணமம்; அது வேமான் என்றும் அந்தக் கரணம் என்றுங் கூறப்படும். அது பொறி வழியான் ஞானமாய்ப் பரிண மித்து விடயத்திற் செல்லும்; புருடன் செய்வானென்பதும் புத்தி அறியு மென்பதும் வேற்றுமை யுணராமையான் என்பது; மூலப்பகுதியையும் புருடனையும் பகுத்துணரவே அவிச்சை நீங்கும்; அதுவே முத்தி எனப்படும். ஆன்மாக்களுக்கு வேருய் இறைவனெருவன் உண்டென்பது பொய்என்ப தாம். இந்நூல் செய்தவன் கபில முனிவன். இதனுட் கூறுஞ் சற்காரிய வாதம் சைவம் முதலிய சற்காரியவாத நூல்கட்கெல்லாம் உபகாரமாம். சாங்கிய மதம் முடிந்தது.

## யோகமதம்.

**யோக மதமாவது.**—நிலம் முதற் புருடனீறுகிய இருபத்தைந்து தத்துவமும் பெத்த முத்திகளும் நீதிக்கேதுவாம். இருபத்தாருந் தத்துவம் இறைவன் ஒருவனுளன்; அவன் முற்றுணர்வுடையனுய்ச் சாத்திரங்களை அருளிச் செய்து புருடருக்கு ஞானத்தை அறிவுறுப்பானுகலின், இவ்வான் மாக்களுக்கு வேறென்றுணரப்படும் என்பதாம். இந்நூல் செய்தவன் பதஞ்சலி முனிவன். யோகமதம் முடிந்தது.

## பாஞ்ச ராத்திரமதம்.

**இனிப் பாஞ்சராத்திரமாவது.**—இருபத்து நாலாந்தத்துவமாகிய குணதத்துவத்தின் மேல் இருபத்தைந்தாந் தத்துவம் வாசுதேவனென்று ஒருவனுளன். அவனே பரம் பொருள். அவனிடத்திநின்றுங் கண்ணனும், அநிருத்தனும், மகரத்துவசனும், இரளெகிணேயனும் என நால்வர் உலகங்களைப் படைத்தற் பொருட்டுத் தோன்றினர். இந்த நால் வகை வியூகங்களால் சடமுஞ்சித்துமாகிய எல்லா உலகமும் படைக்கப்படைக் கப்பட்டனவாகலான், எல்லாம் வாசுதேவன் பரிணமமேயாம். இங்ஙனம் கூறும் பாஞ்சராத்திரத்தினன்றி வேதங்களினுறுதிப்பயனுண்டாகாது.

ஆதலாற் பாஞ்சராத்திர முறையே தீக்கை பெற்று வாசுதேவனை வழிபட்டு வாசுதேவனுருவில் இலயமாதலே முத்தி என்பதாம். இந்நூல் செய்தவன் வாசுதேவன் என்க. பாஞ்சராத்திரமதம் முடிந்தது. இவ்வாறு புறச் சமயமாறுங் கண்டுகொள்க.

## அகப்புறச் சமயம்.

**அகப்புறச் சமயத்தார்.**—பாசுபதர், மாவிரதர், காபாலர், வாமமதத்தினர், வைரவமதத்தினர், ஐக்கியவாத சைவர் என்னும் அறுவருமாவர். இவருள்ளே பாசுபதர் முதலிய ஐவரும் வேதம் சிவாகமம் இரண்டையும் பொது வகையாற் பிரமாணமாகக் கொள்ளினும், அவ்வேதம் சிவாகமம் இரண்டற்கும் வேறாகிய பாசுபதம் முதலிய நூல்களைச் சிறப்புவகையாற் பிரமாணங் கொள்வர். ஐக்கியவாதசைவர் வேதம் சிவாகமம் இரண்டையும் சிறப்புவகையாற் பிரமாணமாகக் கொண்டு அவற்றில் விலக்கிய வற்றை நீக்கி விதிக்கப்பட்டவற்றைச் செய்வராயினும், ஆணவ மலம் ஒன்று உளது என்பதை மறுத்து அதனுண்மையைச் சாதிக்குஞ் சிவாகமங்களை இகழ்வர். ஆதலால் இவ்வறுவரும் அகப்புறச் சமயத்தார் எனப்பட்டனர்.

## பாசுபதம்.

**இனி, அகப்புறச் சமயம் ஆறனுள் பாசு பதமாவது.**—ஆன்மாக்கள், பலவாய் நித்தமாய் வியாபகமாய்க் காரிய காரணக் கூட்டுறவாற் றோன்றும் ஞானத்தாற் றனித்தனி வேறாயுள்ளன. இவ்வான்மாக்களுக்கு ஆணவ மலம் என்பதொன்றில்லை. மாயை, கன்மம் என்றிரண்டாற் பந்த முற்று இன்பத்துன்பங்களை அனுபவிக்கும். இவற்றின் உவர்ப்புத் தோன்றிச் சாத்திர முறையானே தீக்கை பெற்றவன் பால் ஈசனுடைய ஞானம் போய்ப் பற்றும். அப்போது, குடும்பத்தின் பாரம் புத்திரர்பால் வைத்தொழித்துத் துறவறத்திற் செல்வார் போல, ஈசனுந்தன்னுடைய குணங்களை அவன்பாற் பற்றுவித்துத் தான் அதிகாரத்தினொழிவுபெற்று இருப்பன் என்பதாம்.

## மாவிரதம்.

**மாவிரதமாவது.**—மேற்கூறிப் போந்த இயல்பையுடைய ஆன்மாக்கள் அவ்வாறே பந்தமுற்றுச் சுகதுக்கங்களை அனுபவிக்கும். சாத்திரத்திற் கூறும் முறையே தீக்கை பெற்று எலும்புமாலையணிதல் முதலிய சரியைகளின் வழுவாதொழுகினவர் முத்தராவார். முத்தருக்குச் சிவனோடுசம மான எல்லாக்குணங்களும் உற்பத்தியாம் என்பதாம்.

## காபாலம்.

**காபாலமாவது.**—ஆன்மாக்களியல்பும் பந்தவியல்பும் மாவிரதர் கொண்டவாறேயாம். சாத்திர முறையே தீக்கை பெற்றும் பச்சைக்கொடி ஒன்று கைக்கொண்டு நாடோறும் மனிதர் தலையோட்டில் ஐயமேற்றுண்பர்.

உன்மத்தராய்ச் சிவனுவேசித்தலால் எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவ சமமாவர் என்பதாம். இம் மூவரும், முறையே சங்கிராந்த சமவாதி எனவும், உற்பத்திவாதி எனவும், ஆவேசவாதி எனவு முணர்க. இம் மூன்று மதமுஞ் செய்தார் முறையே மாயை, வித்தை, காலம் என்னுந் தத்துவங்களில் வைகும் உருத்திரர் மூவர் எனக் கொள்க.

## வாமம்.

**இனி, வாமமாவது :** பாற்கரியன் கூறியவாறே சடமுஞ் சித்துமாகிய அனைத்துலகும் சத்தியின் பரிணுமமே. வாம நூலில் விதித்த முறையே ஒழுகிச் சத்தியில் இலயித்தலே முத்தி என்பதாம். இந்நூல் செய்தார் சித்தபுருடர். சத்திதத்துவத்தில் வைகும் ஓரான்மாவாற் செய்யப்பட்டது சுத்தசாத்தம் என்றறிக.

## வைரவம்.

**இனி, வைரவமாவது :** பெரும்பாலும் வாமமதத்தோடொத்துச் சிறு பான்மை ஆசாரங்களான் வேறுபட்டு வயிரவனே பரம்பொருள் எனக் கொண்டு வைரவ பதத்திற் சேர்வதே முத்தி என்பதாம்.

## அயிக்கிய வாதசைவம்.

**இனி, அயிக்கியவாத சைவமாவது .**—ஐக்கியவாத சைவர் ஆணவமலம் என்பதொன்றில்லை, மாயையுங் கன்மமுமாகிய இருமலமேயுள்ளன. கடவுள் ஆன்மாக்கள் முன் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்றபடி தனு கரண புவனபோகங்களைக் கொடுப்பார். அவைகளைக் கொண்டு ஆன்மாக்கள் இன்பத்துன்பங்களை அனுபவிப்பர். இப்படி எல்லாக் கன்மங்களுந் துலைபுகு பொருள்போல நேரொத்த பொழுது கடவுள் குருமூர்த்தியாய் எழுந்தளித் திருவருள் புரிந்து அக்கன்மங்களெல்லாவற்றையும் நீக்கியருளுவர். அவர் செய்யுந் தீக்கையினுல் அதன்பின்பு மாயை கன்மங்கள் வந்து பொருந்தா. அந்நிலையில் ஆன்மாக்களுக்கு முன்புள்ள பேரறிவே வெளிப்பட்டுத் தோன்ற ஆன்மா தன்னறிவையே தான் பெற்றுப் பேரறிவாளனும் என்பர்.

## அகச்சமயம்.

**அகச் சமயத்தார்.**—பாடாண வாத சைவர், பேதவாத சைவர், சிவசம வாத சைவர், சிவசங்கிராந்தவாத சைவர், ஈசுவரவவிகார வாத சைவர், சிவாத்துவித சைவர் என அறுவகைப்படுவர். இவர் சித்தாந்த சைவரோடு ஒப்பப் பதி முதலிய ஆறு பதார்த்தங்களையும் ஒப்புக்கொண்டு, அவ்வப் பொருள்களுக்குக் கூறும் பொது வியல்பு மாத்திரையே கொண்டு தன்னியல்பு கொள்ளாது மாறுபடுவர். ஆதலால் இவ்வறுவரும் அகச் சமயத்தார் எனப்பட்டனர்.

**பாடாண வாதமாவது.**—ஆன்மாவிற்கு ஆணவமலம் குணம்போலச் சகசமாய் அநாதியேயுள்ளது. அதனால் மாயை கன்மங்கள் ஆன்மாவைத் தலைக் கூடும். இறைவன் இருவினைக் கீடாகச் சரீரங்களைக் கொடுப்பன்; ஆன்மா அவற்றைப் பொருந்தி இன்பத்துன்பங்களை நுகரும்; அப்பொழுது கண்ணொளியைக் காசபடலம் மறைத்தாற் போல ஆன்ம அறிவை ஆணவ மலம் மறைக்கும்; அதனாற் பிறவித்துன்பம் அதிகரிக்கும்; பாச ஞான மெல்லாந் தன்கீழ் வியாப்பிய மென்றறிந்து நீங்குதன் மாத்திரையே முத்தி; முத்திபெற்ற வழியும் ஆன்மாச் சகசமலம் நீங்குதலின்றிச் சுட்டறி வுஞ்சுக துக்க அநுபவமும் அற்று பாடாணம் போற்கிடக்கும் என்பதாம்.

**பேதவாத மாவது.**—மும்மலங்களுஞ் செம்பிற் களிம்பு போல ஆன் மாக்களுக்கு அநாதியே உள்ளன. அவற்றால் ஆன்மாச் சுக துக்கங்களை அனுபவிக்கும். சேய்மைக்கட் சென்ற ஒருவனிழல் உச்சிப்போதில் அங்ஙனஞ் சேறலொழிந்து அவனடியில் வந்தொடுங்கினாற்போல, கரணங்களிற் சென்ற தன்னறிவு பக்குவம் வந்துழி அங்ஙனஞ் சேற லொழிந்து தன்மாட்டு வந் தொன்றி நிராதாரமாய் நிற்கும். இரச குளிகையினாற் செம்பு, களிம்பு நீங்கிப் பொன்னாய வாறு போல ஆன்மாவும் இறைவன் திருவருளால் மும் மலங்களும் நீங்கிப் பெறுவானும் பேறுமாயிருக்கும். அதன் மேலும் அடிமையாதலில்லை என்பதாம்.

**சிவசம வாதமாவது.**—பதிஞானம் பசுஞானம், பாசஞானம் என்னும் மூன்றும் அநாதியே உள்ளன; பாச ஞானமாகிய இந்திரியங்கள் விடயங் களை விளக்கப் பசு ஞானம் அவற்றைப் புசிக்கும்; இவ்விரு ஞானங்களும் நீங்கிய ஆன்மாச் சுவாலையின்றிக் கிடக்குந் தழல்போல ஒன்றையுஞ் சுட்டி யறியாது அறிவு மாத்திரையாயிருக்கும்; அப்பொழுது, வேட்டுவன் புழுவை எடுத்துக் கொள்வது போலப் பதி ஞானம் ஆன்மாவை எடுத்துக்கொள்ளும். புழு வேட்டுவனை நினைத்து அதன் வடிவாதன் மேலும் அதன்றொழிலையும் இயற்றி நிற்றல் போல, ஆன்மாவும் அப்பதியை நினைந்து அதன் வடிவாதன் மேலும் அதன்றொழிலையும் இயற்றி நிற்கும் என்பதாம்.

**சிவசங்கிராந்த வாதமாவது.**—ஆன்மாவின் சந்நிதியிற் காந்தபசாசம் போல உடல் இயங்குழி அதன்கணின்று கருவிகளை விடயங்களை அநுபவிக் கும். மலம் நீங்கும் வழிக் கண்ணாடியில் முகவொளி தோற்றுமாறு போல முதல்வன் திருவருள் ஆன்மாவின் மாட்டுச் சங்கிரமித்துத் தோன்றும். அவ்வழி உப்பளத்தி லிட்டவை யெல்லாம் உப்பாமாறுபோல ஆன்மாச் சிவ மேயாய் அவ் வான்மாவின் சந்நிதியில் அறிவனவாகிய பசுகரணங்களுஞ் சிவகரணங்களாய் மாறிச் சிவத்தை அறியும் என்பதாம்.

**ஈசுவரவவிகார வாதமாவது.**—பலதுளையுடைய குடத்திலேற்றிய தீபம் போல நவத்துவார முடைய உடம்பில் ஆன்மா அறிவாய் நிற்கும். நிற்பி னும் அவ்வப்பொறிகளளவளாய் அவ்வவற்றைக்கூடி அறியும். அதுமல பரிபாகமுஞ் சத்திநி பாதமுஞ் சேர்ந்தவழி முதல்வன் திருவருளால்

ஞானத்தைப் பெற்று, வெய்யிலிற்றிரிந்தா னொருவன் மரநிழல்கண்டு ஆறுவதுபோல அம்முதல்வன் றிருவடி நிழலைத் தலைக்கூடும். இங்ஙனங் கூடிய வழி, உயிர் முதல்வனது உபகாரத்தை அவாவாது என்பதாம்.

**சிவாத்துவித சைவமாவது.**—பதிபசு பாசங்களதியல்பும், தத்துவங்களுக்குத் தோற்ற ஒடுக்கங்களும், அஞ்சவத்தைப் படும் வேறுபாடுகளும், அனைத்துஞ் சித்தாந்த சைவரோடொப்பக் கொண்டு, பசுபாசங்கள் பதிவியாபகத்தின் வியாப்பியமாய் நிற்பனவன்றித் தனித்த முதலன்மையின் முப்பொருட்குந் தம்முள் வேற்றுமை குணகுணி கட்குத் தம்முளுளதாகிய வேற்றுமை போல உட்பேதமேயன்றிப் புறப்பேத மின்மையான் மரத்தில் வியாப்பியமான கவடுகோடு முதலியன எல்லாம் மரமேயாமாறு போலச் சதசத்தும் அசத்துமாகிய அனைத்தும் சத்தெனவேபடும். படவே, பதித்தன்மையின் வேருய்ப் பசுவுக் கறியுந்தன்மை உண்டென்னில் தனித்த முதலெனப்பட்டு வழுவாமாதலால் சத்தாகிய பதிப் பொருளே ஆன்மாவினிடமாக நின்றறியும். அனைத்துஞ் சத்தாய வழிச்சத்தின் வேருய்ப் பெறப்படும் பொருளொன்றின்மையின் அஃது அறியுமாறு யாங்ஙனம் ? எனக்கடாயினுர்க்குப் புறப்பேதமாய் இன்ருயினும் அகப்பேதமாகி அசத்தாகிய பாச முண்மையின் அதனை அஃதறிதல் கூடும் என்பதாம்.

மேற்கூறியவற்ருல் புறமதக் கொள்கைகள் ஒருவாறு விளங்கும். சுருங்கக் கூறின் புறப்புறச் சமயத்தாருக்குக் கடவுட் கொள்கையில்லை. உலோகாயதன் காட்சிவாதி ; கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் நாத்திகக் கொள்கை யுடையவன். இம்மதம் இக்காலத்து உண்டோ என ஐயுறலாம். என் இல்லை ? எத்துணையோ மக்கள் இக்கொள்கையுடன் வாழ்ந்து வருகிருர்கள். அவர்கள் இக் கொள்கைகளைப் படித்தறிந்து அதன்படி நடந்தாரில்லை ; அப் பெயர் சூட்டிக்கொண்டாருமில்லை. அவர்கள் நிலை உலோகாயதரை ஒத்துள்ளது. பௌத்தர் ஆருகதர் பண்பாடும் செய்கையும் ஆகியவற்றை யெல்லாம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரங்களில் ஆங்காங்கே கூறியிருப்பது கொண்டு அறியலாம்.

புறச் சமயத்தாரில் தருக்கமதத்தார் அறிவின்றிக் கற்போல் கிடப்பதே மூத்தியென்பர், மீமாஞ்சகர் வினையே முத்தி என்பர், ஏகான்மவாதி தானே கடவுள் என்பர், சாங்கியரும் கடவுள் இல்லை யென்பர். யோகமதத்தினரும், பாஞ்சராத்திரிகளும் இறைவன் உண்டென்னுங் கொள்கையுடையவர்.

அகப்புறச் சமயம் ஆணவமலத்தை ஒப்புக்கொள்வதில்லை. அகச்சமயத்தார் ஆன்மாமுத்தி பெற்ற வழியும் சகசமலம் நீங்குவதில்லை என்று கூறுவர்.

இச் சமயக் கொள்கைகளை நமது சைவ சித்தாந்தம் இகழ்வதில்லை. இம் மதங்களேல்லாம், சமய அரசாக வீற்றிருக்கும் சைவ சித்தாந்தத்தை உணருவதற்குப் படித்துறைகளாக அமைந்துள்ளன எனக்கூறுவர் பெரியோர். எத்திறப்பட்ட மதக்கொள்கை யுடையார்க்கும் சிவபெருமானே அருள் செய்கின்ருர் என்பது 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொரு

ளாய்' எனவும், "யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகியாங் கே, மாதொருபாகனார் தாம்வருவர்" எனவும்வரும் சிவஞானசித்திப் பாடலடிகளாலும், "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாமே" என்னும் திருநாவுக் கரசர் தேவாரத்தாலும் புலனாகும்.

காணப்பட்ட உலகத்தைக் கொண்டே காணப்படாத கடவுளை உணர்ந்து கொள்ளலாம்; உலகம் தோன்றி நின்று அழியக்கூடியது; உலகைப் படைத்தற்கு நிமித்தகாரணனாயிருப்பவன் இறைவன்; அவனே காப்பவ னும் அழிப்பவனும், எனச்சைவசித்தாந்தம் கூறுகின்றது. மேலும் பசுக் களாகிய உயிர்கள் எண்ணில்லாதன எனவும் அவற்றை அநாதிகாலந் தொட்டு ஆணவாதிமலங்கள் பற்றிக் கொண்டுள்ளன வென்றும், அவற்றை ஈடேற்றும் பொருட்டே இறைவன் தனுகரணபுவன போகங்களைக் கொடுத்து அவ்வுயிர்களுக்கு இருவினை யொப்பும் மலபரிபாகமும் வந்தவிடத்துத்தாமே குருவாக எழுந்தருளிவந்து உபதேசஞ்செய்து, மலமகற்றி ஞானத்தை நல்கி ஆனந்தம் பொழிந்து திருவடிமுத்தியைத் தந்தருளுகிறான் என்றும் கூறுகின்றது. இவற்றின் விரிவையெல்லாம் சித்தாந்த நூல்களிற் கண்டு மகிழ்க. இந்நூல்கள் மும்மலமுடைய நம் போன்றவர் ஓதி உய்யும் பொருட்டே எழுந்ததாகும் என்பதைக் கீழ்வரும் சிவப்பிகாசங் கூறுமாற் றான் உணர்க :—

"மூவகையா ருயிர்வர்க்க மலத்தார் கன்ம
மூலமலத் தார்மூன்று முடையா ரன்றே
தீவகமா மெனவுருவாய் வந்து நாதன்
திருநோக்காற் பரிசத்தாற் றிகழும் வாக்கால்
பாவனையால் மிகுநூலால் யோகப் பண்பால்
பரவிவரு மவுத்திரியாற் பாச நாசம்
மேவவரு ளுதவுமவுத் திரியிரண்டு திறனும்
வியன்கிரியை ஞானமென விளம்பு மாறே"

## மேற்கோளாகக் காட்டப்பெற்ற நூல்கள்

1. திருஞானசம்பந்தர் தேவாரம்.
2. திருநாவுக்கரசர் தேவாரம்.
3. சுந்தரர் தேவாரம்.
4. திருவாசகம்.
5. சிவப்பிரகாசம்,
6. சிவஞான சித்தியார்.
7. உண்மை விளக்கம்.
8. சிவஞானபோதம்.
9. தாயுமானவர் பாடல்.
10. பட்டினத்தார் பாடல்.
11. திருமந்திரம்.
12. தத்துவப்பிரகாசம்.
13, தத்துவ விளக்கம்.
14. திருவருணைக்கலம்பகம்.
15. பண்டார மும்மணிக்கோவை.
16. கந்தபுராணம்.
17. பெரியபுராணம்.
18. திருக்குறள்.
19. பாரதியார் பாடல்.
20. திருவிசைப்பா.

## நூல் ஆராய்ச்சிக்கு மேற்கொண்ட நூல்கள்

1. திருவுந்தியார்.
2. திருக்களிற்றுப்படியார்.
3. சிவஞானபோத மாபாடியம்.
4. சிவஞானசித்தியார்.
5. இருபா இருபஃது.
6. உண்மை விளக்கம்.
7. சிவப்பிரகாசம்.
8. திருவருட்பயன்.
9. வினாவெண்பா.
10. போற்றிப் பஃறொடை.
11. நெஞ்சுவிடுதூது.
12. உண்மை நெறிவிளக்கம்.
13. சங்கற்ப நிராகரணம்.
14. துகளறுபோதம்.
15. முதல் திருமுறை.
16. இரண்டாந்திருமுறை.
17. மூன்றாந்திருமுறை.
18. நான்காந்திருமுறை.
19. ஐந்தாந்திருமுறை.
20. ஆறாந்திருமுறை.
21. ஏழாந்திருமுறை.
22. எட்டாந் திருமுறை.
23. ஒன்பதாந்திருமுறை.
24. பத்தாந்திருமுறை.
25. பதினோராந்திருமுறை.
26. பன்னிரண்டாந்திருமுறை.
27. தாயுமானவர் பாடல்.
28. கந்தபுராணம்.
29. சிவஞானபோதச் சிற்றுரை.
30. தத்துவ விளக்கம்.
31. சித்தாந்தப்பட விளக்கம்.
32. சித்தாந்தப்பட விளக்கப்பால போதம்.
33. முத்திநிச்சயப்பேருரை.
34. சைவசித்தாந்த ஞானபோதம்.
35. மெய்கண்டாரும் சிவஞான போதமும்.
36. மெய்கண்டான் சித்தாந்த மாநாடு நிகழ்ச்சிகள்.
37. ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பத்தாண்டு ஆட்சிமலர்.

# சித்தாந்த விளக்கம்

## 1. பதி இலக்கணம்

**[1] 1. பதி, பசு, பாசம் இம்மூன்றும் அநாதி நித்தியம். இவைகளில் பதி யாவது : [2] பரிபூரணமாய்-ஒன்ருய்-அறிவுக் கறிவாய்-நின்மலமாய்-உயிருக் குயிராய்-குணமும் குறியுமில்லாததாய்-அருவும், உருவும், அருவுருவுமாய்-அல்லாததாய்-ஆனந்தமயமாய்-அகண்டிதமாய் இருக்கிற பரம சிவமும், பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்னப்பட்ட பஞ்ச சத்திகளாகிய அருளும், பின்னமில்லாமல் சூரியனுங் கிரணமும் போல ஒன்ருக இருக்கும்.**

---

### (அருஞ்சொற் பொருள் விளக்கம்)

[1] பதி—தலைவன் : யாவர்க்குந் தலைவன் ஆதலின் கடவுள் பதி என்று சொல்லப்படுவார். மற்றும் பதி என்னுஞ் சொல்லுக்குக் காப்பவன் என்றும் பொருளுண்டு. பா—காத்தல். தி—வினைமுதற் பொருள் விகுதி. அநாதி முத்த சித்துருவாய், புறப் பொருளாய ஆன்மாக்கள் மாயைகளை நோக்காது ஒன்றிலுந் தோய்வின்றித் தாமே சுயம் பிரகாசமாய் நிற்கும் சிவம், அப்புறப்பொருள்களை நோக்கிப், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்யும் நிலையில் **பதி** எனப் பெயர் பெறும்.

[2] பரிபூரணமாய் என்பதிலிருந்து . . . . இருக்கும், என்பது வரை பதியின் சிறப்பியல்பு கூறப் பெற்றுள்ளது. இக் கருத்துக்களைத் தன்ன கத்தே கொண்டு விளங்கும் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் அருளிச் செய்த சிவப்பிரகாசச் செய்யுள் :—

“ பல கலைஆ கமவேதம் யாவையினுங் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே அதுதான்

நிலவும் அரு உருவின்றிக் குணம்குறிக ளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்த மாகி

அலகி லுயிர்க் குணர்வாகி அசல மாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்

செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்து ளோரே ”.

பரிபூரணமாய்—எங்கும் நிறைவுடையதாய். ஒப்புமைப் பகுதி. “ பூரணன் திருப்பூவனூர் மேவிய காரணன் ” திருப்பூவனூர்—திருக்குறுந்தொகை—பாடல் 10—திருநாவுக்கரசர் தேவாரம். ஒன்ருய்—ஒரு பொருளாய். “ ஒன்ருய் முளைத் தெழுந்து ”—திருக்கோத்தும்பி—பாடல் 8—திருவாசகம்—மாணிக்கவாசகர்—. உயிர்க்குயிராய்—சீவான் மாக்கள் தோறும் பரமன் வாய். “ உரை சேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனி பேதம், நிரை சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்ருன் கோயில் . . . ”—திருவீழி மிழலைத் தேவாரம்—பாடல் 4 —திருஞான சம்பந்தர்,

**2. இப்படி யிருக்கிற பரமசிவம் ஆன்மாக்களை இரட்சிக்கும் பொருட்டாகப் [3] பஞ்சகிருத்தியங்களைப் பண்ண வேண்டி அருவமாகிய சிவம், சக்தி, விந்து, நாதமாகிய நால்வரும் அரு உருவமாகிய சதாசிவமும் உருவமாகிய மகேசுவரர், உருத்திரர் ஆகிய இருவரும் இவர்கள் அதிகாரத்தைப் பற்றி நடக்கிற பிரம்மா, விஷ்ணுக்களிருவரும் ஆக ஒன்பது மூர்த்திகளுமாய் [4] உபாதானத் திரயங்களைக் கொண்டு, [5] சிருட்டித்தும், [6] திதித்தும், [7] சங்கரித்தும் [8]திரோபவித்தும், அனுக்கிரகித்தும் இப்படி பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும்.**

**3. எப்படிச் செய்யுமெனில் [9] தன்மை, முன்னிலை, படர்க்கையாக நின்று செய்யும். இவற்றுள் தன்மையாவது பரிபூர்ணமாக விருக்கும். முன்னிலையாவது [10] இச்சா ஞானக் கிரியைகளாக விருக்கும். படர்க்கையாவது, உள்ளம், சித்தம், மனம், அகங்காரம், புத்தி ஆக. ரு. அகார, உகார, மகார,**

---

[3] பஞ்ச கிருத்தியங்கள்—ஐந்தொழில்கள். அவையாவன—படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன.

[4] உபாதானத்திரயங்களாவன:—சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை என்னும் மூன்று.

[5] சிருட்டித்தும்—படைத்தும். படைத்தலாவது :—ஆணவ மலம் பரிபாகம் ஆதற் பொருட்டுப் பிரளயத்தில் பக்குவப் பட்ட அவரவர் கன்மங்களை முற்றும் புசிப்பித்துத் தொலைக்க ஆன்மாக்களைத் தனு, கரண, புவன போகங்களுடன் கூட்டுதல். தனுவென்பது பஞ்ச பூதங்கள் முதலாக இருபத்து நான்கு தத்துவங்கள் கூடிய பூத தேகம். கரணம் என்பது மனம் முதலிய உட்கருவிகளும் உடம்பு முதலிய புறக்கருவிகளுமாம். புவனமென்பது கன்மங்கள் புசித்தற்குரிய இடம். போகமென்பது ஆன்மாக்களுக்குப் புசிப்பாயுள்ள சத்தாதி விடயங்கள்.

[6] திதித்தும்—காத்தும். காத்தலாவது: ஆன்மாக்களுக்குக் கன்மங்களைப் புசிப்பித்து இயல்பிலே மலபாகம் வருவித்தற் பொருட்டு அவற்றை நிலைபெறச் செய்தல்.

[7] சங்கரித்தும்—அழித்தும். அழித்தலாவது :—கன்ம மலம் பரிபாகமாதற் பொருட்டும் தனுவாதிகளைத் தோற்றுவிக்கும் சத்தி குன்றிய மாயைக்குத் திரும்பச் சாமர்த்திய முண்டாக்குதற் பொருட்டும் தனுகரணாதிகளுடன் சனன மரணங்களில் கூடுதல் பிரிதல் முதலிய தொழில் வேறுபாட்டால் அலைப்புண்ட ஆன்மாக்களை இளைப்பாற்றுதல்.

[8] திரோபவித்தும்—மறைத்தும். மறைத்தலாவது :—சிவன், ஆன்மாக்களுக்குப் போகங்களைப் புசிப்பித்துக் கன்மங்களைத் தொலைப்பிக்குமளவும், தன்னை மறைத்துப் பிரபஞ்சத்தை மெய்யாக்கிக் கன்மங்களை ருசிப்பித்து அவற்றை அக்கன்ம பலன்களாகிய போக்கியப் பொருளில் அழுந்தச் செய்தல். அனுக்கிரகித்தும்—அருள் செய்தும். அருளலாவது—மலபரிபாகமுற்ற ஆன்மாக்களைச் சிவபிரான் தனது திருவடியிலே சேர்த்துக் கொள்ளுதல்.

[9] இறைவன் எங்கும் நிறைந்து நின்றியக்கும் நிலையைத் தன்மையென்றும், இச்சா ஞானக் கிரியைகளைத் தோற்றுவிக்கு நிலையை முன்னிலையென்றும், மூர்த்திகளாய் நின்று படைப்பாதி தொழில்கள் புரியும் நிலையினைப் படர்க்கை என்றும் இவ்வாசிரியர் ஒருவகைப்படுத்திக் கூறினார் என்னலாம்.

[10] இச்சை—இச்சா சத்தியாகும் :—சிவபெருமான் ஆன்மாக்களை இரட்சிக்கத் திருவுளங் கொண்டபொழுது அந்த நினைவெழுந்த அவசரத்துக்கு இச்சா சத்தியென்று பெயர். ஞானம்—ஞானசத்தி :—ஆன்மாக்களை இரட்

விந்து, நாதம் ஆக. ரு. பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவம் ஆக. ரு. ஆக இந்த யரு. பிரகாரமாக விருக்கும். இவைகளுள் கரணங்களை அக்கரங்கள் செலுத்த, அக்கரங்களை மூர்த்திகள் செலுத்த, மூர்த்திகளை இச்சா ஞானக்கிரியைகள் செலுத்த இப்படிக் காரியப்படும். இப்படிப் பிரபஞ்சத்தைக் காரியப் படுத்தியும் [11] தான் விகாரமின்றி நிற்பன். இது பதியிலக்கணம்.

2. பசு இலக்கணம்.—

4. இனிப் [12] பசுவிலக்கணம் எப்படியென்னில், [13] விஞ்ஞான கலர், பிரளயா கலர், சகலரென்று மூன்று வகை. இவர்களில் விஞ்ஞானகலராவது [14] அட்டவித்தியேசுவரர், [15] அனுசதாசிவர், [16] சாதாக்கியர், [17] சத்த

---

சிக்க இச்சை கொண்ட சிவபெருமான் அவ்வான்மாக்களுக்குரிய வினைப் பயன்களை அறிந்த அவசரத்திற்கு ஞானசக்தி என்று பெயர். கிரியை—கிரியா சத்தி :அவ்விதம் அறிந்த வினைப்பயன்களை ஆன்மாக்களுக்கு ஊட்டும் பொருட்டு அவர்களைப்பிரபஞ்ச காரியப் படுத்தும் அவசரத்துக்குக் கிரியாசத்தி என்று பெயர்.

[11] இறைவன் ஐந்தொழில் புரியுமிடத்தும் எத்தகைய விகாரமுமின்றி இருப்பன் என்பதற்கு மேற்கோள்:—

“ கந்தமலர் அயன்படைக்கும் உலக மெல்லாம்
கண்ணன் அளித்திடும் அவைஎம் கடவுள்தானே
அந்தமுற அழித்திடுவன் ஆத லாலே
அயன் அரியும் அவனதுயர் அதிகாரத்து
வந்தமுறை தான்தொழிலே மன்னுவிப்பன் எல்லாம்
வருவிப்பன் விகாரங்கள் மருவான் வானின்
முந்திரவி எதிர்முளரி அலர்வுறும் ஒன்றலர் வான்
முகையாம் ஒன் றென்றுலரும் முறையினுமே.”

செய்யுள் 17—சிவப்பிரகாசம்.

[12] பசு—பாசத்தால் பந்திக்கப் பட்ட ஆன்மா. பச்+உ=பசு ; பச்—கட்டல், பந்தித்தல். உ—விகுதி.

[13] விஞ்ஞான+அகலர். விஞ்ஞானத்தால் கலையற்றவர். இவர்களுக்குப் “ பிரபோதகலர் ” என்றும் பேருண்டு. பிரபோதம்—விஞ்ஞானம். இதனாலே கட்டுப்படுகிறவர்கள் விஞ்ஞானகலர்.

[14] அட்டவித்தியேசுரர்:—விஞ்ஞான கலரிலிருந்து மல பரிபாகம் எய்தப்பெற்றும், அதிகாரஞ் செய்யவேண்டுமென்னும் இச்சையால் ஈசுவர தத்துவத்தில் அதிகாரஞ் செய்து கொண்டிருக்கும் எண் வகை வித்தியேசுரர். அவர்:—(1) அனந்தர், (2) சூக்குமர், (3) சிவோத்தமர், (4) ஏகநேத்திரர், (5) ஏக ருத்திரர், (6) திரி மூர்த்தர், (7) ஸ்ரீகண்டர், (8) சிகண்டி என்பவர்.

[15] அணுசதாசிவர் :—சாதாக்கிய தத்துவத்தில் சதா சிவமூர்த்தியைச் சூழச் சேவித்துக் கொண்டிருந்து போகங்களைப் புசிக்கும் அபரமுத்தர். இவர்கள்:—(1) பிரணவர், (2) சுதர், (3) சுதீப்தர், (4) காரணர், (5) சுசிவர், (6) ஈசர், (7) சூக்குமர், (8) காலர், (9) அம்பு, (10) தசேசர் எனப் பதின்மர்.

[16] சதாக்கியர்—சதாசிவர்.

[17] சத்தகோடி மகா மந்திரர்:—சுத்த வித்தியா தத்துவத்திலிருக்கும் எழு கோடி மந்திரேசுரர். இவர்கள் எழுவித கோடிகளை ஈற்றினுடைய

**கோடி மகாமந்திரர். இவர்கள் ஆணவ மலம் ஒன்றையுடையவர்கள். இவர்களுக்கு [1] சுத்தமாயாதத்துவந்தனுகரண புவன போகமாயிக்கும். இவர்களுள் பக்குவர்க்கு அருளுகின்ற முறைமை எப்படியென்னில், பரம சிவன் அறிவிலே நின்று திருவருள் உதிப்பித்து ஆணவமலத்தைப் போக்கி இரட்சிக்கும்.**

**5. [2] பிரளயாகலராவது, [3] நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களுமாய் புவன கர்த்தாக்களுமாயிருப்பார்கள். இவர்கள், [4] ஆணவம் [3] [5] கன்மம் என்னும் இரண்டு மலங்களையுடையவர்கள். இவர்களுக்கு அசுத்த மாயா தத்துவம் தனுகரண புவனம்காரிய போகமாயிருக்கும்.**

**இவர்களுள் பக்குவர்க்கு அருளுகின்ற முறைமை எப்படியென்னில், சிவன், மான், மழு, சதுர்ப்புச, காளகண்ட சுபாவமான திருமேனி கொண்டு எழுந்தருளி இரண்டு மலங்களையும் போக்கி இரட்சிக்கும்.**

---

மந்திரங்களுக்கு அதிபர்கள். எழுவித கோடிகளாவன :—நம ஒருகோடி சுவாஹா ஒரு கோடி, சுவதா ஒரு கோடி, வௌஷட் ஒரு கோடி, வஷட் ஒரு கோடி, ஹூம் ஒரு கோடி ஆகும்.

1 சுத்தமாயா தத்துவம்—சுத்தப் பிரபஞ்சத்திற்குக் காரணமானமாயை. மட் குடத்திற்கு மண் முதற்காரணமாயிருப்பது போல் மாயை உலகப் படைப்புக்கு முதற்காரணமாயுள்ளது. சுத்தமாயை என்பது தூய்மையான மாயை. அஃதாவது அசுத்தமில்லாதது.

2 பிரளயாகலர்—பிரளயத்தில் கலையற்றவர். பிரளயம்—ஒடுக்கம். அகலர்—கலை நீங்கினவர். பிரளயத்தில் மாயாதத்துவத்தில் கட்டுப்படுகிற படியால் பிரளயாகலர் என்று பெயர் பெற்றவர் என்றுங் கூறலாம்.

3 நூற்றுப் பதினெட்டு உருத்திரர்கள் :—இவர்களில் பக்குவ மல கர்ம முடையவர் புவனேசர், மஹா தேவர், வாமதேவர், பலோத்பவர், ஏக பிங்கர், ஏகேட்சணர், ஈசானர், அங்குஷ்ட மாத்திரர் என்னும் மண்டலர் எண்மரும், இவர்களுக்கு அதிபர்களும் சம்சார சாகரத்திற் சுழல்கிறவர்களைத் திருப்புகிறவர்களுமாகிய அனந்தர், திரிகலர், கோப்தர், க்ஷேமேசர், பிரமபதி, துருவர், தே ஜோதிபர், கஹனேசர் என்னும் எண்மரும் வீரரும், ஸ்ரீகண்டரும் எனப் பதினெண்மர். மற்றும் பக்குவாபக்குவ மலகர்மமுடையவராயுள்ள பிரமாண்ட தாரகராகவிருக்கும் சதருத்திரரும், காலாக்கினி யுருத்திரருமாவார்கள். ஆக நூற்றுப் பதினெட்டு உருத்திரர்கள் கண்டு கொள்க.

4 ஆணவம் :—வியாபகமான ஆன்மாவை அணுத் தன்மை படுமாறு செய்தலினாலே ஆணவ மலம் என்னும் பெயர் உண்டாயிற்று. அணுத் தன்மைபடுமாறு செய்தலாவது, சிற்றறிவும் சிறு. தொழிலும் உடைய தாக்குதல். அணு—சிறுமை. இவ்வாணவமலமானது, ஒன்றாய், தத்தம் பரிபாக காலத்தில் நீங்கும் எண்ணிறந்த சக்திகளையுடையதாய் பேரிருளாய் நின்று அஞ்ஞானத்தை விளைப்பதாய், ஆன்மாக்களோடு அநாதியே சகசமாய் நிற்பதாய், அழிவில்லாததாய், எல்லாத் தீமைகளுக்கும் காரணமான மூலமாய், ஆன்மாக்களின் அறிவு, தொழில், முழுவதையும் விளங்கவொட்டாது தடுத்து நிற்கும் இயல்பினதாம்.

5 கன்மம்—கன்மமலமானது ஆன்மாக்களெடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாய்ப் பலவிதமான போகங்களைத் தருவதாயிருக்கும். அக்கன்மம் பிரவாக நாதியாய் பலபேதங்களாய் ஆன்மாவைவிட்டு நீங்காததாய், மனம் வாக்குக் காயங்களாற் செய்யப்படுவதாய் புத்தி தத்துவம் பற்றுக் கோடாயிருப்பதாய், இன்பமும் துன்பமுமாகிய பயனைத்தரும் புண்ணிய பாவு

**6. இனி [1] சகலராவது பிர்மா, விஷ்ணு முதலாக கிருமி ஈறுக அநேக முள. இவர்கள் ஆணவம், கன்மம், [2] மாயை ஆகிய மூன்று மலத்தையு முடையவர்கள். இவர்களுக்குப் [3] பிரதிகிருதி தத்துவம் தனு கரண புவன போகமாயிருக்கும். இவைகளுள் தனுவாவது நால்வகைத் தோற்ற மும் எழுவகைப் பிறவிமாயிருக்கும். இவற்றுள் தோற்றமாவது [4] சரா யுசம், அண்டசம், சுவேதசம், உற்பிச்சம் ஆகிய [5] யோனிகளிலும்பிறப்பா வது. [6] தேவர்கள்** *யகாது*. **மானிடர்** *கூாது*. **தாவரம்** *யகூாது*. **மிருகம்** *யாது* **நீர் வாழ்வன** *யாது*. **ஊர்வன** *யடுாது*. **பறவை** *யாது*.

**ஆக எழுவகைப் பிறப்பிலும் அயச லக்ஷயோனி பேதமான தனு-தூல- சூக்குமமாகவும், ஆயுசு, கண, முதலாக அநேகமுள. கரணமாவது அந்தந்த தனுவைக் கொண்ட தத்துவங்களாயிருக்கும். புவனமாவது [3] உள உயச புவனத்திலுண்டாகிய ஊரும், நாடுந் தேசமும், லோகமுமாய்**

---

வடிவாயிருப்பதாய் சங்கார காலத்திலே மாயையைப் பொருந்துவதாயிருக் கும். ஆணவம், கன்மம் என்னும் மலங்களின் இயல்பை முறையே "ஏகமதாய்", "நண்ணியிடும்" என்றற்றொடக்கத்துச் சிவப்பிரகாசச் செய்யுட்களால் நன்கு அறியலாம்.

[1] சகலர்—கலாதிகளோடு கூடியவர். ஸ—கூட. கலர்—கலையுடைய வர்.

[2] மாயை—இது உயிரின் அறிவோடு கூடி அறிவை மயக்கும். மேலும் நெல் முளைப்பதற்கு அரிசியைச் சார்ந்துள்ள தவிடு அனுகூலஞ் செய்து உடனிற்பது போல மாயாமலம் ஆன்மாக்களிடத்தே சுக துக்கங்கள் தோன்றுதற்குத் துணைக் காரணமாய்த் தன் காரியமாகிய தனுகரணம் முதலியவற்றையும் உயிரையும் இயைவித்து நிற்கும்.

[3] பிரகிருதிதத்துவம் —அசுத்த மாயையின் தூலபரிணமமாயிருப்பது.

[4] சராயுசம்—கருப்பையிற்றோன்றுவன. அண்டசம்—முட்டையிற் றோன்றுவன. சுவேதசம்—வேர்வையிற்றோன்றுவன. உற்பீசம்—வேர் வித்து கிழங்கு முதலியவற்றை மேற்பிளந்து தோன்றுவன்.

[5] யோனி—வடிவம், தேகம்.

[6] யோனி பேதங்களைக் குறிக்குஞ் சிவப்பிரகாசச் செய்யுள் 42.

"தோற்றியிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்
துதைந்துவரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கின்
ஊற்றமிகு தாவரங்கள் பத்தொன்ப தென்றும்
ஊர்வபதி னைந்தமரர் பதினொன்றே டுலவா
மாற்றருநீர் உறைவனநற் பறவைகள்நாற் காலி
மன்னியிடும் பப்பத்து மானிடர்ஒன் பதின்மர்
ஏற்றியொரு தொகையதனில் இயம்புவர்கள் யோனி
எண்பத்து நான்குநா றுயிரமென் றெடுத்தே."

ஒப்புமைப் பகுதி :—" உரைசேரும்
எண்பத்து நான்கு நூறுயிரமாம்.

யோனி பேதம்—" திருஞானசம்பந்தர் தேவாரம்." புவனம் உளஉயச—இருநூற்று இருபத்து நான்கு. புவனங்களாவன :—இந்த மாயாகோளமாகிய உலகில் எண்ணில்லாத புவனங்களிருந்தாலும் அவற்றுள் முக்கியமானவை 274. பிருதிவி தத்துவத்தில் 108-ம், அப்புவில் 8-ம், தேயுவில் 8-ம், வாயுவில் 8-ம், ஆகாயத்தில் 8-ம்,

புண்ணிய கருமமுடையவர்களுக்குச் சொற்காதி பதங்களாயிருக்கும். போக மாவது அவரவர்கள் கருமத்துக்கேதுவாக உள்ள குடிப்பன, மெல்லுவன, கடிப்பன, விழுங்குவன, உடுப்பன, படுப்பன, முடிப்பன, பூசுவன, பூண்பன, கொடுப்பன, வாங்குவன, காண்பன, கேட்பன, நடப்பன, பெண்டு பிள்ளை சுற்றம், பொன், பூமி இவை முதலிய பிரபஞ்சமாயிருக்கும். இனி இவர்களுள் சூக்கும தேகத்தைப் பொருந்தின கன்மத்துக் கேதுவான தூல தேகத்தையெடுத்து எடுத்த தேகாந்தனுய் புண்ணிய பாவங்கள், [1] ஆர்சித்து நரகசொக்காதிகளிலே போக்குவரவுடையதாயிருப்பார்கள்.

**7.** இவர்களில் பக்குவர்க்கு அனுக்கிரகிக்கும் முறைமை எப்படியென்னில் [2] இருவினை யொப்பு வந்தவிடத்தில், [3] சத்திநிபாதம் விளங்கி, [4] மல பரிபாகம் பிறக்கும். அப்பொழுது முன்செய்த சிவபுண்ணியம் வந்து நிற்பதனுலே சிவன் ஆசாரிய மூர்த்தமாய் மான், மழு, சதுர்ப்புச, காள கண்ட திரிநேத்திரமும் மறைத்து மானிடச் சட்டை சாத்தி சீவனுடைய ஊரும் பேரும் உருவமுங்கொண்டு, மானைக்காட்டி மானைப்பிடித்தாற் போல திருமேனி கொண்டெழுந்தருளிவந்து, [5] மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்கின்ற சத்திநிபாதத் தன்மையறிந்து,

---

அகங்காரத்தில் 8-ம், புத்தியில் 8-ம், சித்தத்தில் 8-ம், புருடனில் 6-ம், அராகத்தில் 5-ம், வித்தையில் 2-ம், கலையில் 2-ம், நியதியில் 2-ம், காலத்தில் 2-ம், மாயையில் 8-ம், சுத்தவித்தையில் 9-ம், ஈசுரத்தில் 8-ம், சாதாக்கியத்தில் 1-ம், விந்துவில் 5-ம், நாதத்தில் 10-ம் ஆக 224 புவனங்கள். இவற்றின் பெயர் அதிபதிகள் ஆகியவற்றை—உயர் திரு. வாலையானந்த அடிகள் இயற்றிய சித்தாந்தப் பட விளக்கம், பக்கம் 56–69-ல் காண்க.

[1] ஆர்ச்சித்து—பற்றி.

[2] இருவினையொப்பாவது—நல்வினை தீவினைகளினும், அவற்றின் விளைவாகிய புண்ணிய பாவங்களினும், இவற்றின் பயனுகிய இன்பதுன்பங் களினும், ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமின்றி ஆன்ம அறிவின் கண் ஒப்ப வெறுப்பு நிகழ்தல். இவ்விரு வினையொப்பு சரியை கிரியை யோக சிவபுண்ணியங்களால் வந்தெய்தும்.

[3] சத்திநிபாதம்—சிவசத்திபதிதல். சத்தி—சிவசத்தி. நி—உப சர்க்கம் ; பாதம்—பதிதல்.

[4] மலபரிபாகமாவது ஆணவ மலத்தினது சக்தி ஆன்ம அறிவை மயக்க இயலாது வலிகுன்றி நிற்கும் அவதரம். மலம்—ஆணவமலம் ; பரி—உபசர்க்கம் ; பாகம்—திரிவு, பக்குவம்.

சதுர்ப்புசம்—நான்கு கைகள். காளகண்டம்—திருநீலகண்டம். திரி நேத்திரம்—சோம சூரிய அக்கினி என்னும் முச்சுடராகிய மூன்று கண்கள். மானிடச்சட்டைசாத்தி—மானிட உருவங்கொண்டு. மானைக்காட்டி மானைப் பிடித்தாற்போல—மானைப்பிடிப்பவர் பழகிய ஒரு மானைக் காட்டில் கட்டி வைப்பர், அதனிடம் காட்டிலுள்ள மான்கூட்டம் வந்துசேரும். அப்போது அவற்றைப் பிடித்துக்கொள்வர். அதுபோல, சிவபெருமான் சகலரில், பக்குவராயுள்ள மனிதருக்கு அருள்செய்ய மனிதவுருவங் கொண்டுவந்து ஆட்கொள்வார் என்பது கருத்து.

[5] உயிர்கள் ஞானத்தைப் பெறச் செய்யும் முயற்சி, பக்குவத்தின் நிலைக்கு ஏற்ப நால்வகைப்படுவர். அவர்களில் மந்தம்—தாமதம் ; மந்த தரம்—அதிகதாமதம் ; தீவிரம்—உறைப்பு ; தீவிரதரம்—அதிதீவிரம் உடையவர்களாயிருப்பர்.

**[1] சமய தீக்ஷைபண்ணி, [2] சரியை அனுஷ்டிப்பித்து விசேட தீக்ஷைபண்ணி, [3] கிரியா யோகங்களை அனுஷ்டிப்பித்து நிருவாண தீக்ஷைபண்ணி ஞான மனுக்கிரசித்து.**

---

[1] சமயதீட்சையாவது—மந்திரத்தை உச்சரிப்பதற்குரிய அதிகாரத்தை அளிக்கும் தீக்கையாகும்.

[2] சரியையாவது —திருக்கோவில் அலகிடல், மெழுகுதல், பூமாலை தொடுத்தல், சிவபெருமானைப் புகழ்ந்து பாடல், தீபமிடுதல், நந்தவனம் உண்டு பண்ணுதல், சிவனடியார்க்குப் பணிவிடை செய்தல் முதலியன. சரியை அனுட்டிப்போர் சாலோகபதத்தை அடைவர். அச்சரியையின் இலக்கணத்தை ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்த சிவஞான சித்தியார் 271-ம் செய்யுள் விளக்குதல் காண்க. அச்செய்யுள் —

" தாதமார்க் கம்சாற்றிற் சங்கரன்தன் கோயில்
தலம் அலகிட் டிலகுதிரு மெழுக்கும் சாத்திப்
போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணி
புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித்
தீதில்திரு விளக்கிட்டுத் திருநந்த வனமும்
செய்துதிரு வேடங்கண் டால்அடியேன் செய்வது
யாதுபணி யீரென்று பணிந்தவர்தம் பணியும்
இயற்றுவதிச் சரியை செய்வோர் ஈசனுலகிருப்பர். "

இச்சரியைத் தொண்டினை விளக்க வந்த பெரியார் சைவ சமயாசாரியராகிய திருநாவுக்கரசு சுவாமிகள். அவர்கள் அருளிச் செய்த தேவாரப் பாசுரங்கள் சரியைத் தொண்டின் இலக்கியமாய் விளங்குகின்றன. அவற்றுள் சில காண்க —

" நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே."

திரு ஆரூர் : திருத்தாண்டகம் 3.

" பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே "

திருக்கடவூர் : திருநேரிசை 4.

[3] கிரியையாவது, புதியமலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய அமைத்துப் பஞ்ச சுத்திகளும் செய்து ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனை பண்ணி ஆவாகித்து மெய்யன்போடும் அருச்சித்துத் துதித்து வழிபட்டு அக்கினி காரியமுஞ் செய்தலாம். கிரியை அனுட்டிப்போர் சிவசாமீபத்தை அடைவர். இக்கருத்தமைந்த சிவஞான சித்தியார் 272-ம் செய்யுள் —

" புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம்அமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனம்மூர்த்தி மூர்த்தி மானும்
சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த
பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவினொடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும்இக் கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங் காலே."

இச்சரியை நெறியை விளக்க அவதரித்த சைவ சமயாசாரியராகிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் சரியைத் தொண்டிற்கு இலக்கியமாகும். அத்தேவாரத்துள் ஒரு செய்யுள் —

“ நறைமலி தருமள றெடுமுகை நகுமலர் புகைமிகுவளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடும் அடியவர்
குறைவில பதம்அணை தரஅருள் குணமுடை யிறை யுறைவனபதி
சிறைபுன லமர்சிவ புரமது நினைபவர் செயமகள் தலைவரே.”

திருச்சிவபுரம்—செய்யுள் 4-

இச் செய்யுளில் சிவவழிபாட்டின் சிறப்பும் பயனும் அடங்கியிருத்தல் காண்க.

யோகமாவது —ஐம்பொறிகளையும் ஒடுக்கிச் சுவாசத்தை நிலையில் நிறுத்தி மனதை ஒருவழிப்படுத்தி உடம்பினுள் ஆருதாரங்களையும் தரிசித்து, ஆன்மாவானது அவ்வாருதாரங்களுக்கும் மேலே சென்று பிரமாந்திரத்திலொழுகும் அமிர்த தாரை யொழுக்கால் உடம்பு நிலைத்திருப்பத் தான் பூரணப் பிரகாசமாகிய சிவசோதியைக் கண்டு இவ்வாறு இயமாதி அட்டாங்கங்களோடு கூடிய சமாதி நிலையை யடைந்து ஆநந்தித்திருத்தலாம். இவ்வித யோக நெறியைச் சாதித்தோர் சிவசாரூபத்தை அடைவர்.

இந்த யோக மார்க்கத்தை விளக்கும் சிவஞான சித்தியார் 372-ம் செய்யுள் —

“ சுகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிரண்டுஞ்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்க மறிந்தவற்றி னரும்பொருள்க ளுணர்ந்தங்
கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண்டலத்தின்
முகமார்க்க வமுதுடல முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தன் முதலாக வினைகள்
உகமார்க்க வட்டாங்க யோக முற்று
முழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்.”

இவ்வியோக நெறியை விளக்கவந்த சைவசமயாசாரியராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம் இதற்கு இலக்கியமாகும். அத்தேவாரத்தில் ஒரு செய்யுள் —

“ தேடுவன் தேடுவன் செம்மலர்ப் பாதங்கள் நரடாறும்
நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவ னாடுவ னாமாத் தூரெம் மடிகளே.”

இச் செய்யுளில் யோகாநுபவம் கூறப்பெற்றுள்ளது.

சிவஞானமாவது—கலை ஞானம் முதலிய யாவற்றையுங் கற்றறிந்து மற்றுஞ் சமைய நூற்பொருள்கள் யாவும் பூர்வ பக்கமாகக் கண்டு, பதி பசு பாச விலக்கணங் கூறும் சிவாகம நெறியே சித்தாந்தமெனத் தெளிந்து, காண்பான், காட்சி, காட்சிப் பொருள் எனப் பிரித்தறியும் அறிவொழிய அத்துவித முறையிற் சிவனுடன் கலந்து நிற்றலாம். இவ் ஞான நெறியை அநுட்டித்தோர் சிவசாயுச்சியம் பெறுவர்.

இக்கருத்துடைய சிவஞான சித்திச் செய்யுள் 274 —

“ சன்மார்க்கம் சகலகலை புராண வேத
சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து
பன்மார்க்கப் பொருள்பலவும் கீழாக மேலாம்
பசுபதிபா சம்தெரித்துப் பரசிவனைக் காட்டும்
நன்மார்க்க ஞானத்தை நாடி ஞான
ஞேயமொடு ஞாதிருவும் நாடா வண்ணம்
பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப்
பெறுமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே.”

**கித்து [1] மலமாயாதி கன்மங்களை நீக்கி, ஆன்மாக்களுக்கு மோட்சத்தைக் கொடுப்பார்.**

**[1] இந்த ஆன்மாக்களுக்குப் பெயர் யாதோவெனில்; ஆன்ம, [2] பசு, [3] சீவன், [5] புருடன், [5] பூமான், [6] தேகி, [7] கிஞ்சிஞ்ஞனன், [8] சுதந்தரவீனன், [9] அகர்த்தா, [10] அணு, [11] அழியாதவன், [12] உள்ளம், [13] சைதன்னியன், [14] பிரகிருதி,**

---

இத்தகைய ஞானநெறியை விளக்க அவதரித்த சைவசமயாசாரியார் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் அருளிய திருவாசகத்துள் ஒன்று :—

" முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே "

இச்செய்யுளில் இறைவன் மலத்தைப் போக்கி ஞானம் நல்கிச் சிவமாக்கிய முறைமை கூறப்பட்டிருத்தல் காண்க.

தீக்கையாவது உண்மை ஞானத்தைப் பெறுதலும், பாசத்தை நீக்குவிப்பதுமாக குருவினால் நிகழ்த்தப்பெறும் சடங்கு.

சமயம், விசேடம், நிருவாணம் என்னும் மூவகைத் தீட்சையின் இயல்பாவது: சமயதீக்கை மந்திரத்தை உச்சரிப்பதற்குரிய அதிகாரத்தையும், விசேடதீக்கை மந்திரம் சிவபூசை யோகம் என்னும் மூன்றற்கும் உரிய அதிகாரத்தையும் அளிப்பது. நிர்வாண தீக்கையாவது பாசபந்தம் அனைத்தையும் நீக்கிச் சிவபெருமானுடைய திருவடியை அடையும்படி செய்யுந் தீக்கையாம். இவற்றின் விரிவையெல்லாம் சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் முதலிய ஞானநூல்களாலும், அவற்றின் உரைகளாலும் அறியலாம்.

[1] ஞானாசாரியரது திரு நோக்கத்தால் கன்ம மலமும், பாவனையால் மாயாமலமும், பரிசத்தால் ஆணவமலமும் நீங்கும். இவ்விதம் மலங்கள் நீங்கவே, ஆன்மாக்கள் திருவருளில் மூழ்கி அவ்வருளேதானாகிப் பேரானந்தத்தைப் பெற்றுத் தேக நீக்கத்தில் சிவத்தோடு இரண்டறக் கலந்து திருவடியாகிய பரமுத்தியை அடையும். இக்கருத்தைத்தம்மகத்தே கொண்டு விளங்கும் சிவஞானசித்தியார் 268-ம் செய்யுளைக்காண்க. அது சித்தாந்தநெறியே திருவடிமுத்தியளிப்பதென்று கூறுகின்றது.

அச்செய்யுள் :—

" சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனமொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகரெலாம் மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுவென்ன பிராந்தி"

[2] ஆன்மா=அறிவுடைப்பொருள்.

[2] பசு=பாச சம்பந்தத்தால் ஆன்மா பசு எனப்பெற்றது. பச்=பந்தித்தல், உ=செயப்படு பொருள் விகுதி; பாசத்தால் கட்டப்பெற்றது. [3] சீவன்=சீவான்மா=தேகத்தை அபிமானிப்பவன். [4] புருடன்=உடம்போடுகூடிய ஆன்மா. [5]. பூமான்=பிரகிருதி மாயை, அசுத்த தனுவாதிகளையுடைய பிரளயாகலருக்குக்காரணமாயிருத்தலின் இதன் காரியமாகிய

[15] புத்தி, [16] பிராணன், [17] சதசத்து, [18] புற்கலன் என்கின்ற பதினெட்டுப் பெயர்களாம். இவற்றால், மூவகையான பேதமும் சரீரத்தையெடுத்து காரியப் படும் முறைமையும் அனுக்கிரகம் பெறுமுறைமையும் கண்டுகொள்க. பசுவிலக்கணம் முற்றியது.

3. பாசவிலக்கணம்.

8. இனி, பாசவிலக்கணம் எப்படி யென்னில், இப்படிப்பட்ட ஆன் மாக்களுக்கு அனாதியிலே பந்தமாயிருக்கிற ஆணவம், கன்மம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை யென்று ஐந்து வகையாயிருக்கும், இவைக ளுள் [1] ஆணவமலமாவது, ஒன்றாய் பரிபாகத்திலே நீங்குகிற சக்தி யுடையதாய், மூலமாய் இருளும் பிரகாசமுமென இரண்டதாய், சிவத் தையும் ஆன்மாவையும், பாசத்தையும் தெரியாமல் செம்பிற் [2] காளிதம் போலவும், தண்ணீரிடத்துப் பாசிபோலவும் அரிசியிற்றவிடுபோலவும், ஆன் மாவை யிரண்டறப் பொருந்தி இச்சா ஞானக் கிரியைகளை மறைக்கும்.

9. கன்மமாவது [3] வியாபகமாய், அந்தந்த அணுக்கள்தோறும் வெவ் வேறு தன்மையதாய் மனவாக்குக்காயங்களினால், அறிந்தும் அறியாமலும் செய்கையினாலே வந்தெய்துகின்ற புண்ணிய பாவமாய் சுகதுக்கத்தைப்

---

ஆன்மாவைப் பூமான் என்பர். [6]. தேகி=தேகத்தைப் பெற்றுள்ள ஆன் மாவைத் தேகி என்பர். [7]. கிஞ்சிஞ்ஞனன்=சிற்றறிவுடையோன். கிஞ்சுத்= அற்பம். ஞனன் = அறிவோன். [8] சுதந்தரவீனன்=சுதந்தரமில்லாதவன். [9]. அகர்த்தா=கர்த்தா அல்லாதவன். [10]. அணு=ஆன்மா, உயிர். மும்மல முடைய சகலருக்கு அணு என்று பெயர். [11]. அழியாதவன்=உயிருக்கு அழிவில்லையாதலின் அழியாதவன் என்று பெயர். [12]. உள்ளம்=ஆன் மா மனோதத்துவத்தைப் பொருந்தி நிற்குமிடத்து உள்ளம் எனப் பெயர் பெறும். [13]. சைதன்னியன்=அறிவுடையவன். [14]. பிரகிருதி=இது பஞ்ச கஞ்சுகனான புருடனுக்குப் போக்கியமான புத்தி அகங்காரம் முதலிய குணத் தத்துவங்கள் தோன்றுதற்கு உபாதான காரணமாயிருக்கும். இதனை உப சார வழக்காக ஆன்மா என்பர். [15] புத்தி=ஆன்மா புத்தி தத்துவத் தைப் பொருந்தி நிற்றலாலே புத்தி எனப் பெயர் பெறுவதுண்டு. [16]. பிராணன் - உயிர், ஆன்மா. [17]. சதசத்து=ஆன்மா. இவ்வான்மா திரு வருளோடுகூடிய முத்தி நிலையிலே சத்துடன் நின்று அசத்தை நீக்குந்தன் மையால் சதசத்து எனப்படும். [18]. புற்கலன்—புற்கலம்—உடம்பு, உடம்பை யுடையவன் புற்கலன்.

[1] ஆணவமலம் - மூலமலம். ஆணவம், திரோதாயி ஆகிய இருமலங் களின் இயல்பைக் குறிக்கும் சிவப்பிகாசச் செய்யுள் 20.

“ஏகமதாய்த் தம்கால் எல்லைகளின் மீளும்
எண்ணரிய சத்தியதாய் இருளொளிர இருண்ட
போகமாய்ச் செம்பினுறு களிம்பேய்ந்து நித்த
மூலமலமாய் அறிவுமுழுதினையும் மறைக்கும்.
பாகமாக வகைநின்று திரோதாயி சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வரது பரிந்து
நாகம்மா நதிமதியம் பொதிசடையான் அடிகள்
நணுகும்வகை கருணைமிக நயக்கும் தானே.”

[2] காளிதம்=களிம்பு.

[3] வியாபகமாய்=நிறைவாய்.

பண்ணுவதாய் [1] இதாகிதங்களினாலே ஆயதாய், அனுபவித்தாலன்றித் தீராததாய், ஒன்றினாலொன்றழிக்கப்படாததாய் [2] விதிப்படி பரிகாரஞ் செய்தால் நீங்குகிறதுமாய் நெல்லுக்குள் முளைபோல் ஆன்மாவிற்பற்றி யிருப்பதாய், சங்கிலியைப்போற்றொடர்ச்சியாய் அழிந்து மாகியும் வருவதாய், [3] பிரவாகத்தைப் போல்வதாய் சிருட்டி காலத்திலே காரியப்படுவதாயி ருக்கும்.

**10.** இந்தக் கன்மமானது சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியமென்று மூன்று விதமாயிருக்கும். இவற்றுள் சஞ்சிதமாவது, அனாதி தொடுத்துச் சனனந்தோறும் ஆர்ச்சித்துவர புசித்து மிஞ்சினது [4] ஆறத்துவாவி லேயும் கட்டுப்பட்டிருக்கிற புண்ணிய பாவமாயிருக்கும். பிராரத்துவமாவது, இந்த சஞ்சிதத்திலே சிறிது புசிக்கப் பாகப்பட்டவனை ஒரு சரீரத்தை எடுப் பித்து சாதி, ஆயுசு, யோகங்களைக்கொடுக்கும். ஆகாமியமாவது, பிராரத் துவம் புசிக்கையிலே வந்தெய்துகிற புண்ணிய பாவங்களாயிருக்கும்.

**11.** இனி, திரோதாயியாவது [5] நாலுமலங்களின் காரியங்களை யேவி ஆன்மாக்களுக்குப் பிரபஞ்சமாகிய பொய்யை மெய்யென்று ருசிப்பித்து நிற்கையாலே பாசமென்று சொல்லுவார்கள்.

---

[1] இதாகிதங்கள் = நன்மை, தீமைகள்.

[2] விதிப்படிப் பரிகாரஞ் செய்தலாவது: வேதாகமங்களின் கரும காண்டங்களிற் சொல்லிய முறைப்படி சாந்தி செய்வதனால் பாவ கன்மங்கள் நீங்கும் என்பது. மற்றும் வேதாகமங்களின் ஞான காண்டங்களில் சொல் லியபடி சரியை கிரியை யோகங்கள் முதலியவற்றைச் செய்துவரின் அப் பாவ கன்மங்கள் சாந்தி செய்யாது ஒழியும்.

கன்மமலத்தின் இயல்பைக்குறிக்கும் சிவப்பிரகாசச் செய்யுள் 28 :—

“ நண்ணியிடும் உருவதனுக் கேது வாகி
நானாபோ கங்களாய் நாசோற் பத்தி
பண்ணிவரும் ஆதலால் அனாதி யாகிப்
பலவாகி அணுக்கள் தொறும் படர்வதாகி
எண்ணிவரு மனவாச கன்மத்தா லியற்றும்
இயல்பினதாய் மதிகமதாய் இருபயனும் பாவ
புண்ணியமாய்ப் புலர்காலை மாயை மேவிப்
பொருந்துமிது கன்மமலம் புகலு மாறே.”

[3] பிரவாகத்தைப் போல்வதாய் - இடையறாதோடும் நீர்ப்பெருக்குப் போல த்தொடர்ச்சியாய்த் தொன்றுதொட்டுவருவதாய்.

[4] ஆறத்துவாக்கள்—(1) மந்திரங்கள், (2) பதங்கள், (3) வன்னங்கள் (4) புவனங்கள், (5) தத்துவங்கள், (6) கலைகள் என்பன.

[5] நாலுமலங்கள்.—(1) ஆணவம், (2) கன்மம், (3) மாயை, (4) மாயேயம் என்பன.

திரோதாயி.—திரோதானசத்தி - திரோதானம் - மறைத்தல். ஆணவ மலம் உயிர்களை மறைக்கும்பொழுது திரோதான சத்தியும் அதற்கனுகூல மாய் நின்று உயிர்களை மறைக்கும். மறைத்தலாவது, மறைக்கும் மலசத் திக்கு வலிகொடுத்து நிற்றல். அஃதாவது நன்றாய் மறைக்கச் செய்தல். அன்றியும் அம்மலசத்தி வலிகுன்றும்படி சுத்தமாயா காரியங்களைத் தோற்று வித்து ஆன்ம அறிவை எழுப்புதலும்; கலையாதிகளைத் தோற்றுவித்து

12. [1] சுத்தமாயையாவது விஞ்ஞானகலருக்கு தனுகரணபுவன போகமும் பிரளயாகலருக்குஞ் செலுத்துந்தத்துவமாயுமிருக்கும்.

13. [2] அசுத்தமாயையாவது பிரளயாகலருக்குத் தனு, கரண, புவன போகமாயிருக்கும். ஆனால், இந்த இரண்டு மாயைகளிலிருந்து உண்டான தத்துவந் தோன்றின முறைமை எப்படியெனில், சுத்தமாயையிலே, பரமசிவனுடைய பராசக்தியருளினாலே குடிலையிலே நாதந்தோன்றும், நாதத்தில் விந்துவும், விந்துவில் சாதாக்கியமும் சாதாக்கியத்தில் ஈசுரமும், ஈச்சுரத்தில் சுத்த வித்தையும் தோன்றும். முன் சொன்ன விந்துவில் நாலுவாக்கும் ஐம்பத் தோரக்கரமும், எண்பத்தோரு பதங்களும், பஞ்சகலைகளும், சத்த கோடி மகாமந்திரமுந்தோன்றும்.

14. அசுத்த மாயையில் அனந்த தேவரால் காரியப்படுகிற காலமும், நியதியும், கலையுந்தோன்றும். கலையில் வித்தை தோன்றும், வித்தையில் அராகந்தோன்றும். ஆக இவ்வைந்துங் கூடி பஞ்சகஞ்சுகனான ஆன்மாவின் புருஷதத்துவந்தோன்றும்.

15. இப்படித் தோன்று முறைமைக்கு வகை :—[3] பூதங்களாவன பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆக ரு. ஞான இந்திரியங்களாவன சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம் ஆக

---

அவ்வறிவுக்கு விளக்கம் செய்தலும், கன்மங்களை நுகர்வித்துக்கழிப்பித்தலும் ஆகிய இவையெல்லாம் பாகமாம் வகைபண்ணுதலாம். இப்படி மலத்தோடுகூடி நின்று காரியப்படுத்திவேண்டுமுபாயங்கள் செய்தலால் சிவசத்தியாகிய அதனை மலம் போல்வதொன்றாக வைத்துத்திரோதானமலம் என்பர். ஆயினும் அது மலமன்று. உயிர்மேலிரங்கிச் சிவபெருமானுடைய திருவடிகளை அடையும்படி அதற்கேற்ற வகைகளைச் செய்துகொண்டிருக்குந்த பொருளாகவே விளங்கும்.

[1] சுத்தமாயையின் இயல்பபைக்குறிக்கும் சிவப்பிரகாசச் செய்யுள் 21.

“ உன்னலரும் பரசிவன்தன் அருளாலே நாதம்
உதிக்கும் மிகுங் குடிலைதனில் விந்துவரும் நாதந்
தன்னில்அதி தெளிவளரும் சதாசிவராம் அவரில்
தயங்கவரும் ஈசர்வித்தை தனைஅளிப்பர் அதனால்
மன்னுவர்இவ் வகைஐவர் வாய்மையினால் முன்னே
வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவும் சூக்குமாதி ஒருநான்கும் என்று
மொழிந்திடுவர் அருங்கலைகள் முதிர்ந்து ளோரே.”

[2] அசுத்தமாயையின் இலக்கணத்தை விளக்கும் சிவப்பிரகாசச் செய்யுள்—22.

“ உருவாதி சதுர்விதமாய் ஒன்றொன் றெவ்வா
உண்மையதாய் நித்தமாய் ஒன்றாய் என்றும்
அருவாகிக் கன்மாந்த அணுக்கள் யார்க்கும்
ஆவரமாய் அசித்தாய் அசலமாகி
விரிவாய தன்செயலின் வியாபியாய் எல்லாம்
விரிந்தவகை புரிந்தடைவின் மேவியவை ஒடுங்க
வருகாலம் உயிர்களெல்லாம் மருவிடமாய் மலமாய்
மன்னியிடும் அரனருளால் மாயை தானே.”

[3] பூதங்களாவன.—பிரிதிவி - மண் ; அப்பு - நீர் ; தேயு - நெருப்பு; வாயு - காற்று ; ஆகாயம் - வெளி.

இவற்றின் விடையமாவன சத்த, பரிசு, ரூப, ரச, கந்தம் ஆக ரு கன்ம இந்திரியங்களாவன ; வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் ஆக ரு. அந்தக்கரணமாவன :—மனம், புத்தி, அகங்காரம், சித்தம், ஆக ச. ஆக ஆன்ம தத்துவம் உ௰௪. வித்தியா தத்துவமாவன :— காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை, ஆக எ. சிவதத்துவமாவன :—சுத்தவித்தை, ஈச்சுவரம், சாதாக்கியம், சத்தி, சிவம் ஆக ரு. ஆக கருவிகள் ௩௰௬.

**16.** மேற்குறித்த அசுத்தமாயையிலே உருத்திரதேவ நாயனுர் அருளினுலே குணரூபமான மூலப் பிரகிருதி மாயை தோன்றும் ; மூலப் பிரதிகிருதியிலே [1] முக்குணங்களுந் தோன்றும். முக்குணங்களுந் தோன்ருமல் நின்றவிடம் அவ்வியத்தம். அந்த அவ்வியத்தத்தில் குணத்தத்துவமும், குணத்தத்துவத்தில் புத்தியும் தோன்றும். புத்தியில் ஆங்காரந் தோன்றும்.

**17.** அந்த ஆங்காரம் தைசதாவாங்காரம், வைகரியாங்காரம், பூதாதியாங்காரம் என மூன்று வகைப்படும். இவற்றில் தைசதவாங்காரத்தில் சாத்துவிக குணத்தைப் பொருந்தினவிடத்தில் மனமும் ; மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும், அறிகருவிகளாகிய ஞானேந்திரியம் ஐந்தும் தோன்றும். வைகரி யாங்காரத்தில் ராசத குணத்தைப் பொருந்தின விடத்தில் செயற்கருவிகளாகிய வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்கின்ற கன்மேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். பூதாதியாங்காரத்தில் தாமத குணத்தைப் பொருந்தினவிடத்தில் சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்கிற தன்மாத்திரைகள் ஐந்துந்தோன்றும். சத்தத்தில் ஆகாசந்தோன்றும், பரிசத்தில் வாயு தோன்றும், ரூபத்தில் அக்கினி தோன்றும், ரசத்தில் அப்புத்தோன்றும், கந்தத்தில் பிருதிவி தோன்றும்.

---

ஞான இந்திரியங்களாவன.—சுரோத்திரம் - காது ; துவக்கு - தோல் ; சட்சு - கண் ; சிங்நுவை - நாக்கு ; ஆக்கிராணம் - மூக்கு.

சத்தம் - ஓசை ; பரிசம் - ஊறு ; ரூபம் - ஒளி ; ரசம் - சுவை ; கந்தம் - நாற்றம். இவை ஐம்புலன்களாம்.

கன்ம இந்திரியங்களாவன.—வாக்கு - வாய் ; பாதம் - கால் ; பாணி-கை ; பாயு - எருவாய் ; உபத்தம் - கருவாய்.

[1] முக்குணங்களாவன.—சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்றுமாம்.

முக்குணங்களின் தொழிலும், புத்தியின் தொழிலுங் குறிக்குஞ் சிவப் பிரகாசச் செய்யுள்—42.

“ அலகில்குணம் பிரகாசம் லகுதைவியா பிருதி
அடர்ச்சிமிகுங் கவுரவம் அநியமம் இவை அடைவே
நிலவியிடும் மும்மூன்று உயிரொன்றில் கலந்தே
நிற்கும் இவை நிறைபுலனின் பயன் எவையும் கவரும்
குலவிவரு போகங்கொள் இடமாய் மாறுக்
குறைவில் ஒளியாம் அலகில் புலனிடத்தின் ஒருமை
பலவகையும் உடையதாய்ப் பரனருளாற் புந்தி
பஞ்சரசற் பாவகமும் பண்ணுவிக்குந் தானே.”

18. இனி புறக் கருவிகள் 25 ௬௰-க்கும் வகை :—பிருதிவியின் கூறு :—மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை ஆக ரு. அப்புவின் கூறு :—நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை ஆக ரு. தேயுவின் கூறு :—ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் ஆக ரு. வாயுவின் கூறு :—ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல் ஆக ரு. ஆகாசத்தின் கூறு :—குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆக ரு. ஆக புறக்கருவிகள் உ௰ரு. பிருதிவியின் வழித்தாவன :—இடகலை, பிங்கலை, சுழிமுனை, காந்தாரி, அத்தி, சிங்குவை, அலம்புருடன், சங்குனி, வைரவன், குருதை ஆக நாடிகள் ௰. வாயுவின் வழித்தாவன :—பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன் ஆக வாயுக்கள் ௰. ஆகாசத்தின் வழித்தாவன :—அர்த்தவேடணை, புத்திரவேடணை, தாரவேடணை ஆக ஏடணை ௩. வாக்காதியின் வழித்தாவன :—வசனம், கமனம், தானம், விசநகம், ஆநந்தம் ஆக ரு. பிரகிருதியின் வழித்தாவன :—சாத்துவிகம், ராசதம், தாமதம் ஆக குணம் ௩. விந்துவின் வழித்தாவன :—சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி ஆக வாக்கு ௪. ஆக புறக் கருவி ௬௰. ஆக தத்துவம் ௬௰௬ம். தோன்றின முறைமையில் ஒடுக்கங் கண்டுகொள்க.

19. இத்தத்துவங்களின் [1] தொழிலாவன :—பிருதிவிக்கு வடிவு நாற்கோணம். நிறம்—பொன். குணம்—கடினம். சுபாவம்—கிடத்தல். தொழில் - பொறுத்தல். குறி - வச்சிரம். தேவதை - பிர்மா. சூக்கும பஞ்சாக்கரம் - அட்சரம் அ(ல)காரம். கலை - நிவர்த்திகலை. அப்பு

---

[25]. புறக்கருவிகள் அறுபதின் தொகை வகைகளைக் குறிக்கும் தத்துவப் பிரகாசச் செய்யுள்—39.

“ பூதங்க டனிற் றோன்றுங் காரியமை யைந்தும்
புகலும்வாக் காதிகளிற் றோன்றுதொழி லைந்தும்

நீதிவா யுவிற்றோன்றும் வாயுப் பத்தும்
நிகழ்பூதந் தனிற்றோன்றும் புகழ்நாடி பத்தும்

கோதில்விந் துவிற்றோன்றும் வாக்கு நாலும்
குலவு மூலந்தோன்றுங் குணங்கள் மூன்றும்

பேதவா காயத்தி லேடணைகள் மூன்றும்
பிறக்கு மறுபது மிவைகள் புறக்கருவியெனுமே.”

[1]. பஞ்சபூதங்களின் வடிவு, நிறம், குணம், சுபாவம், தொழில், குறி, தேவதை முதலியவற்றைக் குறிக்கும் திருவதிகை மனவாசகங்கடந்தார் அருளிச் செய்த உண்மை விளக்கச் செய்யுட்கள் :—

“ நாற்கோணம் பூமிபுனல் நண்ணுமதி யின்பாதி
ஏற்கும் அனல் முக்கோணம் எப்போதும்—ஆர்க்கும்
அறுகோணம் கால்வட்டம் ஆகாயம் ஆன்மா
உறுகாய மாம் இவற்றால் உற்று.”

விற்கு வடிவு - பிறை. நிறம் - வெள்ளி. குணம் - நெகிழ்ச்சி. சுபாவம் - பரத்தல். தொழில் - கட்டுண்ணல். குறி - கோகனம். தேவதை - விஷ்ணு. அட்சரம் - வகாரம். சூக்கும பஞ்சாக்கரம் - உகாரம். கலை - பிரதிஷ்டா கலை. தேயுவிற்கு வடிவு - முக்கோணம். நிறம் - செம்மை. குணம் - சுடுதல். சுபாவம் - வவ்வுதல். தொழில் - எரித்தல். குறி - சுவஸ்திகம். தேவதை - உருத்திரன். அட்சரம் - ரகாரம். சூக்கும பஞ்சாக்கரம் - மகாரம். கலை - வித்தியாகலை. வாயுவுக்கு வடிவு - அறுகோணம். நிறம் - கருப்பு. குணம் - சலித்துத் திரட்டல். சுபாவம் - இரைத்தல். தொழில் - விம்முதல். குறி - அறுபுள்ளி. தேவதை - மகேஸ்வரன். அட்சரம் - யகாரம். சூக்கும பஞ்சாக்கரம் - விந்து. கலை -சாந்திகலை. ஆகாசத்துக்கு வடிவு - வட்டம். நிறம் - புகை. குணம் - இடங் கொடுத்தல். சுபாவம் - நிற்றல். தொழில் - போக்குதல். குறி - அமுத விந்து. தேவதை - சதாசிவம். அட்சரம் - அகாரம். சூக்குமபஞ்சாக்கரம் - நாதம். கலை - சாந்தியாதீதகலை. ஆக பஞ்சபூதத்தின் தொழில் கண்டு கொள்க.

20. [2] ஞானேந்திரியமாகிய சுரோத்திரத்தின் தொழிலாவன :—சுரோத்திரம் ஆகாயத்தினிடமாக நின்று செவியைப் பொருந்தி சத்தத்தை அறியும். துவக்கு வாயுவினிடமாக நின்று சரீரத்தைப் பொருந்தி பரிசத்தை அறியும். சட்சு - தேயுவினிடமாக நின்று கண்ணைப்பொருந்தி ரூபத்தைக். காணும் சிங்நுவை அப்புவினிடமாக நின்று நாவைப் பொருந்தி ரசத்தையறியும். ஆக்கிராணம் பிருதிவியினிடமாக நின்று மூக்கைப் பொருந்தி கந்தத்தையறியும். ஆக ஞானேந்திரியமைந்தின் தொழில் கண்டுகொள்க.

---

"பொன்பார் புனல்வெண்மை பொங்கும் அனல்சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்தூமம் - என்பார்
எழுத்து லவரயஅப் பாராதிக் கென்றும்
அழுத்தமதாய் நிற்கும் அது."

"குறிகுலிசம் கோகனதம் கொள்சுவத்தி குன்ரு
அறுபுள்ளி ஆரமுத விந்துப்—பிறிவின்றி
மண்புனல்தீக் கால்வானம் மன்னும் அடைவேயென்று
ஒண்புதல்வா ஆகமஓ தும்."

"பாராதி ஐந்துக்கும் பன்னும்அதி தெய்வங்கள்
ஆரார் அயனுதி ஐவராம்—ஓரோர்
தொழிலவர்க்குச் சொல்லுங்கால் தோற்ற முதல் ஐந்தும்
பழுதறவே பண்ணுவர்காண் பார்."

[2]. ஞானேந்திரிய கன்மேந்திரியங்களின் தொழில்களைக் குறிக்கும் சிவப்பிரகாசச் செய்யுள்—44.

"சொன்முறை செவிதுவக்கு நோக்கு நாக்குத்
துண்டம்இவை ஐந்திற்கும் தொகுவிடய மாக
மன்னியசத் தப்பரிச ரூபரச கந்தம்
மருவியிடும் இவை அடைவே வாக்குப் பாதம்
யின்னர்வரு பாணிமிகு பாயுவினே டுபத்தம்
பேசலுறும் ஐந்திற்கும் பிறங்கொலிகொள் வசனம்
உன்னரிய கமனதா னவிசர்க்கா னந்தம்
உற்றதொழில் பெற்றிடுவ துண்மை யாமே."

21. கன் மேந்திரியமாகிய வாக்காதியின் தொழிலாவன :—வாக்கு ஆகாயத்தினிடமாக நின்று வசனிக்கும்[1] பாதம் வாயுவினிடமாக நின்று கமனிக்கும், பாணி தேயுவினிடமாகநின்ற இடுதபேற்றலைச் செய்யும். பாயுரு அப்புவினிடமாக நின்று மலசலத்தைக் கழிப்பிக்கும். உபத்தம் பிருதிவியினிடமாக நின்று சுக்கிலத்தைக் கழிப்பிக்கும். ஆக கன் மேந்திரியமைந்தின் தொழில் கண்டுகொள்க.

22. தன்மாத்திரையாவன :—சத்தாதிகளைந்தும் சுரோத்திராதிகளுக்கு விடயமாயிருக்கும். [3] அந்தக் கரணங்களின் தொழிலாவன :—சித்தம் பற்றும், மனம் சிந்திக்கும், ஆங்காரங்கொண்டெழுப்பும், புத்தி நிச்சயிக்கும். ஆக அந்தக் காரணங்களின் தொழில் நான்குங் கண்டுகொள்க. ஆக ஆத்மதத்துவம் உ௰௪.

23. வித்தியாதத்துவத்தின் தொழிலாவன :—[4] காலமாவது செல்கால மான எல்லையும், நிகழ்காலமான பலமும், எதிர்காலமான புதுமையும் ஆக மூன்று விதமாயிருக்கும். நியதியாவது அரசன் ஆணை போல கன்ம பலத்தை உள்ளளவும் நிறுத்தும். கலையாவது ஆணவத்தைச் சிறிது நீக்கி ஆன்மாவுக்குக் கிரியையை எழுப்பும். அராகமாவது இச்சையை எழுப்பும். ஆக இந்தக் கலையாதி பஞ்சகஞ்சுகத்துடனே கூடிப் புருட னுக்கு இடமாகும். புருடனும் மாயையாகிய பிரகிருதி குணரூபமாய் நின்று பொருந்தி அதனுள் அழுந்தும். ஆக வித்தியாதத்துவத்தின் தொழி லேழுங் கண்டுகொள்க.

---

[3] அகங்காரம், மனம், சித்தம்என்னுந் தத்துவங்களின் தொழிலை விளக்கும் சிவப்பிரகாசச் செய்யுள்—43.

" ஆனதனு வதனிலுறும் அநிலனையும் இயக்கி
ஆங்காரம் நீங்காத அகந்தைக்கு வித்தாய்
யானலது பிறரொருவர் எனையொப்பார் புவியின்
இல்லையெனும் இயல்பினதாய் இந்திரியம் புலன்கள்
தாம்நுகரும் அளவில் அதின் முந்தியுறும் இச்சை
தானுருவாய்ச் சங்கற்ப சதாகதியும் தந்து
மானதமா னதுநிற்கும் சிந்தைநினை வையம்
வந்துதரு மனமொழிய வகுப்பொணுதே."

[4] அராகம் நியதி காலம் என்னும்தத்துவங்கள்கூறும் சிவப்பிரகாசம்—40.

" பேசரிய அராகம்தம் கன்மத்துக் கீடாய்ப்
பெற்றதனில் ஆசைதனைப் பெருகுவிக்கும் நியதி
தேசமிகும் அரசர்தரும் ஆணை செய்தி
செய்தவரைத் துய்ப்பிக்கும் செய்கை போல
நேசமுறும் தம்கன்மம் நிச்சயித்து நிறுத்தும்
நிகழ்காலம் கழிகாலம் எதிர்கால மென்றே
ஓசைதர வருங்காலம் எல்லைபலம் புதுமை
உறுவிக்கும் இறைசத்தி உடனாய் நின்றே."

**24.** இனி [5] புறக்கருவியின் தொழிலாவன—பூதத்தில் பிருதிவியின் கூறு. மயிர் வளரும், எலும்பு உறுத்தும், தோல் வற்கென்னும், நரம்பு கதித்தோடும், தசை முற்றும் ஆக ரு. அப்புவின் கூறு :—நீர் விழும், உதிரம் பரக்கும், சுக்கிலம் வந்திக்கும், மூளை யேத்தும், மச்சை நிரைக்கும் ஆக ரு. தேயுவின் கூறு :—பசி தபிக்கும், நித்திரை-மயக்கும், பயம்—அஞ்சுவிக்கும், மைதுனம்-சங்கஞ் செலுத்தும், சோம்பு-முறிப்பிக்கும். ஆக ரு. வாயுவின் கூறு :—ஓடல் விரைவிக்கும், இருத்தல் அமுத்துவிக்கும், கிடத்தல் பொருத்துவிக்கும், நடத்தல் எழுப்பு விக்கும், நிற்றல் நிற்பிக்கும் ஆக ரு. ஆகாயத்தின் கூறு :—குரோதம்—கர்விக்கும். லோபம்—பிசினிப்பிக்கும். மோகம்—மயக்கும். மதம்—எழுப்புவிக்கும். மாற்சரியம்—மிகுவிக்கும் ஆக ரு. ஆக பூதாதி தொழில் உ௰ரு.

**25.** பிருதிவியின் வழித்தாவன் :—[6] நாடி—இடகலை இடதுமூக்கில் நிற்கும். பிங்கலை—வலது மூக்கில் நிற்கும். சுழுமுனை நேரே நிற்கும். சிங்குவை வாயைப் பொருத்தி நிற்கும். காந்தாரி—கண்ணிமையைப்பற்றி நிற்கும். அலம்புருடன் செவியினிற்கும். வைரவன்—பாதத்தினிற்கும். சங்குனி—கழுத்தினினிற்கும். குருதை—மார்பினிற்கும். ஆக நாடியின் தொழில் கண்டு கொள்க.

---

[5] பிருதிவி, அப்புவின் காரியங்களைக் குறிக்குஞ் செய்யுள் :—

“ மயிர்தோ னரம்பென்பு மன்னுதசை யைந்துஞ்
செயிர்சேர் பிருதிவியின் சேர்வா—முயிர் நேர்
நீருதிர மூளை நிணஞ்சுக் கிலமைந்தும்
ஓரினிவை நீர்க்குணமென் றுண்.”

தேயு, வாயுவின் காரியங்களைக் குறிக்குஞ் செய்யுள் :—

“ பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை
தெசிகின்ற தீக்குணமோ ரைந்து—மொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை.”

ஆகாயத்தின் காரியங்களைக் குறிக்குஞ் செய்யுள் :—

“ ஓங்கும் வெகுளி மதமான மாங்கார
நீங்கா வுலோபமுட னிவ்வைந்தும்—பாங்காய
வண்ணமுலை மடவாய் வானகத்தின் கூறென்றார்
எண்ணிமிக நூலுணர்ந்தோ ரெண்.”

[6] பத்து நாடிகளைக் குறிக்குஞ் செய்யுள் :—

“ இடைபிங் கலைசுழுமுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி பூடாவோ
டங்குகு கன்னி யலம்பு வெனவுரைத்தார்
தங்குதச நாடிக டாம்.”

26. வாயுவான [7] பிராணன் மூலாதாரத்திற்றோன்றி இடகலை பிங்கலை வழியாக ஏறி, கபாலத்தளவுஞ் சென்று நாசியில் ௰௨ அங்குலம் புறப்பட்டு ௪ அங்குலம் வெளியே போய் ௮ அங்குலம் உள்ளடங்கும். இப்படி ஒரு நாளைக்கு ௨௰௧௲௬௱ சுவாசம் நடக்கும். இதில் ௭௲௨௱ பாழ் போய் ௰௪௲௪௱ சுவாசமுண்டாகும். அபானன் குதத்தினின்று மல சலங்களைக் கழிப்பிக்கும். உதானன் விக்கலிருமல் அவத்தை பண்ணுவிக்கும். வியானன் உண்ட அன்ன சாரத்தை 72,000 நாடிகளில் கலப்பிக்கும். சமானன் யாவையுஞ் சமனம் பண்ணும், நாகன்—இருமல் தும்மலுண்டாக்குவான். கூர்மன் கண்ணெற்றலைச் செய்யும். கிருதரன் சோம்பு, கொட்டாவிகளைச் செய்யும். தேவதத்தன்—இமைக்கும், நகைப்பிக்கும். தனஞ்சயன்—உடம்பை வீங்கவும் விரியவுஞ் செய்து, கபாலத்தை வெடிப்பித்துப் போகும். ஆக வாயுவின் தொழில் கண்டு கொள்க. வசன, கமன, தான, விசர்ச்சன, ஆனந்தமைந்தும் [8]வாக்காதிகளுக்கே விடயமாயிருக்கும்.

27. இனி, [9]குண மூன்றில் சாத்துவிதமாவது தவம், சமயம், கல்வி, சௌரியம், பொறுமை, கிருபை, சந்தோடம், செம்மை, அறிவு, அடக்கமுடைமை, இதம் இச் செய்கையாயிருக்கும். ராசதமாவது சௌரியம், உற்சாகம், அபிமானம், கிருபையற்றிருக்கை, இடும்பை இவை முதலாயினவாயிருக்கும். தாமதமாவது—மந்தம், கோள் சொல்லுதல், கௌரவமற்றிருக்கை, நித்திரை, மதம், மாற்சரியம், அதன்மம், அறியாமை, சோம்பு இவை முதலாவைாயிருக்கும். ஆக முக்குணத்தின் தொழில்கள் கண்டு கொள்க. ஏடணை மூன்றில் அர்த்தவேடணை, திரவிய முதலாயினவையால் வரும் பிணக்கு. புத்திர வேடணை புத்திரர் முதலிய சுற்றத்தாரால் வரும் பிணக்கு. தார ஏடணை மனைவிமூலமாக வருகின்ற பிணக்கு, ஆக ஏடணைத் தொழில் மூன்றுங் கண்டு கொள்க.

---

7 வாயுபத்தின் பெயர்களைக் குறிக்குஞ் செய்யுள் :—

"ஒப்பார் பிராண னபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே—யிப்பானு
நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருதரன்
தீதிலாத் தேவதத்த னே."

8 வாக்காதிகளாவன :—வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம். முறையே வாக்குக்கு வசனமும், பாதத்திற்குக் கமனமும், பாணிக்குத் தானமும், பாயுவுக்கு விசர்ச்சனமும், உபத்தத்திற்கு ஆனந்தமும் விடயமாயிருக்கும்.

9 சாத்துவிதம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களைக் குறிக்கும் தத்துவ விளக்கச் செய்யுள் :—

"கூறியமூலப் பகுதியிற் றோன்றுங் குணமவைதான்
றேறிய சாத்திகராசத தாமதமென்று செப்பு
மூறியமுக்குண மொத்தவை மூன்று முயர்விழிவற்
றேறியக்காற் புத்திதத்துவமா மென் றெண்ணுவரே."

**28.** வாக்கு [10]நான்கில் சூக்குமையாவது—சோதியாய் நேர்மையான நாதமாய் ஒன்று சொல்ல வந்தவிடத்தில் துரியத்தில் நாதந் தோன்றும். பைசந்தியாவது—சுழுத்தித்தானத்தைப் பொருந்தி முன் சொன்ன சூக் மையில் தோன்றின நாத முதலான வாயுவினுலே சிதறப்பட்டு மயில் முட்டையின் பஞ்சவர்ணமுங் கலங்க நின்று தோன்றுவது போல இனி மேற் சொல்கிற வசனத்துக்கு அங்காத்தல் முதலிய தொழில் ரூபமாய்ப் பிறக்கக் கருக் கொண்டிருப்பது. மத்திமையாவது—அந்த சிதறப்பட்ட வாயுவானது சொப்பனத்தானத்திலே பிராணவாயுவினுடனே சேர்ந்து அக்கரத்தினுடைய சொரூபங்களைப் புத்தியிலே ஒழுங்குபட நிறுத்துச் செவி யிலே கேளாமல் உள்ளே கேட்கத்தக்க தொனியாய் கண்டத்திலே முழங் கா நிற்கும். வைகரியாவது—சாக்கிரத் தானத்திலே பொருந்தி—நா, கண் டம், உதடு, பல், மூக்கு என்னும் ஐந்து தானத்திற்றெழிற்பட்டு செவிக்குக் கேட்க இயங்கும். இந்த வாக்கு நான்கும் [11]பஞ்சகலையைப் பற்றிக் காரியப்படும். இப்படியே புறக்கருவித் தொழில் [சூ.ம]-ம் கண்டு கொள்க. ஆக, [12]பஞ்சமலங்களும் அதிலுண்டாகிய தோற்றமும், ஒடுக்க மும், தொழிலுங் கண்டு கொள்க.

**29.** இனி அவத்தையாவன கேவல, சகல, சுத்தமென மூன்று வகைப் படும். இவற்றுள் கேவலமாவது தத்துவங்களொன்றுங் கூடாதிருப்பது. சகலமாவது—தத்துவங்களுடன் கூடி காரியப்படுவது. சுத்தமாவது— கேவல, சகல மிரண்டுந்தாக்காது பரசுகமாகிய ஆனந்தத்தைப் பெற் றிருப்பது. இதில் கேவலாவத்தையின் காரியமான கீழாலவத்தை ரு. சகலாவத்தையின் காரியமான மத்தியாலவத்தை ரு. சுத்தாவத்தையின்

---

[10] வாக்கு நான்குந் தோறும் முறைமை பற்றித் தத்துவப் பிரகாசம் 244-ம் செய்யுள் கூறுவதாவது :—

> " சத்தியினிற் றேன்றும் வாக்காதி நான்குந்
> தானிவன் வாக்கெழுப்பியிடு மதுதான் றன்மூலத்
> தொத்த தொருவிந்துவிலே நாதமாஞ் சூக்க
> முயரும் பைசந்தி யுந்தியி லுதான்கூடச்
> சித்த மயின் முட்டையினிற் சலம்போலாகுஞ்
> சென்று கண்டத்தளவு செவிக்குணரா வோசை
> மத்திமையாம் வாக்கு வைகரி தாணெட்டு
> வகைதோன்றிச் சொற்பொருளாய் வழங்கியிடுங் காணே."

[11] பஞ்சகலைகளாவன :—நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என ஐந்து.

[12] பஞ்சமலங்களாவன :—ஆணவம், திரோதாயி, மாயை, கன்மம், மாயேயம் என ஐந்து.

[13] கீழாலவத்தையிலே தொழிற்படுங் கருவிகளின் தொகைகளைக் குறிக் கும் சிவஞானசித்தியார் செய்யுள் 223 :—

> " சாக்கிர முப்பந்தைந்து நுதவினிற் கனவு தன்னில்
> ஆக்கிய விருபத்தைந்து களத்தினிற் சுழுனை மூன்று
> நீக்கிய விதயந் தன்னிற் றுரியத்தி லிரண்டு நாபி
> நோக்கிய துரியாதீத நுவலின்மூ லத்தி லொன்றே."

**காரியமான நின்மலாவத்தை. ரு. ஆக காரியாவத்தை யரு. இக்கேவலாவத்தையின் காரியமான [13] கீழால வத்தையாவன—சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆக ரு.**

**30. [14] சாக்கிரமாவது.—தத்துவம் நகூல் சிவதத்துவம் ரு புருடனீங்க லாகக் கவாதிகள் சு. பூதம் ரு ஆக யசு. கருவிகள் நீங்க, நின்ற கருவி உய, புறக்கருவியில் வாயு ய. வசனாதி ரு. கூட்டி ஆக நயரு கருவிகளும் லலாடத்தானத்திலே நின்று, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உள்ளம் சிறிது நீங்கும், நீங்கி மயக்கம் பொருந்திய அறிவுகளும் செலுத்துந் தத்துவங்களும் கைவிட்டு நின்ற அவசரம்.**

---

கேவலாவத்தையின் காரியமான கீழலாவத்தை ஐந்திலும் கருவிகள் நிற்கும் இயல்பை விளக்கும் தாயுமானவ அடிகள் பாடல்கள் :—

" சாக்கிரமா நுதலினிலிந் திரியம் பத்துஞ்
சத்தாதி வசனாதி வாயு பத்தும்
நீக்கமிலந் தக்கரணம் புருட னோடு
நின்றமுப் பானைந்து நிலவுங் கண்டத்
தாக்கியசொப் பனமதனில் வாயு பத்தும்
அடுத்தனசத் தாதிவச னாதியாக
நோக்குகர ணம்புருட னுடனே கூட
நுவல்வரிரு பத்தைந்தா நுண்ணி யோரே."

" சுழுத்தியித யந்தனிற் பிராணன் சித்தஞ்
சொல்லரிய புருடனுடன் மூன்றதாகும்
வழுத்தியநா பியிற்றுரியம் பிராண னோடு
மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கும்
அழுந்திடுமூ லந்தன்னிற் றுரியா தீதம்
அதனிடையே புருடனொன்றி யமருஞானம்
பழுத்திடும்பக் குவரறிவ ரவத்தை யைந்திற்
பாங்குபெறக் கருவி நிற்கும் பரிசுதானே."

[14] சாக்கிரமாவது.—விழித்திருக்கும் நிலே.

**சிவதத்துவம்** ரு.—சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், விந்து, நாதம் என்பன.

**புருடனீங்கிய கலாதி** சு—அராகம், வித்தை, கலை, நியதி, காலம், மாயை என்பன.

**பூதம்** ரு.—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன.

மேற்குறித்த கசு. கருவிகளும் கேவல சாக்கிரத்தில் தொழிற்படுத்த வில்லை. அகக் கருவி முப்பத்தாறில் இப்பதினாறும் நீங்கலாக எஞ்சிய உய. கருவிகள் தொழிற்படும். அவையாவன :—

**தன்மாத்திரை** ரு.—சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்பன.

**கன்மேந்திரியம்** ரு.—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்பன.

**ஞானேந்திரியம்** ரு.—சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம் என்பன.

**அந்தக்கரணம்** ச.—மனம், அகங்காரம், புத்தி, சித்தம் என்பன. **புருடன் க.**

**வாயு, ய.**—பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பன.

**வசனாதி** ரு.—வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்.

லலாடம்=நெற்றி, லலாடத்தானம்=நெற்றியினிடம்.

**31. சொப்பனமாவது.**—ஞானேந்திரியம் ரு. கன்மேந்திரியம் ரு. ஆக ய-ம் சாக்கிரத்தினிற்க மற்ற உயரு, கருவிகளுடனே கண்டத்தானத்து ஒடுங்கும் தேகத்தனுய் பயன் கொண்டு அசிவனமாக நின்ற அவசரம்.

**சுழுத்தியாவது.**—வாயு கூ. மனம், புத்தி, அகங்காரம் ஆக. ரு. கருவிகளுடனே ஒன்றுந்தெரியாமல் இருதயத்தானத்தில் நின்ற அவசரம்.

**துரியமாவது.**—சித்தம் இருதயத்தினிற்க, பிராண வாயுவும் புருடனும் நாபித்தானத்தில் ஒன்றுமற நின்ற அவசரம்.

**துரியாதீதமாவது.**—பிராணவாயு நாபித்தானத்தில் நிற்க புருடனென்றுமே மூலாதாரத்தில் அதீதமாய்க் கருவிக ளொன்றுமில்லாமல்—கேவலந் தானுகி நிற்பது ஆக [15] கேவலாவத்தையின் காரியமான கீழாலவத்தை ரு.

**32. மத்தியாலவத்தையாவது.**—[16] சாக்கிரத்தில் சாக்கிரம், சாக்கிரத்தில் சொப்பனம், சாக்கிரத்தில் சுழுத்தி, சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் துரியாதீதம் ஆக ரு. இதில் சாக்கிரத்தின் துரியாதீதமாவது ஒருவனெரு பதார்த்தத்தை ஓரிடத்தில் வைத்து அறியாமல் திகைத்து நின்ற அவசரம். சாக்கிரத்தில் துரியமாவது சிறிது பிராண வாயு இயங்கின அவசரம்.

---

[15] கேவாலவத்தையாவது.—ஆன்மா, அறிவு, செயல் குறிகுணம் ஒன்றுமின்றி, கருவிகளுடன் கூடித் தொழிற்படாமல் நிற்கும் நிலே. இதன் காரியமான கீழாலவத்தையாவது—ஆன்மா சாக்கிரத்தானமாகிய லலாடத் தானத்திலிருந்து, சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற நிலேகளில் கீழ் நோக்கிச் செல்வது. கீழ் நோக்கிச் செல்லும் ஆன்மா ஒரு செயலுமின்றி ஆணவமலத்தால் மயங்கிக் கிடக்கும்.

இத்தகைய ஆன்மாக்களே ஆண்டவன் பெருங்கருணேயுடன் தனுவாதிகளேக் கொடுத்துப் பரிபக்குவப்படுத்தி ஆட்கொண்டருளுந் தன்மையைக் கீழ்வருந் திருவாசகச் செய்யுள் உணர்த்தும் :—

"அறிவிலாத எனேப் புகுந்தாண்டு கொண்டறிவதையருளி மேல், நெறியெலாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனே யறுப்பானேப், பிறிவிலாத இன்னருள்கள் பெற்றிருந்தும் மாறுடுதி பிண நெஞ்சே, கிறியெலாம் மிகக் கீழ்படுத் தாய்கெடுத் தாயென்னேக் கெடுமாறே".

[16] மத்தியாலவத்தை ஐந்தின் இயல்பைக் குறிக்கும் செய்யுள் :—

"விரும்பு மரும்பொருளே வீழ்த்து மயங்க
லிரிந்தவ னிலன் பெறுகை—வருந்தறிவு
தோன்றுத லேயம்விழுந்த விடந்தோன்றுதலென்
றுன்றவைந்துஞ் சாக்கிரத்தி னும்."

இவ்வைந்து அவத்தைகளில் கருவிகள் நிற்கும் முறைமை :—சாக்கிரத்திற் சாக்கிரமாவது—சுத்த தத்துவங்கள் ஐந்தும் தொழிற்படும் அவசரம், சாக்கிறத்திற் சொப்பனமாவது—சிவம், சத்தி, சதாக்கியம், ஈச்சுரங்களாகிய நான்கு தத்துவங்களும் தொழிற்படும் அவசரம். சாக்கிரத்திற் சுழுத்தியாவது—சிவம், சத்தி, சாதாக்கிய மென்னும் மூன்று தத்துவங்களும் தொழிற்படும் அவசரம். சாக்கிரத்திற்றுரியமாவது—சிவம், சத்தியெனும் இரண்டு தத்துவங்களும் தொழிற்படும அவசரம். சாக்கிரத்

சாக்கிர சுழுத்தியாவது அந்தப் பதார்த்தத்தை எங்கே வைத்தோமென்று விசாரிக்க வந்தவிடம். சாக்க்கிர சொப்பனமாவது—அந்தப்பதார்த்தம் நிழலிடத் தோன்றுவது. சாக்கிர சாக்கிரமாவது—அந்தப் பதார்த்தத்தைப் புலப்பட அறிகிறது. ஆக மத்தியாலவத்தை ரு.

33. சுத்தாவத்தையின் காரியமான [17]நின்மலாவத்தையாவது அமல சாக்கிரம் அமலசொற்பனம் அமலசுழுத்தி, அமலதுரியம், அமலதுரியாதீதம் ஆக ரு. அமல சாக்கிரமாவது—ஆசாரியராலே ஞானதீட்சை பெற்று, திரிபாதார்த்த உண்மையை விசாரித்தறிந்துங் கேட்டுஞ் சிந்தித்துதெளிந்தும், பொருளுடனே நிஷ்டை கூடும்போது கருவிகணீங்க விசாரித்து நிற்பது.

அமல சொற்பனமாவது:—கருவிகள் நீங்கியும், நீங்காமலும், நடுவே சற்றுப் பதைப்புண்டாய் நிற்பது. அமல சுழுத்தியாவது—தத்துவம் நீங்கி மேலான கேவலந்தானுய் நிற்பது. அமல துரியமாவது—கேவலம் நீங்கி அருளினுலே தன்னையுங்கண்டு அருளையுங்கண்டு தன்வசம் அழிந்து அருள் வசத்ததாய் நிற்பது.

அமல துரியாதீதமாவது.—பணியறநின்று, சிவத்தைத் தரிசித்து ஆனந்தத்தில் அழுந்திநிற்பது. ஆகரு. ஆககாரணஅவத்தை ௩. காரிய அவத்தை யரு ஆக, யஅ-ல் மலபந்தருக்கு அவத்தை, யஉ. சத்தினிபாதத்துத்தமருக்கு அவத்தை ௬. ஆக அவத்தை, யஅ.ங் கண்டு கொள்க.

---

திற்றுரியாதீதமாவது சிவ தத்துவம் ஒன்றே தொழிற்படும். இவற்றைத் தம்மகத்தே கொண்டு விளங்கும் சிவஞான சித்திச் செய்யுள் 36 :—

" ஐந்துசாக் கிரத்தி னான்கு கனவினிற் சுழுனே மூன்று
வந்திடுந் துரியந் தன்னி னிரண்டொன்று துரியா தீதந்
தந்திடுஞ் சாக்கி ராதி யவத்தைக டானந் தோறு
முந்திடுங் கரணந் தன்னிற் செயருறு முணர்ந்து கொள்ளே."

[17] நின்மலசுத்தாவத்தையாவது.—கேவல சகலம் இரண்டும் தாக்காது விடச் சிவனருட் சார்பினில் ஆன்மா நிலைபெற்று நிற்றல்.

இந்த நின்மலாவத்தையைக் குறிக்கும் சிவஞானபோதம் 4-ம் சூத்திரம் 3-ம் அதிகரண வெண்பா :—

" இலாடத்தே சாக்கிரத்தை யெய்திய வுள்ளம்
இலாடத்தே யைந்தவத்தை யெய்தும்—இலாடத்தே
அவ்வவ இந்திரியத் தத்துறைகள் கண்டதுவே
அவ்வவற்றி னீங்கலது வாங்கு ".—மெய்கண்டதேவர்.

அமல துரியாதீதத்தில் ஆன்மா சிவனே அணைந்து ஆனந்தத்தில் அழுந்தி நிற்கும் நிலையைக் குறிக்கும் திருமூலர்—திருமந்திரச் செய்யுள் 2,277 :—

" நின்றஇச் சாக்கிர நீள்துரி யத்தினின்
மன்றனு மங்கே மணஞ்செய்ய நின்றிடும்
மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடும்
அன்றே யிவனும் அவன்வடி வாமே.

ஒப்புமைப்பகுதி :—பட்டினத்தடிகள் அருளிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவை செய்யுள் 13. அடிகள் 25—35.

**34.** இனி, உணர்த்து முறைமை. ஆன்மதரிசனம். ஆன்மசுத்தி, ஆன்மலாபம் என மூவிதமாயிருக்கும். இதில் [18] ஆன்மதரிசனமாவது—ஆன்மா படிகம்போல் பொருந்தினது. தானுயிருப்பனெனவும், எப்போதும் வியாபி யென்றும், இவனறிவும், சிவனறிவும் கண்ணும் ஆதித்தனும்போல் கலந்து காணு மென்றும், ஒருவனொரு பதார்த்தம் அறிய வேண்டில் பொறியிலொன்றும் பூதத்தி லொன்றும் அந்தக்கரண நான்கும் கலாதிகளேழும் சிவதத்துவமைந்தும் ஆக, யஅ. கருவி கூடாமல் அறியமாட்டா னென்றும் வித்தியா தத்துவத்தில் மாயையை சிவதத்துவஞ் செலுத்த, கால—நியதி-கலையை சத்திதத்துவஞ் செலுத்த, அராகத்தை ஈச்சுரதத்துவஞ் செலுத்த. புருடனை சாதாக்கிய தத்துவஞ் செலுத்த, வித்தையை சுத்தவித்தை செலுத்த, இனி, சுத்தவித்தையை இச்சாசத்தி செலுத்த, சாதாக்கியத்தையும் சத்தி தத்துவத்தையும் கிரியாசத்தி செலுத்த, ஈச்சுரத்தையுஞ் சிவதத்துவத்தையும் ஞானசத்தி செலுத்த இப்படி காரியப்படுவதல்லது, தத்துவங்கள் தானேவந்து இவனைப்

---

"புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையுங் கண்டேன் என்னை
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணாத் தன்மை யோரே."

[18] சுருங்கக் கூறின் ஆன்மதரிசனமாவது.—முற்கூறிய கருவிகள் முப்பத்தாறும் தானல்லவென்றும், தனதல்லவென்றும் அருளால் அறிந்த ஆன்மா, தனக்கெனச் செயலொன்றுமின்றி அவ்வருளோடு கூடி நிற்றல் ஆன்ம தரிசனமாகும். இக்கருத்தை தன்னகத்தே கொண்டுள்ள சிவப்பிரகாசச் செய்யுள் **72.**

"தன்னறி வதனு லேதுந் தனக்கறி வில்லை யேனுந்
தன்னறி வாக எல்லாம் தனித்தனி பயனருந்தும்
தன்னறி வறியுந் தன்மை தன்னாலே தனைய றிந்தால்
தன்னையும் தானே காணும் தானது வாகி நின்றே."

ஆன்ம தரிசனத்தின் கருத்தை நாயக நாயகி பாவத்தில் வைத்து விளக்கக் கூடிய திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருவாரூர்த் திருத்தாண்டகம் செய்யுள் 7 :—

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

**பொருந்த பந்தத்திலும் முத்தியிலுங் கூட்ட மாட்டாதென்றும் சிவன் தானே தத்துவங்களைப் பொருந்த மாட்டானென்றும், திருவருள்கூட்டி முடிப்பிக்க காரியப் படுவனென்றும், ஒருக்காலும் விட்டு நீங்காமலிருக்கிற அருளுக்கே சுதந்தர மல்லாமல் தனக்கொரு சுதந்தரமில்லையென்றும் அறிந்து நிற்பதே ஆன்மதரிசனம்.**

**35. ஆன்மசுத்தியாவது.—தனக்கனாதியிலே துணையாயிருந்து இற்றை வரையுந் தோன்றாமல் இப்போதிவனையுங் காட்டித், தன்னையுங் காட்டி நிற்கிற திருவருளே தாரகமாய்த் தனக்குப் பந்தமாயிருந்த மலம் [19] திரிபுடியினாலே நீங்கி, தன்னுடைய சுதந்தரவீனத்தை அறிகின்றதினாலும் கன்ம சஞ்சிதம் தீட்சையினாலும் பிராரத்த சரீரமளவும் ஆகாமியஞ் சுட்டற நிற்கையினாலும், மாயை இரண்டு வகையில், இரண்டுவகை தத்துவங்கள் நீங்கி நிற்கிற படியினாலும் திரோதாயி பிரபஞ்சத்தில் ருசுப்பியாமல் இருந்தபடியினாலும் பஞ்ச மலங்களையும் நீங்கக்கண்டு ஒரு பணியும் அறநிற்பதே [20] ஆன்மசுத்தி.**

---

*சீவன், சிவனைச் சிவனருளாலே தான் அறியும் என்பதை ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தில்—சிவ புராணத்தில் " அவனருளாலே அவன்றாள் வணங்கி "—என்று கூறியிருத்தல் காண்க. திருநாவுக்கரசு சுவாமிகளும்—பொது—வினாவிடைத் திருதாண்டகத்தில் "........... அவனருளே கண்ணாகக் காணின் அல்லால், இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே "—என்று அருளிச் செய்துள்ளார்கள்.*

[19] திரிபுடியாவது.—ஞாதிரு, ஞானம், ஞேயம் என்பன காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என தமிழ் மொழியால் குறிக்கப்படுவன.

[20] ஆன்ம சுத்தியின் இயல்பை விளக்கும் சிவப்பிரகாசம் செய்யுள் 73.

" தத்துவ மான வற்றின் தன்மைகள் உணருங் காலை
உய்த்துணர்ந் திடஉதிப்ப தொளிவளர் ஞான மாகும்
அத்தன்மை அறியு மாறும் அகன்றிட அதுவாய் ஆன்மாச்
சுத்தமாம் சுத்த ஞானத் தொருமுதல் தோன்று மன்றே."

சுட்டறிவினால் அறியப்படும் ஏகதேசக் காட்சியாகிய பிரபஞ்சப் பற்று ஐந்தெழுத்தை விதிப்படி உச்சரிப்பதனால் பற்றறக்கழியும். அப்பற்றுக்கழிந்தவிடத்து ஆன்மா தனக்கொரு செயலுமில்லாததாய்த் தற்போத நிகழ்ச்சியின்றித் திருவருளையே தாரகமாகக் கொண்டு அவ்வருளிலடங்கி அவ்வருளேதானாகி நிற்றல் ஆன்மசுத்தியாம். ஐந்தெழுத்து ஓதுவதின் பயனைத் திருமூலர் திருமந்திரம் 2716-ம் செய்யுள் கூறுவது காண்க :—

" சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

36. [21] ஆன்மலாபமாவது.—அப்படி இடைவிடாமல் நிற்பதே பரமானந்த சுகம். உண்டானதைப் பெற்று ஆனந்த மேலிட்டு, அதனால் அழுந்தி நிற்பதே நேயத்தழுந்தல். அந்த நிஷ்டை கூடுதற்கரிதாகில், அருளிலே உறைந்து நிற்க அதுவுங்கூடாதாகில் பூத முதல் நாத மீறுகப் பொய் யென்று கண்டு நீங்கித் தன்னையுங்கண்டு தானும் அருளும் நிற்கிற முறைமையை யறிந்து அருளினாலே முத்தி பஞ்சாக்கரத்தை செபியாமல் செபிக்க. அதுவுங் கிட்டாதாகில் ஞான நூலோதி, சிந்தித்து [22] அந்திரியாகம் பண்ணவும். இப்படிச் செய்ய உண்மை வந்து கைகூடும். இப்படி நேயத் தழுந்தலதுமுதலாக [23] எந்த வேலையிலே நின்றாலும் ஆசாரியரையும் திருக்கோயிலையும் திருவேடத்தையும், மிகவும் வழிபட வென்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

முற்றும்.

சிவமெய்ஞான கந்தப்ப தேசிகன் திருவடி வாழ்க.

1870-ம் வருஷம் அக்டோபர் மாதம்கருஉ, குந்தம்பாக்கம் சுப்பராய முதலி.

---

[21] ஆன்மலாபம், சிவப்பேறு, நிட்டை, சுவானுபூதி என்பன ஒரு பொருட் சொற்கள்.

ஆன்மலாபத்தைக் குறிக்கும் சிவப்பிரகாசச் செய்யுள் 83.—

"முந்திய ஒருமை யாலே மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்தல் உண்மை தெளிந்திடல் அதுதா னாக
வந்தவா றெய்தல் நிட்டை மருவுதல் என்று நான்காம்
இந்தவா றடைந்தோர் முத்தி எய்திய இயல்பி னோரே."

[22] அந்தரியாகம்—அகப் பூசை, அந்தர்—அகம், யாகம்—பூசை.

[23] எந்நிலையில் நின்றாலும் இறைவனை மறவாமையே பொருள் என்பதைத் திருத்தொண்டர் புராணத்துள்—சாக்கிய நாயனார் புராணம் 6-ம் செய்யுள் உணர்த்துவது காண்க.—

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்" என்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார்."

சீவன் முத்தி பெற்றார்க்கும் குருலிங்க சங்கம வழிபாடு வேண்டு மென்பதைக் கூறும் சிவஞான போதம் 12-ம் சூத்திரம்.—

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே."

குருவழிபாட்டைக் குறிக்கும் சிவஞான சித்திச் செய்யுள் 326.—

"ஞானயோ கக்கிரியா சரியை நாலும்
நாதன்தன் பணிஞானி நாலினுக்கும் உரியன்
ஊனமிலா போகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோகிகிரி யாவான்தான் ஒண்கிரியை யாதி
ஆனஇரண் டினுக்குரியன் சரியையினில் நின்றோன்
அச்சரியைக் கேஉரியன் ஆதலினால் யார்க்கும்
ஈனமிலா ஞானகுரு வேகுருவும் இவனே
ஈசனிவன் தானென்றும் இறைஞ்சி ஏத்தே."

திருக்கோயில் வழிபாட்டைக் குறிக்கும் சித்தியார் செய்யுள் 235.—

“ திருக்கோயி லுள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே
உருக்கோலி மந்திரத்தா லேநினையும் அவர்க்கும்
உளனெங்கும் இலன்இங்கும் உளனென் பார்க்கும்
இருப்பாய வடிவாகி இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தின் வந்துதிப்பன் இருஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணாத பால்முலைப்பால் விம்மி
ஒழுகுவது போல்வெளிப்பட் டருளுவன்அன் பர்க்கே. ”

சங்கம வழிபாட்டைக் கூறும் சித்தியார் செய்யுள் 324.—

“ அறிவறியான் தனையறிய ஆக்கை யாக்கி
அங்கங்கே உயிர்க்குயிராய் அறிவுகொடுத் தருளால்
செறிதலினால் திருவேடம் சிவனுருவே யாகும்
சிவோகம்பா விக்கும் அத்தால் சிவனுமாவர்
குறியதனால் இதயத்தே அரனைக் கூடும்
கொள்கையினால் அரனவர் குறியொடுதாம் அழியும்
நெறியதனால் சிவமேயாய் நின்றிடுவ ரென்றால்
நேசத்தால் தொழுதிடுநீ பாசத்தார் விடவே. ”

சங்கம வழிபாட்டைக் குறிக்கும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகம்.—

“ எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி, உவராதே யவரவரைக் கண்டபோது உகந்தடிமைத் திறம் நினைந்தங் குவந்து நோக்கி, இவர்தேவர் அவர்தேவ ரென்று சொல்லி இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக், கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே. ”

# அருஞ்சொற்பொருள் மேற்கோட் செய்யுட்களுக்கு உரை முதலியன.

[அருஞ்சொற் பொருள் விளக்கத்தை அவ்வப்பக்கங்களின் அடிக்குறிப்பிற் காண்க.]

## பக்கம் 1.

பதி—கடவுள், கட—பகுதி, உள்—தொழிற் பெயர் விகுதி, மன வாக்குக் காயங்கள் முதலியவற்றைக் கடந்து நிற்பவர் என்பது பொருள்.

" பல கலையா கமவேதம் " என்னும் சிவப்பிரகாசச் செய்யுள் 13-க்குப் பதவுரை :—இச் செய்யுளில் பதியின் சொரூப லக்கணம் கூறப்பெற்றுள்ளது.

வேதம் ஆகமம் பல கலையாவையினுங் கருத்து—வேதம் ஆகமம், அவற்றின் வழி நூல் சார்பு நூல் ஆகிய எல்லாவற்றினும் உள்ள கருத்து, பதி பசு பாசம் தெரித்தல்—பதி பசு பாசம் என்னும் முப் பொருள்களின் இயல்பைத் தெரிவித்தலாம், பதி பரமே—அவற்றுள் பதியாவது ஏனை இரண்டுக்கும் மேலாயிருப்ப தொன்றும், அது தான்—அப்பதிதான், நிலவும் அரு உரு அன்றி—விளங்குகின்ற அருவமும் உருவமும் அல்லாத தாய், குணம் குறிகள் இன்றி—குணமும் குறிகளும் இல்லாததாய், நின்மலமாய்—மலத்திற் பொருந்தாததாய், ஏகமாய்—ஒன்றாய், நித்தமாகி —அழிவில்லாததாய், அலகு இல்உயிர்க்கு உணர்வாகி—அளவில்லாதனவாய உயிர்களது அறிவுக்கு அறிவாய், அசலமாகி—சலனமற்றதாய், அகண்டித மாய்—கண்டிக்கப்படாததாய், ஆனந்த உருவாய்—ஆனந்தமே சொரூபமாய், அன்றிச் செல அரிதாய்—மாறுபட்ட உணர்வினால் சென்று அடைய அரியதாய், செல்கதியாய்—வழிபட்டவர்கள் சென்றடையும் முத்தி நிலையாய், சிறிதாகிப் பெரிதாய்—அணுவுக்கணுவாய் மகத்துக்கு மகத்தாய், திகழ்வது—விளங்குவ தாம், தத்—அதனை, தெளிந்துளோர் சிவம் என்பர்—அறிவால் தெளிந் தோர் சிவம் என்று சொல்வர்.

பூரணமாய்—எங்கும் நிறைவுடையதாய், இதற்குக்காட்டிய ஒப்புமை மேற்கோட் செய்யுள், திருநாவுக்கரசர் தேவாரம்—திருப்பூவனூர்—திருக் குறுந்தொகை—செய்யுள் 10 :—

" நார ணன்னொடு நான்முகன் இந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
**பூர ணன்திருப் பூவனூர் மேவிய**
**கார ணன்**னெனை யாளுடைக் காளையே " ?

**பொழிப்புரை.**—திருமாலும் பிரமனும், இந்திரனும், விநாயகரும், முருகப்பெருமானும் வணங்குந் திருவடிகளையுடைய, எங்கும் நிறைந் திருப்பவராகிய திருப்பூவனூர் என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள உலக காரணராக விளங்கும் சிவபெருமான் என்னை ஆட் கொண்டருளிய காளையாவார்.

ஒன்றாய்—ஒரு பொருளாய், ஒப்புமை மேற்கோள்—திருவாசகம்—திருக் கோத்தும்பி.

8-ம் செய்யுள் :—

“ **ஒன்றாய் முளைத்தெழுந்து** எத்தனையோ கவடுவிட்டு,
நன்றாக வைத்தென்னை நாய் சிவிகை ஏற்றுவித்த,
என்தாதை தாதைக்கும் எம்மனைக்கும் தம் பெருமான்
குன்றாத செல்வர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ. ”

**பொழிப்புரை.**—அரசவண்டே! ஒரு பொருளாகத் தோன்றி, பல பொருள்களாகத் விரிந்து, என்னை நல்ல நிலையில் வைத்து, நாயைப் பல்லக்கின் மேல் ஏற்றி வைத்தாற்போல நாய் போன்ற என்னை உயர்ந்த பதவியில் இருக்கச் செய்த, என் தந்தையும் எனது தந்தைக்கும் தாய்க்கும் தலைவனுமாகிய குறைவுபடாத அருட் செல்வரிடத்தே சென்று ஊதுவாயாக.

“ **ஏக நாயகனை** இமயவர்க்கரசை ” என்பது சேந்தனார் அருளிய திருவீழிமிழலை திருவிசைப்பா முதற் செய்யுள் முதலடி. தேவர்தலைவனும் சிவபெருமானே உலகிற்கெல்லாம் ஒரு முதல் நாயகன். உயிருக்குயிராய்—சீவான்மாக்கள் தோறும் பரமான்மாவாய், ஒப்புமை மேற்கொள்—திருஞான சம்பந்தர் அருளிய திருவீழிமிழலைத் தேவாரம் :—

“ உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம்,
நிரை சேரப்படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான் [கோயில்,
வரை சேரும் முகில் முழவ மயில்கள் பல நடமாட வண்டு பாட,
விரை சேர் பொன் இதழிதரமென் காந்தள் கையேற்கும் மிழலை [யாமே. ”

**பொழிப்புரை.**—கிளந்தெடுத்துக்கூறப்பெறும் எண்பத்து நான்கு லட்சம் வேறுபாடுகளுடன் விளங்கும் வடிவுடைப் பிறவிகளை முறையே படைத்து அவற்றில் வாழும் உயர்கட்கெல்லாம் உயிராய் அங்கங்கே நின்றருள் செய்யும் சிவபெருமான் வீற்றிருக்குங் கோயிலாவது, மலையைச் சார்ந்த மேகம் மத்தளம் போல் இடித் தொலிக்க அங்குள்ள மயில்கள் நடனமாட, வண்டுகள் பாட, மணம் பொருந்திய கொன்றை பொன்னாகிய மலரை அளிக்க மெல்லியி காந்தள் மலராகிய கை அதனை ஏற்கும் இயற்கை வளம் வாய்ந்த திருவீழிமிழலையாகும்.

## பக்கம் 2.

பஞ்ச கிருத்தியங்கள்—ஐந்தொழில்கள். ஐந்தொழில்கள்—படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

தனு—உடம்பு.

கரணம்—அந்தக் கரணங்கள்.

புவனம்—உலகம்.

போகம்—நுகர் பொருள்.

திதித்தும்—படைத்தும்.

சங்கரித்தும்—அழித்தும்.

உபாதனத்திரயம்—படைப்புக்கு அடிப்படையாக உள்ள சுத்த மாயை, அசுத்தமாயை, சுத்தா சுத்த மாயை என்னும் மூன்று.

திரோபவித்தும்—மறைத்தும்.

அனுக்கிரகித்தும்—அருள் செய்தும்.

தன்மை, முன்னிலை, படர்க்கை.

இச்சை—இச்சாசத்தி.

ஞானம்—ஞான சத்தி.

கிரியை—கிரியா சத்தி.

அவசரம்—நிலை.

## பக்கம் 3.

இறைவன் ஐந் தொழில் புரியுமிடத்தும் எத்தகைய விகாரமுமின்றி இருப்பன் என்பதற்குச் சிவப்பிரகாச மேற்கோள் :—

" கந்தமலர் அயன்படைக்கும் " என்னும் செய்யுளுக்குப் பதவுரை :—

உலகம் எல்லாம் கந்தமலர் அயன் படைக்கும்—பிரபஞ்ச மெல்லா வற்றையும் வாசனை பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம தேவன் படைப்பன், கண்ணன் அளித்திடும்—அப்பிரபஞ்ச மெல்லாவற்றை யும் திருமால் காப்பன், அவை எம் கடவுள் தானே அந்தம் உற அழித் திடுவன்—அவற்றை எங்கள் சிவனே இறுதி பெறும்படி அழிப்பான், ஆதலாலே—ஆகையாலே, அயன் அரியும் அவனது உயர் அதிகாரத்து வந்த முறை—பிரம விட்டுணுக்களும் அவனுடைய தலைமையான அதிகாரத்தைப் பெற்று வந்த முறையிலே வைத்து, தன் தொழிலே மன்னுவிப்பன்—தன்னுடைய தொழிலையே அவரிடத்துப் பொருந்தச் செய்வன், எல்லாம் வருவிப்பன்—சிவன் ஒருவனே முத்தொழிலையும் தன்னிடத்து நிகழச் செய்வன், விகாரங்கள் மருவான்—அம் முத்தொழிலும் செய்தல் பற்றி விகாரங்கள் பொருந்தான், வானின் முந்து இரவி எதிர் முளரி ஒன்று அலர்வு உறும்—ஆகாயத்தில் விளங்கும் ஆதித்தன் சந்நிதியிலே தாமரை ஒன்று அலரும், ஒன்று அலர்வான் முகையாம்—ஒன்று அலர்தற்குப் பக்குவ மான அரும்பாயிருக்கும், ஒன்று உலரும்—ஒன்று வாடி உலரும், முறை யின் ஆமே—இப்படி ஆதித்தன் சந்நிதில் தாமரை முத்தொழிலும் படி னும் ஆதித்தன் விகார மடையாத முறைமை போலப் பிரபஞ்சமெல்லாம் சிவ சந்நிதானத்தில் சிவன் நிர்விகாரியாயிருக்க முத்தொழிலும் படும்.

பசு—ஆன்மா.

விஞ்ஞானகலர்—விஞ்ஞானத்தால் கலை நீங்கியவர்.

அட்டவித்தியேசுரர்—ஈச்சுர தத்துவத்தில் அதிகாரஞ் செய்து கொண் டிருக்கும் எண்வகை வித்தியேசுரர்.

அணுசதாசிவர்—சாதாக்கிய தத்துவத்தில் சதாசிவ மூர்த்தியைச் சூழச் சேவித்துக்கொண்டிருந்து போகங்களைப் புசிக்கும் அபர முத்தர் பதின்மர்.

சாதாக்கியர்—சதாசிவர். சத்தகோடி மகாமந்திரர்—சுத்த வித்தியாதத்துவத்திலிருக்கும் எழுகோடி மந்திரேசுரர்.

## பக்கம் 4.

எழுவித கோடிகள்—எழுவிதமான இறுதி முடிபுடைய மந்திரங்கள். சுத்த மாயா தத்துவம்—சுத்தப் பிரபஞ்சத்துக்குக் காரணமான மாயை.

பிரளயாகலர்—பிரளயத்தில் கலை நீங்கியவர்.

நூற்றுப் பதினெட்டு உருத்திரர்—பக்குவ மலகர்மமுடையபுவனேசர் முதலிய பதினெண்மரும், பக்குவா பக்குவ மலகர்மமுடையவராயுள்ள சதருத்திரரும் காலாக்கினி யுருத்திரரும் ஆவர்.

ஆணவமலம்—இது வியாபகமான ஆன்மாவை அணுத்தன்மை படுமாறு செய்தலினாலே ஆணவமலம் என்னும் பெயர் பெற்றது.

கன்மம்—கன்மமலம்.

## பக்கம் 5.

சகலர்—கலையோடு கூடியவர்.

மாயை—மாயா மலம்.

பிரகிருதி தத்துவம்—அசுத்தமாயையின் தூலபரிணாமம்.

நால்வகைத் தோற்றம்—சராயுசம், அண்டசம், உற்பீசம், சுவேதசம் என்பன.

யோனி—வடிவம், தேகம், யோனி பேதங்களைக் குறிக்கும் சிவப்பிரகாசம் 42-ம் செய்யுள் :—“ தோற்றியிடும் ” இதற்குப் பதவுரை :—

அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில் துதைந்துவரும் உற்பிச்சம் சராயுசங்கள் நான்கின் தோற்றியிடும்—அப்படிப் பிறக்கும் பொழுது அண்டசங்கள் சுவேதசங்கள் பூமியிலே நெருங்கிவருகின்ற உற்பிச்சம் சராயுசங்கள் என்னும் நான்கினுந் தோற்றியிடும் எழுவகைப் பிறப்புக்களில், ஊற்றம் மிகு தாவரங்கள் பத்தொன்பது என்றும்—நிலைபேறு மிக்க தாவரங்கள் பத்தொன்பது நூறாயிர பேத மென்றும், ஊர்வபதினைந்து—ஊர்வன பதினைந்து நூறாயிர பேதமென்றும், அமரர் பதினொன்றேடு—தேவர்கள் பதினொரு நூறாயிர பேதமென்றும், உலவாமால் தரும் நீர் உறைவன நற்பறவைகள் நாற்காலி பப்பத்து மன்னியிடும்—குறையாத விருப்பத்தைத் தருகின்ற நீரில் வாழ்வன நல்ல பறவைகள் நாற்கால் மிருகங்கள் ஒவ்வொன்று பத்து நூறாயிர பேதமென்றும் பொருந்தியிடும், மானுடர் ஒன்பதும் ஆ—இவற்றுடன் மானுடயோனி ஒன்பது நூறாயிர பேதமுமாக, ஏற்றி ஒரு தொகையாக யோனி எண்பத்து நான்கு நூறாயிரம் என்று எடுத்து இயம்புவர்கள்—கூட்டி ஒரு தொகையாக யோனி பேதம் எண்பத்து நான்கு நூறாயிர பேதமென்று எடுத்துச் சொல்லுவர் பெரியோர்.

உரை சேரும்—இத்தேவாரப் பொருளை, பக்கம் 1, செய்யுள் உரையிற் காண்க.

புவனம் 274. இதன் விளக்கத்தை 5, 6-ம் பக்கங்கள் அடிக்குறிப்பில் பார்க்க.

## பக்கம் 6.

ஆர்ச்சித்து—பற்றி.

இருவினையொப்பு—இன்பத் துன்பங்களில் ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமின்றி, ஆன்ம அறிவின்கண் ஒப்ப வெறுப்பு நிகழ்தல்.

சத்தினி பாதம்—சிவசத்தி பதிதல்.

மலபரி பாகம்—ஆணவமலத்தினது சக்தி ஆன்ம அறிவை மயக்க இயலாது வலி குன்றி நிற்கும் அவதரம்.

சதுர்ப்புசம்—நான்கு கைகள்.

திருநீலகண்டம்—காளகண்டம்.

திரிநேத்திரம்—மூன்று கண்கள்.

மந்தம்—தாமதம்—மெழுகானது வெய்யிலுக்கு எதிர்ப்படின் உருகுதல் போல்வது.

மந்ததரம்—அதிக தாமதம்—அரக்கானது வெய்யிலின் முன்இருந்து வெதும்புதல் போல்வது.

தீவிரம்— உறைப்பு—நெய்யானது சூட்டுக்கு இளகுதல் போல்வது.

தீவிரதரம்—அதிதீவிரம்—தைலதாரையானது சிறிதும் இடையறுது ஒழுகுதல் போல்வது.

## பக்கம் 7.

சரியை—திருக்கோயில் அலகிடல், மெழுகுதல் முதலியன (பக்கம் 10 பார்) சரியையின் இயல்பும் பயனும் எடுத்துரைக்கும் " **தாதமார்க்கம் சாற்றில்** " என்னும் **சிவஞான சித்தியார்** 271-ம் செய்யுளின் பதவுரை :—

தாதமார்க்கம் சாற்றில்—மேற்கூறிய நான்கனுள்ளே தாதமார்க்கமாகிய சிவசரியைச் சொல்லுமிடத்து, சங்கரன் தன் கோயில் தலம் அலகு இட்டு—சிவபெருமானுடைய திருக்கோயிலிலே திருவலகிட்டு, இலகு திருமெழுக்குஞ் சாத்தி—விளங்குகின்ற திருமெழுக்கும் இட்டு, போதுகளும் கொய்து—பூக்களும் எடுத்து, பூந்தார் மாலை கண்ணி பல புனிதற்குச் சமைத்து—மலரினால் தார்மாலை கண்ணி முதலிய தொடையல்கள் பலவற்றையும் சிவபெருமானுக்குச் சாத்துமாறு அமைத்து, புகழ்ந்து பாடி—அவருடைய கீர்த்தியினை வாயார வாழ்த்தி, தீது இல் திருவிளக்கு இட்டு—குற்றமற்ற பிரகாசம் பொருந்திய விளக்குகளையும் ஏற்றி, திருநந்தவனமும் செய்து—அழகிய நந்தவனங்களும் வைத்து, திருவேடம் கண்டால்—சிவ

னடியார் திருவேடத்தைக் காணுமிடத்து, அடியேன் செய்வது யாது? பணியீர் என்று பணிந்து—அடியேன் செய்யத்தக்க குற்றேவல் யாது; அதனை அருள வேண்டும் என்று வணங்கி, அவர்தம் பணியும் இயற்றுவது—அவர் அருளிச் செய்யும் பணிவிடையும் செய்வதாம், இச்சரியை செய்வோர் ஈசன் உலகு இருப்பர்—இச்சரியையினை அனுட்டிப்போர் சிவலோகத்திலிருப்பார்.

சரியைத் தொண்டின் இலக்கியமாக விளங்கும் திருநாவுக்கரசர் அருளிய 'நிலை பெறுமாறெண்ணுதியேல்' என்னும் திருத்தாண்டகத்தின் பொழிப்புரை :—

'நெஞ்சமே ! நீ நிலைபெற்று வாழவேண்டுமானால் இங்கே வா ! நாள் தோறும் எம் தலைவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்குச் சென்று பொழுது விடிவதற்குள் ஆலயத்தைத் திருவலகிட்டும் திருமெழுக்கிட்டும் தூய்மை செய்து, பூமாலை தொடுத்துச் சாத்தக் கொடுத்துப் புகழ்ந்து பாடி, தலைமேல் கை குவித்துக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி, சங்கரா சயபோற்றி போற்றி என்றும், கங்கை தங்கிய சடையுடைய முதல்வா ! என்றும், ஆரூரா என்று பலகால் சொல்லி வாய்விட்டு அலறுவாயாக.

' பெரும் புலர்காலை மூழ்கி ' என்னும் அப்பர் திருநேரிசையின் பொழிப்புரை :—

' பெருமை பொருந்திய காலைப் பொழுதிலே நீராடிப்பித்தராம் பரம சிவனிடத்தே அன்புடையராகி முகையும் மலருங்கொண்டு அகத்தே ஆர்வங் கொண்டு அருச்சித்து விருப்புடன் விளக்கும் தூபமும் முறைப்படி இட வல்லவர்க்குக் கரும்பிலிருந்துண்டாகிய கற்கண்டுபோல் இனியராயிருப்பர் திருக்கடவூர் வீரட்டானத்தில் எழுந்தருளியுள்ள அப் பித்தராம் பரம் பொருள்.

**சமய தீட்சை**—மந்திரத்தை உச்சரிப்பதற்குரிய அதிகாரத்தை அளித்தல்.

**கிரியை**—புதியமலர் தூபதீபங்கொண்டு இறைவனை அருச்சித்து வழிபடுதலும், அக்கினிகாரியஞ் செய்தலும்.

கிரியாசாதனையின் இயல்பும் பயனுங் கூறும் சிவஞான சித்தியார் "புத்திர மார்க்கம் புகலின்" என்னும் 272-ம் செய்யுளுக்குப் பதவுரை :—

புத்திர மார்க்கம் புகலின்—புத்திரி மார்க்கமாகிய சிவகிரியா பாகத்தைச் சொல்லுமிடத்து, புதிய விரைப்போது புகை ஒளி மஞ்சனம் அமுது முதல் கொண்டு—புதிய வாசனையுடைய மலர்கள் தூபம் தீபம் திருமஞ்சனம் திருவமுது முதலிய உபகரணங்களை அமைத்துக்கொண்டு, ஐந்து சுத்தி செய்து—பூதசுத்தி முதலிய பஞ்ச சுத்திகளுஞ்செய்து, ஆசனம் மூர்த்தி மூர்த்திமானும் சோதியையும் பாவித்து ஆவாகித்து—ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்து மூர்த்திமானாகிய பரஞ்சோதியைப் பாவனை செய்து ஆவாகித்து, சுத்த பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றி—மெய்யன்போடு அருச்சனை செய்து, துதித்து வழிபட்டு, பரிவினொடும் எரியில்

வருகாரியமும் பண்ணி—விருப்போடு அக்கினி காரியமுஞ்செய்து முடித்தலாம், நித்தலும் இக்கிரியையினை இயற்றுவோர்கள்—நாடோறும் இக்கிரியை அனுட்டிப்போர், நினையுங்கால்—ஆராயுமிடத்து, நின்மலன்தன் அருகிருப்பர்—சிவனது சமீபத்திலிருப்பதாகிய சாமீபத்தை அடைவர்.

## பக்கம் 8.

கிரியைத் தொண்டின் இலக்கியமாய் விளங்கும் **திருஞான சம்பந்தர்** அருளிய '**நறைமலி தரு**' என்னும் தேவாரத்திற்குப் பொழிப்புரை :—

மணம்மிக்க சந்தனக் குழம்பொடு முகையும் மலரும் தூபமும் தீபமும் புனலுங்கொண்டு தன்னை மறவாமல் நாடோறும் வழிபடும் அடியவர்கள் குறை வில்லாத பதத்தை அடையும்படி அருள் செய்யும் குணமுடைய இறைவன் தங்கியிருக்கும் நீர்சூழ்ந்த சிவபுரத்தை நினைபவர் செயமகள் தலைவராவர்.

சிவயோகம்—(பக்கம் 8 பார்).

**யோக சாதனையின் இயல்பும் பயனுங் கூறும் "சகமார்க்கம்"** என்னும் **சிவஞான சித்தியார் 273-ம்** செய்யுளுக்குப் **பதவுரை :—**

சகமார்க்கம்—யோகபாதமாகிய தோழ நெறி, புலன் ஒடுக்கி—ஐம்பொறிகளை ஒடுக்கி; வளி இரண்டும் தடுத்து—உச்சுவாசம் நிச்சுவாசம் இரண்டினையும் அடக்கி, சலிப்பற்று—மனம் சலனப்படாது ஒருவழி நிறுத்தி, முச்சதுரம் முதல் ஆதாரங்கள் அகமார்க்கம் அறிந்து—முக்கோணம் முதலியவடிவினவாகிய மூலாதாரம் முதலிய ஆருதாரங்களின் உள்வழிகளை அறிந்து, அவற்றின் அரும் பொருள்கள் உணர்ந்து—அவ்வாருதாரங்களிலுள்ள பத்மதளம், அக்கரங்கள் அதிதேவதைகளாகிய அரிய பொருள்களையும் அறிந்து, அங்கு அணைந்து போய்—மூலாதாரந் தொடங்கி அவ்வவ்விடங்களிலே பொருந்தித் தியானித்து, மேல் ஏறி—அவ்வாருதாரங்களுக்கும் மேலே சென்று, மதிமண்டலத்தின் அவர் முகம் அமுது ஆர்க்க—சந்திர மண்டலத்தின் கண்ணுள்ள பிரமரந்திர கமலத்தினது மலர்ந்த முகையானது அமிர்தத்தை ஊட்ட, உடலம் முட்டத் தேக்கி—அதனைத்தேகம் முழுவதும் நிரப்பி, முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக—பூரணப் பிரகாசத்தைத் தியானித்துச் சமாதி கூடுதல் பிரதானங்கமாக, வினைகள் உகமார்க்க அட்டாங்க யோகம் முற்றும் உழத்தல்—வினைகள் கெடுதற்குரிய வழியாகிய இவ்வட்டாங்க யோகத்தை முற்றும் அநுட்டித்தலாம், உழந்தவர் சிவன் தன் உருவத்தைப் பெறுவர்—இங்ஙனம் அநுட்டித்தோர் சிவனது சொரூபத்தைப் பெறுவர்.

**யோக நெறிக்கு இலக்கியமாய் விளங்கும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்** அருளிய '**தேடுவன் தேடுவன்**' என்னும் தேவாரத்திற்குப் பொழிப்புரை :—

இறைவனுடைய செந்தாமரை மலர் போன்ற பாதங்களைத் தேடுபவனாய் உள்ளே நாபிக் கமலத்திற்குமேல் ஒரு நாள் விரல் அளவில் நாடிக்கண்டு கொண்டு இறுமாந்திருப்பேன்; அவ்விறைவனுடைய வலிமை பொருந்திய கையைப் பிடித்துக்கொண்டு மகிழ்ந்து உள்ளே ஆமாத்தூர் அடிகளோடு ஆனந்தமாய் ஆடுவேன்.

சிவஞானம் (பக்கம் 8 பார்).

**ஞான சாதனையின் இயல்பும் பயனும் உணர்த்தும் சிவஞான சித்தியார் ' சன்மார்ககஞ் சகல கலை '** என்னும் 274-ம் செய்யுளுக்குப் பதவுரை :—

சன்மார்க்கம்—ஞான பாதமாகிய சன்மார்க்கமாவது, சகலகலை புராண வேத சாத்திரங்கள் சமயங்கள் தாம்பலவும் உணர்ந்து—எல்லாக்கலை ஞானங் களும் புராணங்களும் வேதங்களும் சரித்திரங்களும் சமய நூல்களும் ஆகிய பலவற்றையும் ஆராய்ந்தறிந்து, பல்மார்க்கப் பொருள் பலவுங் கீழாக—பல சமயங்களிலும் கூறப்படும் பொருளியல்புகள் சித்தாந்த மல்லவாக, மேலாம் பதி பசு பாசந் தெரித்துப் பரமசிவனைக் காட்டும் நன்மார்க்க ஞானத்தை நாடி—மேலான பதி பசு பாசம் என்னும் முப்பொருளையும் சித் தாந்தமாகத் தெரிவித்துப் பரமசிவனைத் தெளிவாய்க் காட்டும் நல்ல நெறி யாகிய சிவாகம ஞானத்தைத் தெளிந்தறிந்து, ஞானம் ஞேயமொடு ஞாதிருவும் நாடாவண்ணம்—அறிவாகிய அவ்வருளையும், அறியப்படுவதாகிய சிவத்தையும், அறிபவனாகிய தன்னையும் பகுத்தறிதலன்றி, பின் மார்க்கம் சிவனுடனும் பெற்று—அத்து விதமாகிய பிணிப்பு முறையில் சிவத்துடன் கலந்து நிற்றலாம், ஞானப பெருமையுடையோர்—இந்த ஞான நெறியைச் சாதித்து அநுபவ மடைந்த பெரியோர், சிவனைப் பெறுவர்—சிவசாயுச்சிய மாகிய பரமுத்தியைப் பெறுவர்.

## பக்கம் 9.

சன்மார்க்க நெறியின் இலக்கியமாக விளங்கும் **ஸ்ரீமணிவாசகப் பெருமான்** அருளிய திருவாசகமாகிய ' முத்திநெறி ' என்னும் செய்யுளுக் குப் பொழிப்புரை :—

முத்தியடையும் வழியை அறியாத கீழ்மக்களோடு அவர் நெறியிற் செல்ல முயல்கின்ற எனக்குப் பக்தி நெறியை அறிவித்துப் பண்டைவினைகள் அற்று ஒழியும்படி மன அழுக்கைப் போக்கி என்னை ஆட்கொண்ட தலைவனும் இறைவன் அருள் செய்த விதம் யாருக்குக் கிடைக்கும், இது என்ன அதிசயம் ! தீக்கை, சமயம், விசேடம்.

நிருவாணம் (பக்கம் 9 பார்).

ஆன்மா—உயிர்.

சித்தாந்த நெறியே திருவடிப் பேறளிப்பது என்னுங் கருத்தை யுணர்த் தும் **' சித்தாந்தத்தே '** என்னும் சிவஞானசித்தியார் பாடல் 263-க்குப் பதவுரை :—

சித்தாந்தத்தே—மேற்கூறிய சிவாகமங்களிலே, சிவன்தன் திருக் கடைக்கண் சேர்த்து—சிவபெருமான் குருவடிவாய் எழுந்தருளிப் பக்குவ ஆன்மாக்களுக்குத் தனது திருநோக்கமாகிய தீக்கை செய்து, இச்செநநம்

ஒன்றிலே சீவன்முத்தராக வைத்து—இப்பிறப்பிற்றனே சீவமுத்தராகச் செய்து, ஆண்டு—தடுத்தாட்கொண்டு, மலம் கழுவி—மும்மல அழுக்கை நீக்கி, ஞானவாரி மடுத்து—ஞானசாகரத்திலே மூழ்குவித்து, ஆனந்தம் பொழிந்து—சிவானந்தம் மேலிடச் செய்து, வரும்பிறப்பை அறுத்து—மேல் வரும் பிறவியை ஒழித்து, முந்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று மொழிந்திடவும்—முத்தி முடியாகிய திருவடி மலர்கீழ் வைப்பன் என்று சொல்லியிருக்கவும், உலகர் எல்லாம் மூர்க்கர் ஆகி—உலகத்தார் அனைவரும் இதனை அறியமாட்டாத அறிவிலிகளாய், பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றி—பித்தமுடிபாகிய பெரிய மயக்க வார்த்தைகளைப் பேசி, பாவப் பெருங்குழியில் வீழ்ந்திடுவர்—பிறப்பாகிய பெரிய குழியில் வீழ்வர், இது என்ன பிராந்தி—இது என்ன மயக்கம்.

ஆன்மா—அறிவுடைப் பொருள்.

பசு—பாச சம்பந்தத்தால் ஆன்மா பசு எனப் பெயர் பெற்றது.

சீவன்—சீவன்மா.

புருடன்—பஞ்சகஞ் சுகமுடையவன்.

பூமான்—ஆன்மா.

## பக்கம் 10.

தேகி—தேகத்தை யுடையவன்.

கிஞ்சிஞ்ஞன்—சிற்றறிவுடையவன்.

சுதந்தரவீனன்—சுதந்திரமில்லாதவன்.

அகர்த்தா—கர்த்தா அல்லாதவன்.

அணு—ஆணவத்தால் மறைக்கப்பட்டுத் தாழ்மையுடையவன்.

அழியாதவன்—உயிருக்கு அழிவின்மையால அப்பெயர் வந்தது.

உள்ளம்—உயிர்.

சைதன்னியன்—அறிவுடையவ்ன்.

பிரகிருதி—ஆன்மா.

புத்தி—அறிவுவடிவினன்.

பிராணன்—உயிர்.

சதசத்து—முத்தியில் சத்தோடும், பெத்தத்தில் அசத்தோடும் கூடி நிற்பவன்.

புற்கலன்—உடம்புடையவன்.

ஆன்மாவிற்குரிய 18 பெயர்களின் விளக்கத்தை (பக்கங்கள் 9, 10 பார்).

ஆணவமலம்—(பக்கம் 10 பார்).

மூலமலம்—ஆணவமலம்.

ஆணவமும் திரோதாயியும் பற்றிய சிவப்பிரகாசம் ‘ ஏகமாய் ’ என்னும் 20-ம் செய்யுளுக்குப் பதவுரை :

ஏகமாய்—ஆணவ மலமானது ஒன்றாய், தம் கால எல்லைகளின் மீளும் எண்ண அரிய சத்திய தாய்—தத்தம் பரிபாக காலத்திலே விட்டு நீங்கும் எண்ணிறந்த சக்திகளையுடையதாய், இருள் ஒளிர இருண்ட மோகமாய்—இருளும் ஒளி என்னும்படி மிக இருண்ட பேரிருளாய், நின்று அஞ்

ஞானத்தை விளைப்பதாய், செம்பில் உறுகளிம்பு ஏய்ந்து—செம்பிற் பொருந்திய களிம்பை ஒத்து, நித்த மூலமலமாய்—அநாதி தொட்டு சகசமாயுள்ள மூலமலமாய், அறிவு முழு தினையும் மறைக்கும்—ஆன்மாக்களின் வியாபக அறிவு முழுதையும் விளங்கவொட்டாது மறைத்து நிற்கும், திரோதான சத்தி—திரோதான சத்தியானது, நின்று—ஆன்மாக்களோடு நின்று. பாக மாம் வகை பண்ணுதலால்—அந்த ஆணவமலம் பரிபாக மடையும்படி அதற்கேற்ற உபாயங்களைச் செய்தலால், மலம் எனவும் பகர்வர்—இந்தத் திரோதான சத்தியையும் மலம் என்று உபசரித்துச் சொல்லுவர் அது தானே—ஆணவ மலம் பரிபாக மானபின் அந்தத் திரோதான சத்திதானே, நாகம்மாந்தி மதியம் பொதி சடையான் அடிகள் நணுகும் வகை—பாம்பையும் பெரிய கங்கையையும் சந்திரனையும் அணிந்த சடையினையுடைய சிவபெருமானது திருவடிகளை அவ்வான்மாககள் பொருந்தும்படி, பரிந்து கருணை மிக நயக்கும்—இரங்கிமிக்க அருளைப் புரியும்.

காளிதம்—களிம்பு.

வியாபகமாய்—நிறைவுடையதாய்.

## பக்கம் 11.

இதாகிதங்கள்—நன்மை தீமைகள்.

பிராவகம்—வெள்ளம்.

பரிகாரம்—பிராயச்சித்தம் (பக்கம் 11 பார்.) கன்மமலத்தின் இயல்பு கூறும் ' நண்ணியிடும் ' என்னும் சிவப்பிரகாசம் 28-ம் செய்யுட்குப் பதவுரை :—

கன்மமலம்—கன்ம மலமானது நண்ணியிடும் உருவதனுக்கு ஏதுவாகி—ஆன்மாக்கள் பொருந்துகின்ற உடம்புகளுக்குக் காரணமாய், நாநா போகங்களாய்—அவ்வுடம்புகளால் அனுபவிக்கப்படும் பலவிதமான போகங்களைத் தருவதாய், நாச உற்பத்தி பண்ணிவரும் ஆதலாம் அநாதியாகி—அழிந்தும் தோன்றியும் வருதலால் பிரவாகநாதியாய, பலவாகி—பலவிதப் படுவதாய், அணுக்கள் தோறும் படர்வதாகி—ஒவ்வோர் ஆன்மாவிலும் செறிந்திருப்பதாய், எண்ணி வருமனம் வாசம் கன்மத்தால் இயற்றும் இயல்பினதாய்—நினைக்கின்ற மனத்தினாலும் வாக்கினாலும் காயத்தினாலும் செய்யப்படும் இயல்பினை யுடையதாய். மதிகமதாய்—புத்தி தத்துவம் பற்றுக்கோடாய், இரு பயனும் புண்ணிய பாவமாய்—இன்பமும் துன்பமும் ஆகிய இருபயன்களையுந்தரும் புண்ணியபாவ வடிவாய், புஎர் காலேமாயை மேவிப் பொருந்தும்—சகல தத்துவங்களும் ஒடுங்கும் சங்கார காலத்திலே மாயைச் சென்று பொருந்தும், இது புகலுமாறு—இதுவே ஆகமங்கள் சொல்லும் முறையாம்,

ஆறத்துவாக்கள்—மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் என்னும் அறுவகைகளாம்.

நாலு மலங்கள்—ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி.

திரோதாயி—திரோதான மலம்.

## பக்கம் 12.

சுத்தமாயை—தூயமாயை. **சுத்தமாயையின்** இயல்பைக் கூறும் '**உன்ன வரும்**' என்னும் **சிவப்பிரகாசச்** செய்யுள் 21-க்குப் பதவுரை :—

உன்னல் அரும் பரசிவன் தன்—மனத்தால் நிலைத்தற்கரிய பரம சிவனது சத்தியின் வியாபாரத்தால், மிகும் குடிலைதனில் நாதம் உதிக்கும்—மேலான சுத்தமாயையாகிய குடிலையிலே நாத தத்துவந் தோன்றும், நாதம் தன்னில் விந்துவரும்—அந்த நாதத்தில் விந்து தத்துவம் தோன்றும், அதில் ஒளி வளரும் சதாசிவராம்—அந்த விந்துவில் ஒளிமிகுந்த சாதாக்கிய தத்துவம் தோன்றும், அவரில் தயங்கவரும் ஈசர்—அச் சாதாக்கியத்திலே மயேசுரதத்துவம் விளங்கித் தோன்றும், வித்தை தனை அளிப்பர்—அது சுத்த வித்தியா தத்துவத்தைத் தோற்றுவிக்கும், அதனால்—அவ்வாறு தோன்றுவதினால், இவ்வகை ஐவர் மன்னுவர்—அவ்வத் தத்துவங்களின் பெயரே பெயராய்த் தோன்றிய கர்த்தாக்கள் ஐவர் அத்தத்துவங்களைப் பொருந்தி நிற்பர், வாய்மையினால் முன்னே வந்திடும் என்று உரை செய்த விந்து—சத்திபொருந்திய வியாபாரித்தலால் முன்னே நாதத்திலே தோன்றுமென்று சொன்ன விந்துவானது, வாழாவகையே—தவறாது, முன் சூக்குமாதி ஒரு நான்கும் உதவும் என்று—முதலிலே சூக்குமை முதலிய வாக்கு நான்கையும் தோற்றுவிக்கும் என்று, அரும் கலைகள் முதிர்ந்துளோர் மொழிந்திடுவர்—அரிய சிவாகமங்களைக் கற்று முதிர்ந்தோர் சொல்வர்.

அசுத்தமாயை—தூய்மையில்லாத மாயை.

**அசுத்தமாயையின் இயல்பைக் குறிக்கும் சிவப்பிரகாசம் " உருவாதி "** என்னும் 22-ம் செய்யுளுக்குப் பதவுரை :—

மாயை தான்—அசுத்த மாயையானது, உரு ஆதி சதுர்விதமாய்—காரியப்பாட்டிலே தனு, கரண, புவன, போகம் என்னும் நால்வகைப் பொருள்களாய், ஒன்று ஒன்று ஒவ்வா உண்மையதாய்—ஒன்றுக்கொன்று ஒவ்வாத தூல சூக்கும இயல்பினையுடைய தத்துவங்களாய், நித்தமாய்—காரண ரூபத்தில் நித்தமாய், ஒன்றாய்—ஒன்றாய், என்றும் அருவாகி—எப்பொழுதும் அருவமேயாய் இருப்பதாய், கன்ம அந்தம் அணுக்கள் யார்க்கும் ஆவரமாய் — கன்மம் நீங்குமளவும் ஆன்மாக்கள் யாவர்க்கும் மயக்கஞ் செய்வதாய் அசித்தாய்—சடமாய், அசலமாகி—சலனமற்றதாய், விரிவாய தன் செயலில் வியாபியாய்—தன்னிடத்தினின்றும் விரிந்த

காரியப் பொருள்களில் **தான் வியாபித்து** நிற்பதாய், எல்லாங் விரிந்தவகை புரிந்த அடைவில்—அக்காரியங்களெல்லாம் விரிந்து தோன்றச் செய்த முறையில், அவை மேவி ஒடுங்கவரு காலம்—அவை பொருந்தி ஒடுங்கவருகிற சங்கார காலத்திலே, உயிர்கள் எல்லாம் மருவு இடமாய்—ஆன்மாக்கள் எல்லாம் பொருந்தியிருத்தற் கிடமாய், மலமாய்—மும்மலங்களுள் ஒன்ருய், அரன் அருளால் மன்னியிடும்—சிவனது திரோதான சத்தியால் காரியப்படுத்தப் படுவதாய் நிலைபெறும்.

**பூதங்களாவன**—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து.

## பக்கம். 13.

**ஞான இந்திரியங்கள்**—சுரோத்திரம். துவக்கு, சட்சு. சிங்ஙவை, ஆக்கிராணம் என்றும் ஐந்து. **கன்ம இந்திரியங்கள்**—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் ஐந்து.

முக்குணங்கள்—சத்துவம், இராசதம், தாமதம் என்பன. முக்குணங்களின் தொழினும், புத்தியின் தொழிலும் உணர்த்தும் சிவப்பிரகாசம் **அலகில் குணம்** என்னும் 42-ம் செய்யுளுக்குப் பதவுரை :—

அலகு இல்குணம்—குணங்கள் எண்ணில்லாதன, பிரகாசம் லகுதை—பிரகாசமும் லகுதையும், வியா பிருதி அடர்ச்சி—வியா விருதியும் அடர்ச்சியும், மிகும் கௌரவம் அநியமம்—மிக்க கௌரவமும் அநியமமும், இவை—ஆகிய இவைகள். அடைவே நிலவியிடும்—முறையே சாத்துவிக இராசத தாமதகுணங்களைப் பொருந்தி நிற்கும், மும்மூன்றும் உயிர் ஒன்றிற் கலந்தே நிற்கும்—இவை ஒன்பது குணங்களும் ஒவ்வொரு உயிரிலும் கூடி நிற்கும், இவை—இம்முக்குணங்களும். நிறைபுவனின் பயன் எவையுங் கவரும்—நிறைந்த இந்திரியங்களால் வரும் விடயங்கள் எல்லாவற்றிலும் ஆசையை உண்டாக்கும், குலவிவரு போகம் கொள் இடமாம்—கொண்டாடப் பட்டு வரும் போகங்களைப்பற்றச் செய்யும், மாருக குறைவில் ஒளியாம்—ஒரு காலும் நீங்காத பூரணமான பிரகாசமாயிருக்கும், புந்தி—புத்தியானது அலகுஇல் புவனிடத்தில் ஒருமை பலவகையும் உடையதாய்—எண்ணில்லாத விடயங்களில் ஒற்றுமை அநேக விதங்களையும் உடையதாய், பரன் அருளால்—பரமசிவனது அனுக்கிரகத்தாலே, பஞ்சாசத் பாவகமும் பண்ணுவிக்குந் தானே—ஐம்பது பாவங்களையுஞ் செய்து நிற்கும்.

## பக்கம் 14.

புறக்கருவிகள் 60 (பக்கம் 14 பார்).

புறக்கருவிகள் 60-ஐயும் தொகுத்துக் கூறும் '**பூதங்கள் தனில்**' என்னும் தத்துவப் பிரகாச 39-ம் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

பூதங்களில் தோன்றும் காரியம் இருபத்தைந்தும், வாக்காதிகளில் தோன்றும் தொழில் ஐந்தும், வாயுவிற்றேன்றும் வாயுப் பத்தும், பூதத் திற்றேன்றும் நாடிபத்தும், குற்றமற்றவிந்துவில் தோன்றும் வாக்கு நாலும், விளங்குகின்ற மூலந்தனில் தோன்றும் குணங்கள் மூன்றும், ஆகாயத்தில்தோன்றும் வடணைகள் மூன்றும் ஆக புறக்கருவிகள் அறுபதாம்.

பஞ்ச பூதங்களின் வடிவு, நிறம் முதலியன கூறும் உண்மை விளக்கச் செய்யுட்களின் உரை :—

'நாற்கோணம்' என்னும் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

பூமிக்கு நாற்கோணமும், புனலுக்கு அரைமதியும், அனலுக்கு முக் கோணமும், காற்றுக்கு அறுகோணமும், ஆகாயத்துக்கு வட்டமும் வடிவ மாகும்.

'பொன்பார்' என்னுஞ் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

பூமி பொன்னிறமும், புனல் வெண்ணிறமும், அனல் சிவப்பு நிறமும், காற்றுக் கருமை நிறமும், வான் புகை நிறமும் உடையது என்பர். பிருதிவி முதலிய பூதங்களுக்கு முறையே அட்சரங்கள் ல, வ, ர, ய, அ. என்பன.

## பக்கம் 15.

'குறி குலிசம்' என்னுஞ் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

குலிசம், தாமரை, சுவத்திகம், அறுபுள்ளி, அமுதவிந்து ஆகிய ஐந்தும் முறையே, மண், புனல், தீ, கால், வானம் என்னும் ஐந்திற்கும் உரிய குறிகளாம்.

'பாராதி' என்னும் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

பார், புனல், தீ, காற்று, வானம் என்னும் ஐம்பூதங்களுக்கும் அதி தெய்வங்கள் முறையே அயன், அரி, உருத்திரன், மகேசுரன் சதாசிவம் என்போர். முறையே இவர்களுடைய தொழிகள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம்.

**ஞானேந்திரிய கன்மேந்திரியங்களின் தொழில் பற்றிக் கூறும் 'சொன்ன முறை' என்னும் சிவப்பிரகாசம், 44-ம் செய்யுட்குப் பதவுரை :—**

சொன்ன முறை—முன்னே சொன்னபடி, செவி துவக்கு நோக்கு நாக்கு துண்டம் இவை ஐந்திற்கும் தொகு விடயமாக—செவி, மெய், கண் நா, நாசி என்னும் இந்த ஞானேந்திரியங்கள் ஐந்துக்கும் நெருங்கிய விடயங் களாக, மன்னிய சுத்தப் பரிச, ரூப ரச சுந்தம் இவை அடைவே மருவியிடும்— நிலை பெற்ற சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தம் என்னும் இவை ஐந்தும் முறையே பொருந்தும். வாக்குப்பாதம் பின்னர் வரு பாணி மிகு

பாயுவினோடு உபத்தம் பேசல் உறும் ஐந்திற்கும்—வாக்குப் பாதம் பின் வருகின்ற பாணி மிக்க பாயு உபத்தம் என்று சொல்லப்படுகின்ற கன் மேந்திரியங்கள் ஐந்திற்கும், பிறங்கு ஒலி கொள் வசனம் உன்ன அரிய கமன தான விசர்க்க ஆனந்தம் (அடைவே) உற்ற தொழில்—விளங்குகின்ற ஓசை பொருந்திய வசனம் நினைத்தற்கரிய கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்னும் இவை ஐந்தும் முறையே பொருந்திய தொழிலாகும், பெற்றிடுவது உண்மையாம்—இத்தொழில்களை அவை பெற்றிருப்பது உண்மையாகும்.

## பக்கம் 16.

அகங்காரம் மனம் சித்தம் என்னும் தத்துவங்களின் தொழில் பற்றிக் கூறும் ' **ஆனதனு** ' என்னும் **சிவப்பிரகாசம்** 43-ம் செய்யுளுக்குப் பதவுரை :—

ஆங்காரம்—அகங்கார தத்துவமானது, ஆனதனு அதனில் உறும் அநிலனையும் இயக்கி—வினைக் கீடாக உண்டான உடம்பிலே பொருந்தியிருக்கும் பிராணாதி வாயுக்களையும் இயங்கச் செய்து, நீங்காத அகந்தைக்கு வித்தாய் விட்டு நீங்காத நான் என்னும் செருக்குக்க மூலமாய், என்னை ஒப்பார் பூவியில் யான் அலது பிறர் ஒருவர் இல்லை எனும் இயல் பினதாய்—என்னை ஒப்பார் பூமியின்கண் யானே யல்லது பிறர் ஒருவருமில்லை யென்னும் இயல்பினையுடையதாய், இந்திரியம் புலன்கள் தாம் நுகரும் அளவில்—இந்திரியங்கள் விடயங்களை நுகரும் பொழுது, அதில் முந்தி உறும்—அவ்விடயங்களில் முற்பட்டுப் பொருந்தும், மானத மானது—மனதானது, இச்சை தான் உருவாய்—இச்சை தானே தனக்கு வடிவாய், சங்கற்ப சதாகதியும் தந்து நிற்கும்—ஒன்றைச் சங்கற் பித்தலையும் ஓயாத சலனத்தையும் செய்யும். சிந்தை நினைவு—சித்தம் நினைவு மாத்திரமாய் நிற்கும், ஐயம் வந்து தரு மனம் ஒழிய வகுப்ப ஒண்ணாதே—சந்தேகத்தை உண்டாக்குகின்ற மனத்தையொழிய அதனை வேறாக வகுத்துக் கூறவொண்ணாது.

அராகம் நியதி காலம் என்னுந் தத்தவங்களின் தொழில் பற்றிய ' **பேசரிய** ' என்னும் **சிவப்பிரகாசச்** செய்யுளுக்குப் பதவுரை :—

பேச அரிய அராகம்—சொல்லுதற்கரிய அராக தத்துவமானது, தம் கன்மத்துக்கு ஈடாப் பெற்ற தனில் ஆசைதனைப் பெருகுவிக்கும்—ஆன்மாக்கள் தங்களுடைய கன்மக்கத்துக் கீடாகப் பெற்ற போகங்களிலே இச்சையை மிகுவிக்கும், நியதி—நியதியானது, தேசமிகும் அரசர் தரும் ஆணை—தேசங்களை மிகுதியாகவுடைய அரசராற் கற்பிக்கப்பட்ட ஆணையானது, செய்தி செய்தவதைத் துய்ப்பிக்கும் செய்தி போல—யாதொரு செய்கை செய்தவரை அச்செய்கையின் பயனை அனுபவிக்கச் செய்யும் முறைமை போல, நேசம் உறும் தம் கன்மம் நிச்சயித்து நிறுத்தும்—ஆன்மாக்கள் முன்னே விருப்ப முற்றுச் செய்த அவரவர் கன்மங்களை அவரவர் அனுபவிக்கும்படி நிச்சயம் பண்ணி நிறுத்தும், கழிகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்று ஓசை தரவரும் காலம்—இறந்த காலம்

நிகழ்காலம் எதிர் காலம் எனச் சொல்லப்பட்டு வருங் கால தத்துவமானது. எல்லே பலம் புதுமை உறுவிக்கும்—இறந்த காலத் தெல்லேயினேயும் நிகழ் காலத்துப் பலத்தினேயும் எதிர் காலத்துப் புதுமையினேயும் வரையறை செய்து நிற்கும், இறைசத்தி உடனுய் நின்றே—சிவ சத்தி கூட நின்றே இவை நிகழும்.

## பக்கம் 17.

“ **மயிர் தோல்** ” என்னுஞ் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

மயிர்தோல், நரம்பு, எலும்பு, தசை என்னும் ஐந்தும் குற்றமற்ற பிருதிவியின் காரியமாகும். நீர் உதிரம் மூளே மச்சை சுக்கிலம் ஆகிய ஐந்தும் நீரின் காரியமாகும்.

‘ **பசிசோம்பு** ’ என்னுஞ் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

பசியும் சோம்பலும் மைதுனமும் காட்சியும் நீர் வேட்கையும் தேயுவின் காரியாம். போதல் வருதல் நோய் செய்தல், கும்பித்தல் பரிசித்தல் காற்றின் காரியமாகும்.

| | |
|---|---|
| பிருதிவியின் கூறு .. .. .. | (பக்கம் 17 பார்.) |
| அப்புவின் கூறு .. .. .. | ,, |
| வாயுவின் கூறு .. .. .. | ,, |
| ஆகாயத்தின் கூறு .. .. .. | ,, |
| இடகலே .. .. .. .. | ,, |
| பிங்கலே .. .. .. .. | ,, |
| சுழுமுனே .. .. .. .. | ,, |
| சிங்குவை .. .. .. .. | ,, |
| காந்தாரி .. .. .. .. | ,, |
| அலம்புருடன் .. .. .. .. | ,, |
| வைரவன் .. .. .. .. | ,, |
| சங்குனி .. .. .. .. | ,, |
| குருதை .. .. .. | ,, |
| நாடியின் தொழில்கள் .. .. | ,, |

‘ **ஓங்கும் வெகுளி** ’ என்னும் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

அழகிய தனங்களேயுடைய பெண்ணே! மேம்பட்ட வெகுளியும் மதமும் மானமும் ஆங்காரமும் நீங்காத உலோபமும் ஆகிய இவ்வைந்தும் ஆகாயத்தின் காரிய மென்று கூறினர் மிகநூல்களேக் கற்றுணர்ந்த பெரியோர்.

‘ **இடை பிங்கலே** ’ என்னுஞ் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

அறிஞர், இடை பிங்கலே சுழுமுனே காந்தாரி அத்தி சிங்குவை சங்கினி புருடன் குரு அலம் புடை என நாடி பத்தென்பர்.

## பக்கம் 18.

**' ஒப்பார் '** என்னுஞ் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

பிராணன் அபானன் உதானன் வியானன் சமானன் நாகன் தனஞ் சயன் கூர்மன் கிருதரன் குற்றமற்ற தேவதத்தன் என வாயு பத்தாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாக்காதிகள் | .. | .. | .. | .. | (பக்கம் 18 பார்.) |
| பிராணன் | .. | .. | .. | .. | ,, |
| அபானன் | .. | .. | .. | .. | ,, |
| உதானன் | .. | .. | .. | .. | ,, |
| சமானன் | .. | .. | .. | .. | ,, |
| நாகன் | .. | .. | .. | .. | ,, |
| கூர்மன் | .. | .. | .. | .. | ,, |
| தேவதத்தன் | .. | .. | .. | .. | ,, |
| தனஞ்சயன் | .. | .. | .. | .. | ,, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குணம் மூன்று | .. | .. | .. | .. | (பக்கம் 18 பார்.) |
| ராசதம் | .. | .. | .. | .. | ,, |
| சாத்து விதம் | .. | .. | .. | .. | ,, |
| தாமதம் | .. | .. | .. | .. | ,, |
| மூவகை எடணை | .. | .. | .. | .. | ,, |
| அர்த்த எடணை | .. | .. | .. | .. | ,, |
| புத்ர எடணை | .. | .. | .. | .. | ,, |
| தார எடணை | .. | .. | .. | .. | ,, |

**' கூறிய மூலப்பகுதி '** என்னும் தத்துவ **விளக்கச்** செய்யுட்குப் பொழிப் புரை :—

கூறப்பெற்ற மூலப்பகுதியிற் றோன்றுங் குணங்கள் தெளிந்த சாத்து விகம் இராசதம் தாமதம் என்று சொல்லப்பட்ட ஊறிய முக்குணம் ஒத்தவை, மூன்றும் உயர்வு இழிவற்று ஏறிய விடத்துப் புத்தி தத்துவமாம் என்று கருதுவர் அறிஞர்.

## பக்கம் 19.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாக்கு நான்கு | .. | .. | .. | .. | (பக்கம் 19 பார்.) |
| சூக்குமை | .. | .. | .. | .. | ,, |
| பைசந்தி | .. | .. | .. | .. | ,, |
| மத்திமை | .. | .. | .. | .. | ,, |
| வைகரி | .. | .. | .. | .. | ,, |
| புறக்கருவியின் தொழில் 60.. | | .. | .. | | ,, |

விந்து சத்தியிலிருந்து தோன்றும் வாக்குகள் நான்கும் அச்சத்தி யினுலே ஆன்மக்களிடத்தே தோற்றுவிக்கப்படும்; அது மூலாதாரத்தி லிருந்து பிரணவத்திலே ஒரு நாதமாக எழுந்து சூக்குமையாகி, அந்தச் சூக்குமை வாக்கு உந்தித் தானத்தை அடைந்து மயில் முட்டையில் நீர் போல அக்கரங்கள் வேறு வேருகப் பிரிந்து தோன்றும் முறைமை பொருந் தியிருக்கும் படி ஒடுங்கிச் சிந்தையிலே நிருவிகற்ப உணர்வுக்கு ஏதுவாய் நிற்கும். அப்பொழுது அது பைசந்தி எனப்படும். பின்பு அந்த வாக்கு உதான வாயுவின் தொழிற் பாட்டால் அக்கரங்கள் பிரிந்து தோன்ற பிறர் செவிக்குக் கேளாமல் உள்ளடங்கிய உச்சரிப்பாயும் மெல்லோசையாயும் கண் டத்திலே தொனிப்பது மத்திமை எனப்படும். பின்பு அந்த வாக்கு, மனத்து நினைந்த பொருளைச் சொல்லும் தன் செவிக்கும் கேட்கும் பிறர் செவிக்கும் கேட்குஞ் சொல்லாய், சொல்பவனுக்குங் கேட்பவனுக்கும் சவிகற்ப உணர்வு உண்டாதற்கு ஏதுவாய் நிற்பது வைகரி வாக்காகும்.


பஞ்ச கலைகள் .. .. .. .. (பக்கம் 19 பார்.)

பஞ்சமலங்கள் .. .. .. .. ,,

அவத்தைகள் 3 .. .. .. .. (பக்கம் 99 பார்.)

கேவலம் .. .. .. .. .. ,,

சுத்தம் .. .. .. .. .. ,,

கீழாலவத்தைகள் .. .. .. .. ,,


கீழாலவத்தையிலே தொழிற்படுங் கருவிகளைக் குறிக்கும் சிவஞான சித்தியார்—'சாக்கிரம் முப்பத்தைந்து' என்னும் 223-ம் செய்யுளுக்குப் பதவுரை :—

சாக்கிரம் முப்பத்தைந்து நுதலினில்—சாக்கிராவத்தையில் முப்பத் தைந்து கருவிகள் இலாடத் தானத்திலும், ஆக்கிய கனவு தன்னில் இருபத் தைந்து களத்தினில்—அதன்பின் உண்டாக்கப்பட்ட சொப்பனவத்தையில் இருபத்தைந்து தத்துவங்கள் கண்டத் தானத்திலும், நீக்கிய சுழுமுனை மூன்று இதயம் தன்னில்—இவை இரண்டும் ஒழிந்த சுழுத்தியவத்தை யிலே மூன்று கருவிகள் இதயத் தானத்திலும், துரியத்தில் இரண்டு நாபி—துரியாவத்தையில் இரண்டு கருவிகள் நாபித்தானத்திலும், நோக்கிய துரியா தீதம் நுவலின் ஒன்று மூலத்தில்—முற்கூறிய துரியா தீதத்தைச் சொல்லு மிடத்து ஒரு கருவி மூலாதாரத்திலும் தொழிற்படும்.

**குறிப்பு. 1. சாக்கிர முப்பத்தைந்து** :—ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந் திரியம் ஐந்து, சத்தாதி விடயங்கள் ஐந்து, வசனுதி ஐந்து, பிராணுதி பத்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக முப்பத்தைந்து.

**2. கனவு தன்னின் ஆக்கிய இருபத்தைந்து** :—சத்தாதி ஐந்து, வசனுதி ஐந்து, பிராணுதி பத்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக இரு பத்தைந்து.

3. **சுழுனை மூன்று** :—சித்தம், பிராணன், புருடன் என்னும் மூன்று.

4. **துரியத்திலிரண்டு** :—பிராணவாயு, புருடன் என இரண்டு.

5. **மூலத்தி லொன்று** :—புருடன் ஒன்று.

## பக்கம் 20.

கேவல காரியா வத்தை ஐந்திற்கும் கருவிகள் நிற்பதற்குப் பிரமாணம் : தாயுமானவர் பாடல் '**சாக்கிரமா**' என்பதற்குப் பதவுரை :—

இந்திரியம் பத்தும்—தசேந்திரியங்களும், சத்தாதிவச நாதி (பத்தும்)—சத்தாதி வசநாதிகளாகிய விடயங்கள் பத்தும், வாயு பத்தும்—வாயுக்கள் பத்தும், நீக்கம் இல்—நீங்குதல் இல்லாத, அந்தக்கரணம்—அந்தக்கரணங்கள் நான்கும், புருடனோடு ஆன்மாவோடு, முப்பான் ஐந்து—முப்பத்தைந்தும், நுதலினில் நின்றது—இலாடத்தில் நின்ற அவத்தை, சாக்கிரம் ஆ—சாக்கிராவத்தையாகவும், நிலவும்—விளங்குகின்ற, கண்டத்து—கண்டத்தில், ஆக்கிய—உண்டாக்கப்பட்டிருக்கிற, சொப்பன மதனில்—சொப்பனுவத்தையில், வாயுபத்தும்—தசவாயுக்களும், அடுத்தன—அடுத்திருப்பனவாகிய, சத்தாதி வசநாதியாக—சத்தாதி வசநாதிகளாகிய சதவிஷயங்களாக, நோக்கு—பார்க்கப்படுகிற, கரணம் புருடனுடனே கூட—அந்தக் கரணங்கள் நான்கும் ஆன்மாவோடு கூடிநிற்க, இருபத்தைந்து ஆ—இருபத்தைந்து தத்துவங்களாகவும், நுண்ணியோர்—நுண்ணறிவினர் சொல்லா நிற்பர்.

ஷை '**சுழுத்தியிதயம்**'—என்னும் பாடலுக்குப் பதவுரை :—

இதயம் தன்னில்—இதயத்தானத்தில், சுழுத்தி—சுழுத்தியவத்தை உளதாம் (அவ்விடத்தில் நிற்கும் கருவிகள்), பிராணம்—பிராணவாயு, சித்தம்—சித்தம், சொல்லரிய—சொல்லுதற் கரிதாகிய, புருடனுடன்—ஆன்மாவோடு, மூன்றதாகும்—மூன்றுகும், வழுத்திய—சொல்லப்பட்ட, நாபியில்—நாபித்தானத்தில், துரியம்—துரியாவத்தையுளதாம் (அவ்விடத்தில்), பிராணனேடு—பிராணவாயுவோடு, மன்னு—நிலைபெற்ற, புருடனும்—ஆன்மாவும், கூட—கூடவே, வயங்கா நிற்கும்—பிரகாசியா நிற்கும், அழுத்திடும் மூலந்தன்னில் — அழுத்துதற்குரிய குதஸ்தானத்தில், துரியாதீதம்—துரியா தீத அவத்தை உளதாம், அதனிடை—அதனிடத்தில், புருடன்—ஆன்மா, ஒன்றி அமரும்—தனித்து அமர்ந்திருக்கும் (இவ்வாறு), அவத்தை ஐந்தில்—ஐந்து அவத்தைகளினும், பாங்குபெற—பாங்காக, கருவி நிற்கும் பரிசு—கருவி நிற்குந்தன்மையை, ஞானம் பழுத்திடும் பக்குவர் அறிவர்—ஞானம் முதிர்ந்த பக்குவிகள் அறிவார்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சாக்கிரம் | .. | .. | .. | .. | .. | (பக்கம் 20 பார்.) |
| சிவதத்துவம் 5 | | .. | .. | .. | .. | ,, |
| புருடனீங்கிய கலாதி 6 | | | .. | .. | .. | ,, |
| பூதம் 5 | .. | .. | .. | .. | .. | ,, |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தனமாத்திரை 5 | .. | .. | .. | .. | | (பக்கம் 20 பார்.) |
| கன்மேந்திரியம் 5 | .. | .. | .. | .. | | ,, |
| ஞானேந்திரியம் 5 | .. | .. | .. | .. | | ,, |
| அந்தக்கரணம் 4 | .. | .. | .. | .. | | ,, |
| புருடன் 1 | .. | .. | .. | .. | .. | ,, |
| வாயு 10 | .. | .. | .. | .. | .. | ,, |
| வசனுதி 5 | .. | .. | .. | .. | .. | ,, |
| லலாடம் | .. | .. | .. | .. | .. | ,, |

## பக்கம் 21.

சொப்பனம் (பக்கம் 21 பார்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சுழுத்தி | .. | .. | .. | .. | .. | ,, |
| துரியம் | .. | .. | .. | .. | .. | ,, |
| துரியாதீதம் | .. | .. | .. | .. | .. | ,, |
| கேவலாவத்தை | | .. | .. | .. | .. | ,, |

**'அறிவிலாத எனை'** என்னுந் திருவாசகத்துக்குப் பொழிப்புரை :—

பிண நெஞ்சே! அறிவில்லாத என்னைப் புகுந்து ஆட்கொண்டு அறிவை அருளி, வீட்டு நெறிகளை யெல்லாம் அறிவகத்தே விளங்கச் செய்த என்தந்தையை, பாசபந்தங்களை அறுப்பவனை விட்டு நீங்காத இனிய அருளைப் பெற்றிருந்தும் தடுமாறுகிறாய்; பொய் யெலாம் மிகுதிப்படும் படியாக என்னைக் கீழே தள்ளினாய் கெடும்படியாக.

மத்தியாலவத்தை (பக்கம் 21 பார்)

| | | | | |
|---|---|---|---|---|
| சாக்கிரத்தில் துரியாதீதம் | .. | .. | .. | ,, |
| சாக்கிரத்தில் துரியம் | .. | .. | .. | ,, |
| சாக்கிரத்தில் சுழுத்தி | .. | .. | .. | ,, |
| சாக்கிரத்தில் சொப்பனம் | .. | .. | .. | ,, |

**'விரும்புமரும் பொருளை'** என்னுஞ் செய்யுட் பொருள் :—

தான் விரும்பிய பொருளை மறந்தவன் அப்பொருளைக் காணாது மூர்ச்சித்து மயங்குதலும், அப்பொருளை எந்த இடத்தில் வைத்தோம் என விசாரித்தறியும் நிலையும், அந்த இடத்திலல்லவோ போனோம் என்னும் நினை வெழுந்தவருந்து அறிவும், அதை இந்த இடத்திலல்லவோ வைத்தோமென விசாரப்பட்டு அறிந்த அறிவு நிலையும், வைத்த இடத்திற் சென்று காண அது தோன்றுதலும் ஆகிய ஐந்தும் சாக்கிரத்தில் உண்டாகும். இவை முறையே சாக்கிரத்தில் துரியாதீதம், சாக்கிரத்தில் துரியம், சாக்கிரத்தில் சுழுத்தி, சாக்கிரத்திற் சொப்பனம், சாக்கிரத்திற் சாக்கிரம் எனப்படும்.

ஐந்து அவத்தைகளில் தொழிற் படுங்கருவிகள் (பக்கம் 21 பார்)

## பக்கம் 22.

**'ஐந்து சாக்கிரத்தில்'** என்னும் சிவஞான சித்தியார் 225-ம் செய்யுட்குப் பதவுரை :—

சாக்கிரத்தில் ஐந்து—மேற் கூறிய மத்தியாலவத்தையில் நிகழும் சாக்கிரத்திலே சிவதத்துவம் முதற் சுத்தவித்தை ஈறுகிய ஐந்து கருவிகளும், கனவினில் நான்கு—சொப்பனத்திலே சிவதத்துவம் முதல் மகேச்சுர மீறுகிய நான்கு கருவிகளும், சுழுனை மூன்று—சுழுத்தியிலே சிவதத்துவம் முதற் சாதாக்கிய மீறுகிய மூன்று கருவிகளும், வந்திடும் துரியம் தன்னில் இரண்டு—அதன் பின்வரும் துரியத்திலே சிவதத்துவம் சத்திதத்தும் ஆகிய இரண்டு கருவிகளும், துரியாதீதம் ஒன்று—துரியாதீதத்திலே சிவதத்துவம் ஆகிய ஒரு கருவியும், சாக்கிராதி அவத்தைகள் தந்திடும் தானந்தோறும்—அச்சாக்கிரம் முதலிய அவத்தைகள் நிகழும் அவ்வவ் விடங்களிலே, உந்திடும்—கலாதிகளைச் செலுத்தா நிற்கும், கரணம் தன்னில் செயல் தொறும் உணர்ந்து கொள்—கரணங்களால் விடயங்களை அறியுஞ் செய்கை தோறும் இதனை நீ நுண்ணுணர்வால் அறிந்து கொள்வாயாக.

நின் மலாவத்தை.

' இலாடத்தே ' சிவஞானபோதம் 28-ம் வெண்பாவிற்குப் பதவுரை :—

இலாடத்தே சாக்கிரத்தை எய்திய உள்ளம்—இலாடத்தானத்தினீங்கி அங்கங்கே அவத்தைப்பட்டுக் கீழேசென்று மூலாதாரத்தின் எய்தியபின் மீண்டும் அவ்விதமே அங்கங்கே அவத்தைப்பட்டு மேற்சென்று இலாடத் தனத்தின் உணர்த்து முறைமைச் சாக்கிரத்தைத் தலைப்பட்ட புருடன், இலாடத்தே ஐந்து அவத்தை எய்தும்—அந்த இலாடத்தாதானத்திலே சாக்கிரச் சாக்கிரம் முதலிய ஐந்தவத்தையுறும், இலாடத்தே அவ்வவவிந்திரியத்து அத்துறைகள் கண்டு—அவையாவனே அவ்விலாடத்தானத்தின் கண்ணே அவ்வப் பொறிகளான் அவ்வவ் விடயங்களையுணர்ந்து, அதுவே—அப்போதப்போதே, அவ்வவற்றின் நீங்கல்—அவ்வவ்விடயங்களினீங்குதலாம், அது ஆங்கு—இனி முன்னர்க் கூறப்படும் சுத்தாவத்தையும் இவைபோல ஐவகைப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அமலசாக்கிரம் | .. | .. | .. | .. | (பக்கம் 22 பார்) |
| அமல சொப்பனம் | | .. | .. | .. | ,, |
| அமல சுழுத்தி | .. | .. | .. | .. | ,, |
| அமல துரியம் | .. | .. | .. | .. | ,, |
| அமல துரியாதீதம் | | .. | .. | .. | ,, |
| அவத்தை 18 | .. | .. | .. | .. | ,, |

**'நின்ற இச் சாக்கிரத்தே'** என்னும் **திருமந்திரம் 2277-**ம் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

நிலைபெற்ற சாக்கிர அமலதுரி யாதீதத்தில் மன்றுள் ஆடும் அம்பலக் கூத்தனும் அவ்விடத்தே ஆன்மாவிற்கலக்க நின்றிடுவன் அவன் கலந்தவுடன் மாயை மறைந்துவிடும். அப்போதே ஆன்மாவும் இறை வடிவைப் பெறும்.

## பக்கம் 23.

உணர்த்து முறைமை (பக்கம் 23 பார்.)

ஆன்மதரிசனம் ,,

**'புண்ணியம் புரக்கும்'** பட்டினத்துப் பிள்ளையார் பாடல் 13 அடிகள் 25—35 அடிகட்குப் பொழிப்புரை :—

புண்ணியத்தை வளர்க்கும் காவிரி நதி சூழப்பெற்ற திருவிடைமருதூரில் எழுந்தருளியவனே, ! போர் புரியும் இடபத்தை வாகனமாக வுடையவனே ! உமையைப் பங்கில் உடையவனே ! கங்கைக்குத் தலைவனே ! உன் தெய்வத்திருவருள் கைதந்து உதவலின், மாயையாகிய திரையைக்கிழித்து தூயஞானக் கண்ணைப் பெற்றபின் யானும் நினது அருமை பெருமைகளையுங் கண்டேன், கண்டவுடனே என்னையுங்கண்டேன் பிறரையுங் கண்டேன், நின் நிலைமை அனைத்தையுங் கண்டேன், என்னே ? நின்னைக் காணாத மனிதர் நிலை ! அவர் தன்னையுங் காணாத் தன்மையரேயாவார். ஆன்மதரிசனத்தை விளக்கும் **'தன்னறிவதனால்'** என்னும் சிவப்பிரகாசம் 72-ம் செய்யுட்குப் பதவுரை :—

தன் அறிவதனால் ஏதும் அறிவு தனக்கு இல்லை எனும்—ஆன்மாத் தன்னுடை இயற்கை அறிவினால் எதனையும் அறியும் இயல்பு தனக்கு இல்லையாயினும், தன் அறிவாக—தன்னுடைய அறிவினாலே அறிந்து அனுபவிப்பவனாகக்கருதி, பயன் எல்லாம் தனித்தனி அருந்தும்—கருவிகள் வாயிலாகவரும் போகங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக அனுபவிக்கும், தன்னாலே தனை அறிந்தால்—சிவஞானத்தாலே அந்த ஞானத்தை அறிந்தால், தன் அறிவு அறியுந் தன்மை—தனது அறிவானது கருவிகளோடு கூடி நின்று விடயங்களை அறியும் முறைமையையும், தன்னையும்—ஆன்மாவாகிய தனது இயல்பையும், தான் அதுவாகி நின்று—தான் அந்தச்சிவ ஞானத்தோடு கூடி நின்று தானே காணும்—அவ்வான்மாவே தரிசிக்கும்,

"முன்னம் அவனுடைய" என்னுத் திருத்தாண்டகத்திற்குப் பொழிப்புரை :—

பெண்களிற் சிறந்தவளாகிய ஒரு தலைவியானவள் (அஃதாவது ஆன்மாவாகிய நாயகி) முதலிலே இறைவனுடைய திருநாமத்தைக் கேட்டாள், அவனுடைய நிறமுதலிய தன்மைகளைக் கேட்டாள், பின்பு அவனுடைய ஆரூர் என்றும் பதியைப்பற்றிக் கேட்டாள், மேலும் அவன் மேலுள்ள காதலால் பித்துக்கொண்டவளானாள் ; தாயையையும் தகப்பனையும் அப்

போதே விட்டு விலகினுள், உலகியலாசாரத்தை விட்டு நீங்கினுள், தன்னை மறந்தாள் தன் நாமமுங் கெட்டாள் தலைவன் திருவடியோடு கலப்புடைய வளானுள். என்பது.

## பக்கம் 24.

**‘அவன் அருளாலே அவன் தாள் வணங்கி’** திருவாசகம்—பொருள் :—

இறைவன் குருவாக வந்து உணர்த்த அவனருலாலே ஆன்மா அவனுடைய திருவடிகளை வணங்கி’

ஆன்மசுத்தி (பக்கம் 24 பார்.)
திரிபுடி ,,

ஆன்மசுத்தியைப் பற்றிய சிவப்பிரகாசச் செய்யுள் **“தத்துவமான”** 73, என்பதற்குப் பதவுரை :—

தத்துவ மானவற்றின் தன்மைகள் உணரும் காலே—தத்துவங்களின் இயல்பை விசாரித்தறியும் பொழுது, உய்த்து அறிந்திட உய்ப்பது—அவை தனக்கு அந்நியமான சடப்பொருளென்று ஆராய்ந்திடத் தோன்றுவது, ஒளிவளர் ஞானம் ஆகும்—பிரகாசம் மிக்க சிவ ஞானம் ஆகும், அத்தன்மை அறியுமாறும் அகன்றிட—அப்படி அறிகின்ற சுட்டுப்போதமும் விட்டு நீங்க, அதுவாய் ஆன்மாச் சுத்தமாம்—அந்த ஞானமேதாஞய் ஆன்மாச்சுத்தியை அடையும், சுத்தஞானத்து ஒரு முதல் தோன்றும்—அப்பொழுதே அந்த நின்மலமாயுள்ள ஞானத்திற்கு முதலாகிய ஞேயம் தோன்றும்.

“சிவசிவ என்கிலர்” என்னும் 2716-ம் திருமந்திரச் செய்யுளுக்குப் பொழிப்புரை :—

தீவினையுடையவர்கள் ‘சிவசிவ’ என்று கூறுகின்றுர்களில்லை. சிவசிவ என்று சொன்ஞல் தீவினை ஒழியும், சிவசிவ என்று கூறினுல் தேவரும் ஆவர், சிவசிவ என்று கூறிக்கொண்டிருந்தால் சிவகதி உண்டாகும்.

## பக்கம் 25.

ஆன்மலாபம் (பக்கம் 25 பார்.)
அந்தரியாகம் ,,

ஆன்மலாபத்தை விளக்கும் **சிவப்பிரகாசம்—‘முந்திய ஒருமையாலே’** என்னும் 83-ம் செய்யுளுக்குப் பதவுரை :—

முந்திய ஒருமையாலே மொழிந்தவை கேட்டல்—முற்பிறப்பிற் செய்த சரியை முதலியவற்றின் முதிர்ச்சியாலுண்டான ஒற்றுமையால் ஆசாரியர் உபதேசித்த உபதேச மொழிகளைக் கேட்டலும், கேட்டல் சிந்தனை செய்தல்—கேட்ட பொருளைச் சிந்தித்தலும், உண்மை தெளிந்திடல்—அந்தப் பொருளின் உண்மையைத் தெளிந்து அறிதலும், அது தான் ஆகவந்த ஆறு எய்த நிட்டை மருவுதல்—சிவம் தானுகவந்த அத்துவித நிலை பொருந்தும்படி

நிட்டை கூடுதலும், என்று நான்காம்—என்று ஞானம் நான்குவிதமாம், இந்தவாறு அடைந்தோர் முத்தி எய்திய இயல்பிஞேர்—இந்த முறைப்படி கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடினவரே முத்தியைப் பெற்ற இயல் பினையுடையோர்,

பெரியபுராணத்துள்—சாக்கிய நாயஞர் புராணம் '**எந்நிலையில்**' என் றும் **6-ம்** செய்யுளுக்குப் பதவுரை :—

எந்நிலையில் நின்ருலும்—எந்த ஆச்சிரமத்திலேயிருந்தாலும், எக் கோலங்கொண்டாலும் — எவ்வேடங்களை இயைந்தாலும், சீர்மன்னிய சங்கரன் தாள் மறவாமை—சீர்த்தி நிலைபெற்ற சிவ பெருமானுடைய திருவடிகளை மறவாதிருத்தலே, பொருளென்று — உண்மையாகக் கொள்ளற்பாலதென்று, துன்னிய வேடந்தன்னைத் துறவாது—தாம் மேற்கொண்டுள்ள சாக்கிய வேடத்தைத் தவிராமலே, தூய சிவந்தன்னை— விசுத்ததேகியாகிய சிவபெருமானை, மிகும் அன்பிஞல் மறவாமை தலை நிற்பார்—மிகுந்த அன்பிஞல் மறவாதிருத்தலில் நிற்பாராயிஞர்-

சிவஞானபோதம்—'**செம்மலர்**[1] என்னும் **12-ம்** சூத்திரத்திற்குப் பொழிப்புரை :—சீவன் முத்தன், செந்தாமரை மலர்போல விரிந்து விளங் கிய முதல்வனது வலிய திருவடிகளை அணைய வொட்டாத (மறத்தலைச் செய் யும்) மும்மல அழுக்கை ஞான நீராற்கழுவி, மறவா அன்பு செய்யும் அறி ஞரோடு கலந்து மலமயக்கம் நீங்க, அன்புமிக்க அவரது திருவேடத்தையும் சிவன் கோயிலையும் முதல்வனெனவே கண்டு வழிபடுவன்.

குருவினியல்பைக் குறிக்கும் '**ஞானயோகக்கிரியை**' என்னும் சிவ ஞானசித்தியார் **326-ம்** செய்யுளுக்குப் பதவுரை :—

ஞானம் யோகம் கிரியை சரியை நாலும் நாதன் தன் பணி—ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் நான்கு சாதனைகளும் சிவனது அடிமைத் தொழில்களேயாக, இவற்றிஞெழுகுவோரும் சிவனடியார்களேயாவர், ஞானி நாலினுக்கும் உரியன்— அவருள் ஞானசாதனை செய்வோர் ஞானம் யோகம் கிரியை சரியை என்னும் நான்கு பணிகளையும் பூணற்பாலர், யோகி ஊனம் இலாயோகம் முதல் மூன்றினுக்கும் உரியன்—யோகசாதனை செய் வோர் குற்றமற்ற யோகம் கிரியை சரியை யென்னும் மூன்று பணிகளுமே பூணற்பாலர். கிரியாவான் தான் ஒண்கிரியை ஆதி ஆன இரண்டினுக்கும் உரியன்—கிரியாசாதனை செய்வோர் சிறந்த கிரியை சரியை என்னும் இரு வகைப் பணிகளுமே பூணற் பாலர், சரியையினில் நின்ருேன் அச்சரியைக்கே உரியன்—சரியா சாதனை செய்து வருவோர் அந்தச் சரியைப் பணி ஒன்றுமே பூணற்பாலர், ஆதலிஞல் யார்க்கும் ஈனம் இல்லா ஞான குருவே—ஆகையி ஞலே முத்திப் பேற்றை விழையும் பக்குவர்யாவர்க்கும் ஞான குருவே வேண்டிற்று, குருவும் இவனே—அத்தகைய மெய்க்குரு ஆவானும் சிவ ஞானியே, ஈசன் இவன் தான் என்றும்—எனவே பக்குவ நோக்கிவந்து

மலமகற்றும் பரமாசாரியாளுகும் சிவனும் இந்த ஞான குருவே என்று தெளிந்து, இறைஞ்சி எத்தே—அத்தகைய ஞான குருவை வாதனுமலந் தவிர்க்க வேண்டிச் சிவ ஞானியரும் வணங்கிப் போற்றி ஒழுகற்பாலர்.

## பக்கம் 26.

இலிங்க சேவையின் இயல்பும் பயனும் பற்றிய "**திருக்கோயிலுள்ளிருக்கும்**" என்னும் சிவஞானசித்தியார் 325-ம் பாடலுக்குப் பதவுரை :—

திருக்கோயில் உள் இருக்கும் திருமேனிதன்னை—திருக்கோயிலின் கண் ஆகமமுறையான மைத்த பரார்த்தமாகிய சிவலிங்கம் முதலிய திருவுருவங்களை, சிவன் எனவே கண்டவர்க்கு—சிவன் எனக்கொண்டு உருவ வழிபாடு செய்யும் சரியையாளருக்கு, சிவன் உறைவன் அங்கே—சிவபிரான் அவ்வுருவங்களிலே வெளிப்படாது நின்று அருள் செய்வன், உருக்கோலி மந்திரத்தாலே நினையும் அவர்க்கும் உளன்—திருவுருவங்களை ஆன்மார்த்தமாக எழுந்தருளச் செய்து மந்திரவடிவங்கூட்டி அத்துவா மூர்த்தியாக் கொண்டு அருவ வழிபாடு செய்யுங் கிரியையாளர்க்குந் திருக்கோயிலிற் காணுந் திருவுருவங்களில் மந்திர வடிவமாக நின்று அருள் செய்வன், எங்கும் இல்லன் இங்கு உளன் என்பார்க்கும்—சராசரங்களெங்கும் அருவாய்க் குடிகொண்டு நிற்கும் முதல்வன் தம் தேகத்தில் உள்ளத்தே பாவனையாவடிவமைந்திருப்பன் எனக்கொண்டு அருவ வழிபாடு செய்யும் யோகியர்க்கும், மந்திரத்தின் இருப்பு ஆயவடிவாகி இந்தனத்தின் எரிபோல் வந்துதிப்பன்—திருக்கோயிலே தேகம்போன்றிருக்க அதன் கண் அகத்துத் தோன்றுமாறே விறகிற்றேன்றுது நின்ற தீ கடைய வந்துதிப்பதுபோல் பாவனு வடிவத்தோடு வெளிப்பட்டும் அருள் செய்வன், அன்பர்க்கு—மெய்யன்புகூடிஅறிவு மாத்திரையான் அருளுருவில் வணங்கும் ஞானியர்க்கு, இரும் சுரபிக்கு எங்கும் உருக்காண ஒண்ணுதபால்—மேம்பாடுற்ற கறவைப்பசுவின் உடலெங்கணும் செறிந்திருந்தும் வெளிக்காண முடியாதிருக்கும் பாலானது, முலைபால் விம்பி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவன்—முலைவழியாக விம்மி ஒழுகுவதுபோல் கருணையின் வெளிப்பட்டுத் தோன்றி அருள் செய்வன். (ஆகையால் திருக்கோயில் வழிபாடு யாவருக்குஞ் செய்யவேண்டியதாம்) சங்கம சேவையின் பெருமையும் பயனும் கூறும்

'**அறிவறியான்**' என்னும் **சிவஞானசித்தியார் 324**-ம் பாடலுக்குப் பதவுரை :—

அறிவு அறியான்—பாச பசு ஞானங்களால் அறிதற் கரியனுகிய சிவன், தனை அறிய—உலகினுள்ளார் தம்மை அறிந்து வழிபட்டுய்தற் பொருட்டு, யாக்கை ஆக்கி—திருவெண்ணீறு கண்டிகை முதலியவற்றேடு பொலிந்த தமது திருவேடத்தை அன்பர்க்குதவி, அங்கு அங்கே உயிர்க்கு உயிராய் அறிவுகொடுத்து—யாண்டும் உயிர்க்குயிராய் நின்று அறிவை விளக்கி, அருளால் செறிதலினுல்—அருளாற்கலந்து நிறைந்திருத்தலினுல், திருவேடம் சிவன் உருவே ஆகும்—திருவேடம் சிவனுருவமேயாக, அதனைப் பூண்டார்

உருவ சிவமேயா யிருப்பர், சிவோகம் பாவிக்கும் அத்தால் சிவனும் ஆவர்—சிவமே தாமெனப் பாவனை செய்யும் தன்மையினால் பாவனு சிவமேயாகவும் இருப்பர். குறியதனால் இதயத்தே அரனைக் கூடும் கொள்கையினால் அரன் ஆவர்—அருட்குறி வழி நின்று இதயத்தானத்திற் சிவனை இருத்திப் பூசித்தலாகிய தியானம் சாதிக்குந் தன்மையினாற் செயற்சிவமேயாகவும் இருப்பர்,

குறியொடுதாம் அழியும் நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவர்—அவ்வாறு குறித்தகுறியு மழிவுவெறத் தம்மையுமே காணப்பெறாது அவனே தாமாந்தன்மை பெற்று நிற்றலாற் சிவமேயாயும் இருப்பர், என்றால்—இவ்வாறு திருவேடம் பூண்ட மெய்யடியர் இலயம் போகம் அதிகாரம் சுத்தம் ஆகிய சிவமேயாய் நிற்றல் தெளிவாதலின், பாசத்தாள் விட—வாதனா மலத்தை விட்டு நீங்க, நேசத்தால் தொழு தெழுமின்—மெய்யன்பினால் தொழுது ஒழுகவேண்டும்.

அடியார் வழிபாட்டின் பெருமையைக் குறிக்கும் **திருநாவுக்கரசு** சுவாமிகள் அருளிச்செய்த "**எவரேனுந்தாமாக**" என்னுந் திருத்தாண்டகத்திற்குப் பொழிப்புரை :—

எக்குலத்தில் எச்சாதியில் பிறந்தவராயிருந்தாலும் அவர் நெற்றியிலணிந்துள்ள திரு நீறும் உருத்திராக்கமும், சடாபாரமும் ஆகிய சிவ சின்னங்களைக் கண்டால் உள்ளம் உருகி, வெறுப்பில்லாமல் அவ்வடியவர்களைக் கண்டவிடத்து மகிழ்ந்து அடியார் திருத்தொண்டின் இயல்பினை நினைந்து முகமலர்ச்சியுடன் பார்த்து, கடவுள் வேறு அடியார் வேறு என்று சொல்லி இரண்டாகப் பிரித்து நோக்காது அடியாரை ஆண்டவன் எனவே பேணிக் கொண்டாடி வேறுபாடு கருதாது தொழுகின்ற அடியவர்கள் மனத்தினுள்ளே திருக்கன்றாப்பூர் நடுதறியில் எழுந்தருளியுள்ள கடவுளைக் காணலாம்.

அடியாரைக் கடவுளெனக்கருதி வழிபடவேண்டுமெனக் கூறும் மற்றொரு திருத்தாண்டகம் :—

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்,
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்,
அங்கமெலாங் குறைந்தழுகு, தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்,
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே.

ஆண்டவனை அடைவதற்கு அடியார் கூட்டுறவு வேண்டுமென்பதை விளக்கும் தாயுமானவர் பாடல் :—

அரும்பொனே மணியே யெனன்பே யெனன்பான
அறிவேயெ னறிவிலூறும்

ஆநந்த வெள்ளமே யென்றென்று பாடினேன்
ஆடினே னோடிநாடி
விரும்பியே கூவினே னுலறினேனலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு முனுமுனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
என்று நீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
**தொண்டரொடு கூட்டு கண்டாய்**
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே **சுகவாரியே.** ௯௭

**முற்றிற்று.**

**ஓம்.**